பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 சித்திரை 17 வியாழக்கிழமை (29-04-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:156

### நுவரெலியாவுக்கு அருகில்

# கந்தப்பொலவில் கலவரம்! தமிழர் மீது சூடு; மூவர் பலி!!

### மேலும் பலர் காயம்; கடைகளுக்கும் தீவைப்பு

நுவரெலியா,ஏப்ரல்29

**நுவரெலியாவுக்கு அருகில் மலையகத் தமிழர்கள் அதிகம் வசிக்கும் கந்தப்பொலவில் தமிழருக்கு எதிரான கலவரம் நேற்றுப் பிற்பகல் திடீரென வெடித்தது. நேற்றிரவு வரை தொடர்ந்த இந்தக் கலவரத்தில் சூட்டுக்கு இலக்காகி மூன்று தமிழர்கள் உயிரிழந்தனர்; மேலும் பலர் காயமடைந்தனர்; தமிழர்களுக்குச் சொந்தமான கடைகள் தீயிடப்பட்டன.**

**நகரை அண்டிய தோட்டங்களில் தமிழர்களுக்கு எதிரான வன்முறைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டன.**

கந்தப்பொல நகரில் ஓட்டோக்களை அதிகம் வைத்திருக்கும் தமிழர்களுக்கும், தனியார் பஸ்களை ஓட்டும் சிங்களவர்களுக்கும் இடையில் அவ்வப்போது உரசல்கள் இடம்பெற்று வந்தன. நேற்றுப் பிற்பகல் இருதரப்புக்கும் இடையே வாய்த்தர்க்கம் இடம்பெற்றதாகக் கூறப்படுகின்றது. இதனையடுத்தே மாலையில் தமிழர்களுக்கு எதிரான வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன.

சட்டம், ஒழுங்கைப் பாதுகாக்கும் பொலீஸாருக்கு உதவ இராணுவமும அழைக்கப்பட்டது.

சீருடையினர் ஆங்காங்கே துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர். நேற்று முன்னிரவில் நகரை அண்டிய தோட்டங்களுக்கும் கலவரம் பரவியது. தமிழர்களை இலக்கு வைத்து வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

நகருக்கு அருகில் போர்ட்ஸ்வூட் எஸ்டேட்டில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் ஜெயராமன் (வயது42) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தை அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

அந்த எஸ்டேட்டில் மற்றொருவரும உயிரிழந்தார் என முதல் கிடைத்த

(16ஆம் பக்கம் பார்க்க)

## வெசாக்கை முன்னிட்டு ஆயிரம் கைதிகளுக்கு பொதுமன்னிப்பு

கொழும்பு,ஏப்.29

வெசாக்கை முன்னிட்டு ஆயிரத்துக்கும் மேற்பட்ட கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கப்படவுள்ளது. ஜனாதிபதி மேற்கொண்ட தீர்மானத்துக்கு இணங்க அடுத்த மாதம் 4ஆம் திகதி வரை சிறைத் தண்டனை பெற்றிருக்கும் மூன்று பிரிவுகளைச் சேர்ந்த கைதிகள விடுதலை செய்யப்படுவார்கள்.

மேலும் குடிவரவு - குடியகல்வு சட்டங்களை மீறி கடல் மார்க்கமாக வெளிநாடு செல்ல முனைந்தபோது கைதுசெய்யப்பட்டு தடுப்புக் காவலில்

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஹெல்கிஸன், எரிக் சொல்ஹெய்ம் நாளைமறுதினம் கொழும்புக்கு!

கொழும்பு,ஏப்.29

இலங்கை அமைதி முயற்சிகளில அனுசரணைப் பணியாற்றும் நோர்வேத்தரப்பின் பிரதிநிதிகள் நாளைமறுதினம் கொழும்பு வருகின்றார்கள்.

அந்நாட்டின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிஸன், விசேட அனுசரணையாளர் எரிக் சொல்ஹெய்ம ஆகியோரே கொழும்பு வரும் நோர்வே அணியில் இடம்பெறும் முக்கிய பிரமுகர்களாவர்.

அவர்கள் கொழும்பில் இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, புதிய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் பிரதமரும் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க மற்றும் முக்கிய பிரமுகர்களைச சந்தித்து உரையாடுவர்.

அவர்கள் கிளிநொச்சிக்கும் சென்று புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனையும் சந்தித்துப் பேசுவர் எனத் தெரிகின்றது.

இதேசமயம் -

(16ஆம் பக்கம் பார்க்க)

## கருணாவின் சகாக்கள் தெற்கில் தலைமறைவு!

### நிலைமையை அவதானிக்கிறது பொலீஸ்

கொழும்பு,ஏப்.29

மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களிலிருந்து தப்பிவந்த கருணாவின் நெருங்கிய சகாக்கள் சிலர் தென்னிலங்கையில் பல்வேறு பகுதிகளிலும் பதுங்கியிருக்கிறார்கள் என்று பொலீஸார் கூறுகின்றனர்.

இவர்களைத்தேடி அலையும் விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவினரால் ஆங்காங்கே மோதல்கள வெடிக்கக்கூடிய சாத்தியம் அதிகரித்திருப்பதாகவும் பொலீஸ் தரப்புக்கருதுகின்றது.

நேற்றுமுன்தினம் கொழும்பு மாளிகாவத்தைப் பகுதியில இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் தமிழ் இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டதும், மற்றொருவர் காயமடைநததும்கூட இத்தகைய ஒரு மோதலின் விளைவே என்று பொலீஸ் தரப்புக்கூறுகின்றது.

இவ்விவகாரம் குறித்து கொழும்பு மாவட்டத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலீஸ்மா அதிபர் சிறிசேன ஹேரத தெரிவித்ததாவது:-

விடுதலைப் புலிகளுக்கிடையில் ஏற்பட்ட பிரிவு காரணமாக அதன் பல உறுப்பினர்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் ஊடுருவித் தலைமறைவாகியிருக்கிறார்கள் என்பது விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

மறைவிடங்களில் தங்கியிருக்கும் கருணாவின் தரப்பினரைத் தேடிக் கண்டுபிடிக்கும் முயற்சியிலும் அவர்கள் தொடர்பான விபரங்களைச் சேகரிக்கும நடவடிக்கையிலும் விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவினர் ஈடுபட்டுள்ளனர் எனத் தெரியவந்துள்ளது.

நாட்டின் எந்த மூலையில் வைத்தும் இரு தரப்பினரும் நேரடியாகச் சந்திக்கும்போது மோதல்கள் இடம்

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பியின் அமைச்சர்கள் நேற்றுப் பதவியேற்றனர்!

கொழும்பு,ஏப்.29

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பிரதான பங்காளிக் கட்சியான ஜே.வி.பியின் சார்பில் நியமிக்கப்பட்ட நான்கு அமைச்சர்களும் அதே அமைச்சுக்குரிய நான்கு பிரதி அமைச்சர்களும் நேற்று ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற எளிமையான வைபவத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து தமது பதவிகளை ஏற்றுக் கொண்டனர்.

நேற்றுக்காலை 9.30 மணிக்கு இவ்வைபவம் இடம்பெற்றது.

காணி, விவசாய மற்றும் நீர்ப்பாசன அமைச்சராக அனுர குமார திஸாநாயக்கவும், பிரதி அமைச்சராக விமல ரத்னாயக்கவும் -

கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சராக கே.டி.லால் காந்தவும் பிரதியமைச்சராக சுனில் ஹந்துநெத்தியும் -

மீன்பிடி, கடல்வள அமைச்சராக சந்திரசேன விஜயசிங்கவும், பிரதி அமைச்சராக நிஹால் கலப்பத்தியும் -

(16ஆம் பக்கம் பார்க்க)

## அமைதி நிலவுவதால்தான் எம்மால் இங்குவர முடிந்தது

### நேற்று யாழ்.வந்த அமெரிக்கத் தூதுவர் கருத்து

யாழ்ப்பாணம்,ஏப்.29

நாட்டில் அமைதி நிலவுவதால் தான் நாம் இன்று இங்கு வரமுடிந்தது. அமைதியிருப்பதனால் தான் எம்மால் இங்குள்ள மக்களுக்கும், குடும்பங்களுக்கும், சிறுவர்களுக்கும உதவி புரியக்கூடியதாகவிருக்கிறது.

- இவ்வாறு கூறினார் நேற்று யாழ்ப்பாணம் வருகைதந்த இலங்கையிலுள்ள அமெரிக்கத்தூதுவர் ஜெப்றி ஜே.லுன்ஸ டெட்.

யாழ். போதனா வைத்தியசாலையில் அமெரிக்க மருத்துவ நிபுணர் குழுவினர் இலங்கை மருத்துவர்களுடன் இணைந்து மேற்கொண்டு வரும் மனிதாபிமான சிகிச்சைகளைப் பார்வையிட்டதன் பின் செய்தியாளர்களுடன் உரையாடுகையிலேயே தூதுவர் மேற்கண்ட கருத்தைக்கூறினார்.

யாழ்ப்பாணம் வந்துள்ள அமெரிக்கா இராணுவ மருத்துவ நிபுணர்கள் மக்களுக்கு சேவையாற்றுவதற்குப் பொருத்தமானவர்கள் என்று குறிப்பிட்ட தூதுவர், மேலும் கூறியதாவது:-

இந்த வருகையின் மூலம் இலங்கை அரசுக்கும் மக்களுக்கும் எம்மால் உதவமுடிகிறது. இதனால் சிறுவர்கள் பயனடைகிறார்கள். அவர்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்புகின்றார்கள்.

(16ஆம் பக்கம் பார்க்க)



யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சைகளை வழங்கிவரும் அமெரிக்க இராணுவத்தைச சேர்ந்த வைத்திய அதிகாரிகளை தூதர் ஜெப்றி ஜே.லுன்ஸ் டெட் சந்தித்து கலந்துரையாடுகின்றார். *(மேலும் படங்கள் 2ஆம் பக்கத்தில்)*

## தமிழக படகோட்டிகள் மீது சட்டமா அதிபர் வழக்கு!

### யாழ்.மேல் நீதிமன்றில் தாக்கல்!!

கடந்த வருடம் டிசெம்பர் மாதம் அனலைதீவு, நெடுந்தீவுக் கடற்பகுதிக்குள் அத்துமீறிப் பிரவேசித்ததாக எட்டு தமிழக மீனவப் படகோட்டிகளுக்கு எதிராக யாழ். மேல் நீதிமன்றத்தில் சட்டமா அதிபரால் வழக்குத் தொடரப்பட்டுள்ளது:

இந்த வழக்கு நேற்று மேல்நீதிமன்ற நீதிபதி கே.பி.எஸ்.வரதராஜா முன் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

அச்சமயம், மேற்படி 8 சந்தேகநபர்களுக்குமான குற்றப்பத்திரங்கள் கையளிக்கப்பட்டன.

அதையடுத்து வழக்கு விசாரணை அடுத்தமாதம் 12ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. அதுவரை எண்மரையும் விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார். (எ-3-ரி)

## பிக்குகளுக்கு எதிரான விசமப் பிரசாரத்துக்கு ஐ.தே.கட்சியும் ஹெல உறுமயவுமே காரணம்

நாட்டின் பல பகுதிகளிலும் உள்ள பௌத்த விகாரைகளில் இடம்பெற்றுள்ள கசப்பான சம்பவங்கள் மற்றும் பௌத்த பிக்குகளுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் விசமப் பிரசாரங்களின் பின்னணியில் ஐ.தே.கட்சியும் அதன் கூட்டாளியான ஜாதிக ஹெல உறுமயவுமே உள்ளன என்று ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.

கூட்டமைப்பின் செயலாளரும் அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த மற்றும் அதன் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நந்தன குணதிலக ஆகியோர் கையொப்பமிட்டு வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்தக் குற்றச்சாட்டுத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

'அண்மைக்காலமாக நாட்டின் பல பகுதிகளிலும் பௌத்த விகாரைகளின் அருகில் நடந்த சம்பவங்கள், பௌத்த பிக்குகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட விசமப்பிரசாரங்கள் போன்றவற்றின் சூத்திரதாரிகள் ஐக்கிய மக்கள

(16ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்



நேற்று யாழ். வருகைதந்த அமெரிக்கத் தூதர் ஜெப்ரி ஜே.லுன்ஸ்டெட், டாக்டர் அ.தயாளன் சகிதம் ஆஸ்பத்திரியைச் சுற்றிப் பார்வையிடுவதையும், குழந்தை ஒன்றுக்கு சத்திர சிகிச்சைக் கூடத்தில் அமெரிக்க டாக்டர் குழுவினர் சிகிச்சை அளிப்பதையும், அமெரிக்க டாக்டர் ஒருவர் சிறுமி ஒருவருக்குச் சிகிச்சை அளிப்பதையும் படங்களில் காணலாம்.
(படங்கள்: அலுவலகப் படப்பிடிப்பாளர்)

# பாதுகாப்பு வலய மக்களையே மீளக்குடியமர்த்த வேண்டியுள்ளது

## அமெரிக்கத் தூதரிடம் அரச அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.29

குடாநாட்டில் பாதுகாப்பு வலயப் பிரதேசத்தில் இருந்து இடம்பெயர்ந்தவர்களை மீளக்குடியமர்த்த வேண்டிய நிலையே உள்ளது ஏனைய மக்கள் தமது இருப்பிடங்களுக்குத் திரும்பிவிட்டனர்.

யாழ். வந்த அமெரிக்கத் தூதர் ஜெப்ரி. ஜே.லுன்ஸ்டெட்டிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார் யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன்.

யாழ். செயலகத்தில் தூதர் அரச அதிபரைச் சந்தித்து யாழ். மாவட்டத்தின் தற்போதைய நிலைமை, அழுத்தங்கள் இன்றிப் பணியாற்றல் தொடர்பாகக் கேட்டறிந்தார்.

"கடந்த சில தினங்களுக்கு முன் நான் ஜனாதிபதியைச் சந்தித்த சமயம வடக்கு மீள்குடியமர்வு பற்றி எடுத்துக்கூறினேன். தான் மீள்குடியமர்வு விவகாரத்துக்கு முன்னுரிமை வழங்குவதாக அவர் என்னிடம் கூறினார்" என்று தூதர் அரச அதிபரிடம் தெரிவித்தார்.

மீள் குடியமர்வின் தற்போதைய நிலைபற்றி அரச அதிபரிடம் தூதர் கேடடார். அதற்குப் பதில் அளித்த அரச அதிபர்:-

"குடாநாட்டில் பாதுகாப்பு வலயம அமைந்துள்ள பிரதேச மக்கள் மட்டுமே மீளக்குடியமர வேண்டிய நிலையில் உள்ளனர். ஏனைய பகுதி மக்கள் தமது இடங்களில் மீளக் குடியமர்ந்துவிட்டனர்.

பாதுகாப்பு வலயம் தொடர்பாக அரசும் - விடுதலைப் புலிகளும் பேச்சு நடத்தி வந்தன. அவர்கள்தான் அது பற்றி முடிவுசெய்யவேண்டும். அந்த விடயம் பற்றி நாம் இப்போது எதுவும் பேசுவதற்கில்லை" - என்று அரச அதிபர் கூறினார்

இந்த மக்களை மீளக் குடியமர்த்த நிதியும் பெரும் அளவில் தேவை என்றும் அரச அதிபர் சுட்டிக்காட்டினார்.

அமெரிக்கத் தூதர் நேற்று நண்பகல் யாழ். நாடாளுமன்ற உறுப்பினர்கள், நீதித்துறையினர் ஆகியோரைச சந்தித்தார்.

யாழ். நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா, சட்ட உதவி நிலையத் தலைவர் செல்வி சாந்தா அபிமன்னசிங்கம் ஆகியோர நீதித்துறைபற்றி எடுத்துக்கூறினர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான என். ரவிராஜ், ஜி.ஜி.கஜேந்திரகுமார், எஸ்.கஜேந்திரன் ஆகியோர் அரசியல் நிலை குறித்து விளக்கமளித்தனர்.

அமெரிக்காவில் விடுதலைப் புலிகள் அமைப்பு மீதான தடையை நீக்க வேண்டும் என்று சட்டத்தரணி அபிமன்னசிங்கம் கோரிக்கை விடுத்தார்.

சிறுவர்களை இயக்கத்தில் இணைப்பதில்லை என்றும் -

ஏனைய தமிழ் இயக்கங்களை ஜனநாயக வழியில் செயற்பட அனுமதிப்பது என்றும் விடுதலைப் புலிகள் உறுதிமொழி தந்தால், அந்த அமைப்பு மீதான தடையை நீக்குவது குறித்துப பரிசீலிக்கலாம் - என்று தூதர் பதில அளித்தார். (எ-3)

# கடத்திய வர்த்தகரை விடுவிக்க ரூபா 75 லட்சம் கப்பம் அறவீடு

## பாதாள உலகக் குழு கொழும்பில் கைவரிசை!

கொழும்பில் கடத்திச் செல்லப்பட்ட தேயிலை வியாபாரி ஒருவர் 75 லட்சம் ரூபா கப்பம் கொடுக்கப்பட்டபின் மீட்கப்பட்டார் எனக் கூறப்படுகிறது.

வத்தளை அல்விஸ் டவுன் பகுதியில் வசிக்கும் பிரபல தேயிலை வியாபாரியான என்.எம்.சுபையீர் என்பவரே நான்கு தினங்களுக்கு முன்னர் பாதாள உலக நபர்கள் என்று கருதப்படுவோரால் கடத்திச் செல்லப்பட்டார்.

அவரை விடுவிப்பதற்கு 75 லட்சம ரூபா கப்பம் தமக்குத் தரும்படியும் -

இல்லையெனில் அவரைக் கொலை செய்து விடுவோம் எனவும் -

அவரது குடும்பத்தினருக்கு அநாமதேய தொலைபேசி அழைப்புக்கள் கடத்தல்காரர்களிடமிருந்து கிடைத்திருக்கின்றன.

இவ்விடயம் தொடர்பாகப் பொலீஸாருக்குத் தகவல் கொடுத்தால் அவரது குடும்பத்தினரையும் கொன்றொழிப்போம் என்று தொடர்ந்தும் மிரட்டல்கள் விடுக்கப்பட்டன.

கடத்தல்காரர்களின் மிரட்டல்களை அடுத்து குடும்பத்தினர் 75 லட்சம் ரூபா பணத்துடன் கொழும்பு மனிங் சந்தைப் பகுதியில் குறிப்பிட்ட இடத்துக்குச் சென்ற போதும் கடத்தல் காரர்கள் பணத்தைப் பெற்றுக் கொள்ளவில்லை. பின்னர் களனிப் பாலத்துக்கு அருகில் குறிப்பிட்ட இடத்தில் வைத்து பணத்தைப் பெற்றுக்கொண்ட பின்பு அவரை நேற்றுமுன்தினமிரவு அவர்கள் விடுதலை செய்துள்ளனர் என்று கூறப்படுகின்றது.

இந்தக் கடத்தல் விவகாரம் பற்றிப பொலீஸார் தெரிவித்ததாவது:-

மாளிகாவத்தையில் இயங்கும் பாதாள உலகக் கோஷ்டியினரே இந்தக் கடத்தல் சம்பவத்தில் ஈடுபட்டுள்ளனர் என்று கருதுகிறோம். இப்பகுதியில் வசிக்கும் வர்த்தகர் ஒருவர் இந்தக் கடத்தல் விவகாரத்துடன் சம்பந்தப்பட்டிருப்பது விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது - என்றார்.(ஐ-3)

# மெதடிஸ்த சிறுவர் இல்ல பணியாளர் விளக்கமறியலில்

## பிணைமனு நிராகரிப்பு

யாழ். நகரில் வேம்படிப் பகுதியில அமைந்துள்ள மெதடிஸ்த தேவாலய சிறுவர் பராமரிப்பு இல்லத்தின் உதவிக்காப்பாளரை அடுத்த மாதம் 12ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு யாழ்.நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறிப்பிட்ட மெதடிஸ்த தேவாலய சிறுவர் பராமரிப்ப இல்லத்தில் தங்கியிருந்த இரு சிறுவர்களை தகாத முறையில் ஓரினச் சேர்க்கையில் ஈடுபடுத்த முயன்றார் என்ற சந்தேகத்தின்பேரில் சொலமன் வின்சன் (வயது-35) என்பவா கடந்த 14ஆம் திகதி யாழ்.பொலீஸாரால் கைது செய்யப்பட்டு யாழ்.நீதிமன்றப் பணிப்பின் பிரகாரம் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

இது தொடர்பான வழக்கு விசாரணை நேற்று யாழ்.நீதிமன்றில் மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன முன்னிலையில் நடைபெற்றது.

சந்தேகநபரைப் பிணையில் விடுவிக்குமாறு சமர்ப்பிக்கப்பட்ட மனுவை நிராகரித்த நீதிவான் குறிப்பிட்ட நபரை அடுத்த மாதம் 12ஆம் திகதி வரை யாழ். சிறையில் தடுத்து வைக்கும்படி உத்தரவிட்டார். (எ-7)

# அதிரடிப்படையின் பிடியில் இருந்தவர்

# 18 வருடங்களின் பின்னர் உயிருடன் வீடு திரும்பினார்

களுவாஞ்சிக்குடியில்வைத்து 18 வருடங்களுக்கு முன்னர் படையினரால் கைதுசெய்யப்பட்ட குடும்பஸ்தர் ஒருவர் அவர்களின் பாதுகாப்பில் இருந்து தப்பிச் சென்றுள்ளார்.

உயிரிழந்துவிட்டார் என்று படைதரப்பால் தெரிவிக்கப்பட்டிருந்த மடடகளப்பு, சித்தாண்டி முருகன் கோவில் வீதியைச் சேர்ந்த கனகரட்ணம் சண்முகநாதன் என்ற குடும்பஸ்தரே இவ்வாறு படையினரின் காவலில் இருந்து தப்பிச் சென்றுள்ளார். 1986 ஆண்டு, விஷேட அதிரடிப்படையினரால் களுவாஞ்சிக்குடி சோதனைச் சாவடியில் வைத்துக் கைதுசெய்யப்பட்ட இந்நபர், தான் தடுத்துவைக்கப்பட்டிருந்த இடத்தில் மேலும் பலர் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

1990ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம 5ஆம் திகதியன்று கிழக்குப் பல்கலைக்கழக அகதிமுகாமில் வைத்து படையினரால் கடத்திச்செல்லப்பட்ட 158பேரில் மூவர் உயிருடனிருப்பதாக தப்பிவந்த நபர் தெவித்துள்ளார்.

கொம்மாந்துறையைச் சேர்ந்த நாகலிங்கம் அருளானந்தராசா, கண்டுமணியோகேஸ்வரன், சிகாமணி புவிக்கமலன் ஆகிய மூவருமே தான் தடுத்து வைக்கப்பட்டிருந்த இடத்தில் இருப்பதாக அந்நபர் மேலும் கூறியுள்ளார்.

தப்பிச் சென்ற நபர் குடும்பத்தினரைத்தேடிச்சென்ற போது, அவரது மனைவி ஏற்கனவே இறந்துபோயுள்ளார். அவரது பிள்ளைகளாலோ மற்றும் ஊரவர்களாலோ அவரை இனங்காண முடியவில்லை. (9-ரி)

# வடமேல் மாகாண ஆளுநர் நியமனம்

கொழும்பு,ஏப்.29

வடமேல் மாகாணசபை ஆளுநராக தர்மதாசவன்னியாராய்ச்சி நியமிக்கப்பட்டுள்ளார். ஜனாதிபதி முன்னிலையில் நேற்று முன்தினம் இவர் பதவிப்பிரமாணம் செய்துகொண்டார.

1977ஆம் ஆண்டில் ஐக்கிய முன்னணி அரசில் கைத்தொழில், விஞ்ஞான அமைச்சராக அவர் கடமையாற்றியுள்ளார். மேலும் சப்ரகமுக மாகாண சபையில் 1993ஆம் ஆண்டு எதிர்க்கட்சித் தலைவராகவும் இருந்துள்ளார். (ஐ-ரி)

# ஜி.சீ.ஈ. உயர்தரப்பரீட்சைக்கு 250,000 பேர் தோற்றுவர்

கொழும்பு,ஏப்.29

கல்விப் பொதுத் தராதரப்பத்திர உயர்தரப்பரீட்சை அடுத்த மாதம் 6 ஆம் திகதி ஆரம்பமாகும் என்று பரீட்சை ஆணையாளர்நாயகம் டபிள்யூ.வி.ஏ. மஹிந்த விஜயசிறி தெரிவித்துள்ளார்.

ஒரு லட்சத்து 98 ஆயிரம் பாடசாலை மாணவர்கள் உட்பட 2 லட்சத்து 50 ஆயிரம் பரீட்சார்த்திகள் இப்பரீட்சையில் தோற்றவுள்ளனர். ஆயிரத்து 767 நிலையங்களில் பரீட்சைகள் நடைபெறும்.

பரீட்சை அனுமதி அட்டைகளும் கால அட்டவணைகளும் பாடசாலை அதிபர்களுக்கு ஏற்கனவே அனுப்பபட்டுள்ளன என்று அவர் தெரிவித்தார்.

இருந்தபோதும், எந்தவிதமான் ஆவணங்களும் இதுவரை தமக்குக் கிடைக்கவில்லையென சில பாடசாலை அதிபர்கள் முறைப்பாடு தெரிவித்துள்ளனர். அவ்வாறானவர்களைப் பரீட்சைத் திணைக்களத்துடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளுமாறு பரீட்சை ஆணையாளர்நாயகம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ஐ-ரி)

(மற்றொரு செய்தி 15ஆம் பக்கத்தில்)

# ஊவா, மத்திய மாகாண சபைகளுக்கு வேட்புமனுக் கோரி அறிவித்தல்

மத்திய மற்றும் ஊவா மாகாண சபைகளுக்கான தேர்தலுக்கு வேட்புமனுக்களைக் கோருவதென தேர்தல் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இந்த மாகாணசபைகளின் உத்தியோகபூர்வ பதவிக்காலம் கடந்த 25 ஆம் திகதியுடன் முடிவடைந்துள்ளது.

எனவே, பதவிக்காலம் முடிவடைந்த ஒரு வாரகாலத்துக்குள் வேட்பு மனுக்களைக் கோருவதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட வேண்டும் என சட்டம் கூறுகின்றது என்று உதவித் தேர்தல் ஆணையாளர் கே.சேனாநாயக்க தெரிவித்தார்.

இன்று அல்லது நாளைக்குள் சம்பந்தப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை, வடக்கு - கிழக்கு மாகாண சபையையும் தற்போது தேர்தல் நடந்து முடிந்த வடமேல் மாகாணசபையையும் தவிர்ந்து எஞ்சியுள்ள அனைத்து மாகாணசபைகளுக்கான தேர்தல்களை ஒரே தினத்தில் நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# பூநகரி வைத்தியசாலையின் புனரமைப்புப் பணிகள் துரிதம்

கிளிநொச்சி பூநகரி சுற்றயல்கூறு வைத்தியசாலை துரித கதியில் புனரமைக்கப்பட்டுவருகிறது.

1991ஆம் ஆண்டு இலங்கை இராணுவத்தினர் மேற்கொண்ட 'வலம்புரி' படை நடவடிக்கையின்போது முற்றாக இந்த வைத்தியசாலை சேதமடைந்தது.

இந்த வைத்தியசாலை தற்போது மீள இயங்கவைக்கும் நோக்குடன் புனரமைக்கப்பட்டுவருகிறது.

இந்த வைத்தியசாலை இயங்காததால் மீளக்குடியமர்ந்த மக்கள் தமது மருத்துவத் தேவைகளை நிவர்த்தி செய்ய கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு அல்லது முழங்காவில் வைத்தியசாலைக்குச் செல்லவேண்டியுள்ளது. இதனால் அவர்களுக்குப் பண விரயம், போக்குவரத்துச் சிரமம் என்பன ஏற்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-12)

# பிரதி சபாநாயகர் பதவிக்கு ஆறுமுகன் தொண்டமான்?

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் ஆறுமுகன் தொண்டமானை பிரதி சபாநாயகர் பதவிக்கு நிறுத்துவதற்கு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி தீர்மானித்திருப்பதாக அறியவருகிறது.

தமது அரசுக்கு அறுதிப் பெரும்பான்மைப்பலம் இல்லாத நிலையில், அதைப் பெறுவதற்காக இ.தொ.காவின் பக்கம் அரசுத்தரப்பு வலைவீசி வரும நிலையில், பிரதி சபாநாயகர் பதவிக்கு ஆறுமுகன் தொண்டமானை நிறுத்துவதன் மூலம் அரசுத் தரப்புக்கு நெருக்கடியைக்கொடுக்கலாம் என ஐ.தே.கட்சி வட்டாரங்கள் கருதுவதாகக் கூறப்படுகின்றது.

இந்தத் தொங்கு நாடாளுமன்றத்தில் இ.தொ.காங்கிரஸ் எம்.பிக்களின் பங்களிப்பு முக்கியமானதாகக் கருதப்படும் தற்போதைய சூழ்நிலையில் இ.தொ.கா. தலைவர் ஆறுமுகன் தொண்டமான் பிரதி சபாநாயகர் பதவிக்கு நிறுத்தப்பட்டால் அவரைப் பகைத்துக கொள்ளும் விதத்தில் அவருக்குப் போட்டியாக அரசுத் தரப்பு தான் ஒரு வேட்பாளரை நிறுத்தாது என்று அரசியல் நோக்கர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதேசமயம் -

ஐ.தே.கட்சின் பிரதித் தலைவர் கரு ஜெயசூரிய மற்றும் மிலிந்த மொறகொட ஆகியோர் ஓரிரு தினங்களுக்கு முன்னர் ஜாதிக ஹெல உறுமயவின் பிக்கு எம்.பிக்களைச் சந்திதது, சபாநாயகர் பதவிக்கு ஆறுமுகன் தொண்டமானை நிறுத்துவது தொடர்பான தமது தீர்மானத்தை அவர்களுக்குத் தெரியப்படுத்தினார் என்று இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டது.

ஆனால், ஜாதிக ஹெல உறுமயவின் பிக்கு எம்.பிக்களோ தங்களின் ஊடகச் செயலாளரான வண. அத்துரலிய ரத்ன தேரரை அப்பதவிக்குப் பிரேரிக்கத் தீர்மானித்திருக்கிறார்கள் என்று கூறப்படுகின்றது.

எதிர்வரும் 18ஆம் திகதி நாடாளுமன்றம் கூடும்போது பிரதி சபாநாயகர் மற்றும் குழுக்களின் தலைவர் போன்ற பதவிகளுக்குகான தேர்வுகள இடம்பெறவிருக்கின்றன.

சபாநாயகர் தேர்வில் எதிர்க்கட்சி வேட்பாளரே வென்றது போல பிரதி சபாநாயகர் தெரிவிலும் எதிர்க்கட்சி வேட்பாளரே வெல்லக் கூடிய சாத்தியம் இருப்பதாகக் கருதப்படுகிறது. (ஐ)

# தாய்லாந்தின் தென் பகுதியில் கலகக்காரர்கள் 90 பேர் பலி!

## பொலீஸ் நிலைகளைத் தாக்க முயன்றபோது சம்பவம்

பாங்கொக்,ஏப்.29

தாய்லாந்தின் தெற்குப் பிரதேசத்தில் பொலீஸ நிலைகளைத் தாக்கிக் கைப்பற்ற முயன்ற இஸ்லாமிய ஆயுததாரிகளுக்கும் அரச படையினருக்கும் இடையில் நடைபெற்ற மோதல்களில் 95 இற்குழ் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டனர். அவர்களில் பெரும்பாலானோர் ஆயுததாரிகள் என்று கூறப்படுகிறது.

இந்தப் பிரதேசத்தில் உள்ள பொலீஸ் நிலைகளை ஒரே நேரத்திற் கைப்பற்றும் நன்கு திட்டமிட்ட தாக்குதலை ஆயுததாரிகள் மேற்கொண்டனர். இஸ்லாமிய ஆயுததாரிகளே இதனை நடத்தினார்கள் என்று சந்தேகிக்கப்படுகின்றது.

இது உள்ளூர் ஆயுதக் கடத்தல் கோஷ்டிகளாலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று பிரதமர் தாக்ஸின் சின்வாத்ரா குற்றஞ்சாட்டினார். ஆனால், இஸ்லாமியப் பிரிவினவாதிகளால் பயிற்றப்பட்ட சண்டையாளர்களே தற்போதைய மோதல்களுக்குக் காரணம் என்று அதிகாரிகள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

கடந்த ஜனவரி மாதம் இந்தப் பிராந்தியத்தில் அரச படையினர், ஆயுததாரிகளுக்கு எதிரான தேடுதல் நடவடிக்கைகளை மேற் கொண்டிருந்தனர். அதன் தொடர் நிகழ்வே தற்போதைய தாக்குதல்கள் என்று கூறப்படுகின்றது. இடைப்பட்ட இந்தக் காலப்பகுதியில் அடிக்கடி நடந்த சிறுசிறு தாக்குதல்களில் 100இற்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டனர்.



மோதல் நடந்த இடம்

புதன்கிழமையன்று மூன்று முக்கிய இடங்களில் ஒரே நேரத்தில் பொலீஸ் நிலைகள் மீது தாக்குதல்கள் ஆரம்பிக்கப்பட்டன. யால, பட்டானி, சொங்கல ஆகிய இடங்களில் உள்ள நிலைகளே தாக்கப்பட்டன.

இந்தத் தாக்குதல்கள் குறித்த உளவுத் தகவல்கள் முன்னரேயே படையினருக்குக் கிடைத்திருந்ததால் அவர்கள் அதனை எதிர் பார்த்துத் தயார் நிலையில் இருந்தனர்.

யாலவில் தாக்குதல் நடத்தியவர்களில் அதிகமானவர்கள் குறைந்த வயதுடையவர்கள என்று பொலீஸார் தெரிவிக்கின்றனர். அவர்களில் சிலர் பகுதித்தானியங்கி ஆயுதங்களை வைத்திருந்தனர்.

பொலீஸாரும் படையினரும் தமது நிலைகளைக் கிராமப் புறங்களுக்கும் விஸ்தரிப்பதையும் காயமடைந்த எல்லைப் படையினர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்படு வதையும் உள்ளூர் தொலைக்காட்சிகள் ஒளி பரப்பின.

உயிரிழந்தவர்களின் 90 பேர் வரையானோர் கலகக்காரர்கள் என்றும் நால்வர் மட்டும் படையினர் என்றும் அதிகாரிகள் கூறினர்.

கலகத்தில் ஈடுபட்ட இளைஞர்கள் நாட்டின் தெற்குப் பகுதியில் இருந்துவந்தவர்கள் என்றும் அவர்களுக்கும் சர்வதேச தீவிரவாதிகளுக்கும் தொடர்புகள் இல்லை என்றும் கூறப்படுகின்றது. (க)

### டமாஸ்கஸில் துப்பாக்கிச் சண்டை!

டமாஸ்கஸ்,ஏப்.29

சிரியாத் தலைநகர் டமாஸ்கஸ்ஸில் ஆயுததாரிகளுக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் இடையில் துப்பாக்கிச் சண்டை நடந்துள்ளது. இதில் ஒருவர் கொல்லப்பட்டார். காயமடைந்த மற்றொருவர் கைதுசெய்யப்பட்டார். ஐ.நாவின் அலுவலகம் ஒன்று தாக்குதலுக்கு இலக்கானதை அடுத்தே இந்தச்சண்டை நடந்துள்ளது.

தலையை உருமறைப்புச் செய்தபடி வந்த ஆயுததாரிகள் ஐ.நாவின் முன்னால் அலுவலகக் கட்டடம் மீது ஆர்.பி.ஜி.தாக்குதலை மேற்கொண்டனர். தாக்குதல் நடத்தியவர்களில் மூவர் கார் ஒன்றில் தப்பிச்சென்றுள்ளனர். இந்தத் தாக்குதலில் 7 தீவிரவாதிகள் ஈடுபட்டனர் என்று டமாஸ்கஸ் அதிகாரிகள் கூறுகின்றனர். தாக்குதல் இடம்பெற்ற பகுதியில் பல வெளிநாட்டுத்தூதரக வளாகங்களும் அமைந்துள்ளன.

இந்த மோதலில் பாதுகாப்புப்படையைச் சேர்ந்த ஒருவர் கடும் காயங்களுக்கு உள்ளானார். யார் இந்தத் தாக்குதலை நடத்தினார்கள் என்பது தொடர்பாக டமாஸ்கஸ் அதிகாரிகள் விரிவான விசாரணைகளை நடத்தி வருகின்றனர். அல்-கெய்டா அமைப்புக்கும் இந்தத் தாக்குதலுக்கும் தொடர்பு இருக்கலாம் என்று அவர்கள் நம்புகின்றனர். (க)

## இந்தியத் தேர்தலில் புதிய திருப்பம்

இந்திய நாடாளுமன்றத்தேர்தலில் மொத்தமுள்ள 543 மக்களவைத் தொகுதிகளில் பாதிக்கு மேற்பட்ட (276) தொகுதிகளில் தேர்தல் நடந்திருக்கும் நிலையில், அது தொடர்பான வாக்குக் கணிப்பு முடிவுகளால் அரசியல் களத்தில் புதிய திருப்பமும் பரபரப்பும் உருவாகிவருகிறது.

எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை பலம் (272 இடங்கள்) கிடைக்காது என்ற நிலை உருவாகிவருவதால், பாரதீய ஜனதா கட்சி தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியும் காங்கிரஸ் கட்சியும் தேர்தலுக்குப்பின் புதிய கட்சிகளைத் தமது அணிக்கு இழுக்க இப்பொழுதே நடவடிக்கையில் இறங்கிவிட்டன.

'எங்கள் அணிக்கு நிச்சயம் பெரும்பான்மை பலம் கிடைக்கும்' என்று பா.ஜ.க.கூட்டணியும் காங்கிரஸ் கட்சியும் வெளிப்படையாகக் கூறிக் கொண்டு இருந்தாலும் கூட, யதார்த்த நிலையை இரு அணியினருமே கருத்தில் கொண்டுள்ளனர்.

இதே நேரத்தில், வாக்குக்கணிப்பு முடிவுகளால் உற்சாகமடைந்துள்ள காங்கிரஸ் கட்சி, தமது தலைமையிலான மதச்சார்பற்ற அணிக்கு நிச்சயம் பெரும்பான்மை கிடைக்கும் என்று குறிப்பிட்டுள்ளது.

இப்புதிய அரசியல் சூழ்நிலையில் உற்சாகம் அடைந்துள்ள மற்றொரு அணி மூன்றாவது அணியாகும். 1996இல் ஏற்பட்டதைப் போன்று, எக்கட்சிக்கும் பெரும்பான்மை இல்லாத நிலை ஏற்படும் என்று இடதுசாரிக் கட்சிகள் கருதுகின்றன. எனவே, பா.ஜ. அணி, காங்கிரஸ் அணி இரண்டையும் சேராத கட்சிகளின் பலம் அதிகரித்தால், அவற்றைக்கொண்டு, காங்கிரஸின் ஆதரவையும் பெற்று, மாற்று அரசை அமைப்பது குறித்து அக்கட்சிகள் பேசத் தொடங்கியிருக்கின்றன. (ஒ)

## பிறந்த நாள் விழா கொண்டாடினார் சதாம்

பக்தாத்,ஏப்.29

பேரழிவு ஆயுதங்கள் தயாரித்தார் என்று கூறி ஈராக் மீது படை எடுத்த அமெரிக்கா சதாம் ஹுசைன் ஆட்சியை வீழ்த்தியது. சதாமை தீவிர தேடுதல் வேட்டைக்குப்பிறகு அவரது சொந்த ஊரான திக்ரித் நகரில் உள்ள பண்ணை வீட்டில் அமெரிக்கப்படையினர் கைது செய்தனர்.

அவரை இரகசிய இடத்தில் வைத்து அமெரிக்கப்படை விசாரித்து வருகிறது. ஆனாலும் அவரிடம் இருந்து பேரழிவு ஆயுதங்கள் பற்றிய எந்தத்தகவலும் அமெரிக்கப்படையினரால் திரட்ட முடியவில்லை.

இந்த நிலையில் சதாம் தனது 67 ஆவது பிறந்த நாளை கொண்டாடியுள்ளார். ரகசிய இடத்தில் அமெரிக்கப் படையினரிடம் காவலில இருந்து கொண்டே தனத பிறந்தநாளை அவர் எளிமையாக கொண்டாடினார்.

அவரைச்சந்திக்க அனுமதிக்குமாறு சர்வதேச செஞ்சிலுவைச்சங்கத்தினர் அமெரிக்கப் படையினருக்குக் கோரிக்கை விடுத்திருந்தனர். இதை அமெரிக்கப் படை ஏற்றுக்கொண்டு சதாமை சந்திக்க செஞ்சிலுவைச்சங்கத்தினருக்கு அனுமதி அளித்தது.

இதைத்தொடர்ந்து செஞ்சிலுவைச்சங்கத்தினர் சதாமை சந்தித்து அவருக்குப் பிறந்த நாள் வாழ்த்துத் தெரிவித்தனர். அவருக்குப் பிறந்த நாள் பரிசாக பழங்களையும் கொடுத்தனர்.

ஏற்கனவே கடந்த பெப்ரவரி மாதம் செஞ்சிலுவை சங்கத்தினர் சதாமைச் சந்தித்து பேசி இருக்கின்றனர். (ஒ)



**இஸ்ரேல் சுதந்திரம் பெற்று 56 ஆண்டுகள் ஆகின்றன. 56ஆவது சுதந்திர தினத்தையொட்டி கடந்த 2 நாள்களாக இஸ்ரேல் முழுவதும் கோலாகலக் கொண்டாட்டங்கள் நடைபெற்றன. இந்த 56ஆண்டுகளில் இஸ்ரேல் முழுவதும் 21ஆயிரத்து 781ராணுவ வீரர்கள் மற்றும் பொலீஸார் உயிரிழந்திருக்கிறார்கள். தீவிரவாதிகளின் வன்முறைத் தாக்குதலுக்குப் பலியானவர்கள் இவர்கள்.**

**இவர்களில் ஏராளமான பெண் பொலீஸாரும் உள்ளனர். பலியான இராணுவத்தினருக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி ஜெருசலேம் நகரில் நடைபெற்றது. உயிர்நீத்த வீரர்கள் நினைவிடத்தில் பெண் இராணுவ வீரர்கள் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்கள்.**

## ஜெயலலிதா மீது கல் வீச்சு!

திருநெல்வேலி,ஏப்.29

தமிழகத்தின் திருநெல்வேலி மாவட்டம், வாசுதேவ நல்லூரில் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை முதல்வர் ஜெயலலிதா பேசிக்கொண்டிருந்த போது அவரது 'ஜீப்' வாகனத்தின் மீது கல்வீசித்தாக்கப்பட்டது.

தென்காசித் தொகுதி அ.தி.மு.க. வேட்பாளர் முருகேசனுக்கு வாக்குக் கேட்டு வாசுதேவ நல்லூர் கடைவீதியில் முதல்வர் ஜெயலலிதா தனது வாகனத்தில் இருந்தபடியே பேசிக் கொண்டிருந்தார்.

அப்போது முதல்வர் ஜெயலலிதாவின் வாகனத்தின் மீது ஒரு பகுதியிலிருந்து கல் வீசப்பட்டது. இதனையடுத்து ஜெயலலிதா ஒலிபெருக்கி மூலம் கல்வீசியது யார்? எனப் பாருங்கள் என்று பொலீஸாரிடம் கூறினார்.

கல் வீசிய திசையை நோக்கி பொலீஸார் விரைந்து சென்று தேடிப்பார்த்தனர். ஆனால், யாரும் பிடிபடவில்லை.

பின்னர் தொடர்ந்து புளியங்குடி, சொக்கம் பட்டி, கடையநல்லூர் பகுதிகளில் முதல்வர் பிரசாரத்தில் ஈடுபட்டார். (ஒ)

## சோனியாவின் வயது என்ன?

புதுடில்லி,ஏப்.29

இந்தியக்காங்கிரஸ் கட்சியின் தலைவி சோனியா காந்தியின் வயது ஐம்பதா அல்லது ஐம்பத்தியெட்டா என்பதில் தேர்தல் அதிகாரிகளிடையே குழப்பம் ஏற்பட்டது.

தேர்தல் ஆணையகத்தில் பெற்ற தகவல்களைக் கொண்டு, வேட்பாளர் பட்டியல் குறித்து மத்திய தகவல் மையம் வெளியிட்ட புத்தகத்தில், சோனியா காந்தியின் வயது 50 எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

அதே புத்தகத்தில் அவரது மகன் ராகுல் காந்தியின் வயது 33 எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. குஜராத்தில் இருந்து பத்திரிகை தகவல் மையத்தின் அதிகாரி ஒருவர் டில்லியில் உள்ள அதிகாரிகளைத்தொடர்பு கொண்டு, ராகுலின் வயது 33, சோனியா காந்தியின் வயது 50 என்றால், சோனியாவுக்கு 17 வயதிலேயே திருமணம் ஆகிவிட்டதா? என்று சந்தேகம் எழுப்பினார்.

இதையடுத்து, சோனியா போட்டியிடும் ரேபரேலி தொகுதி தேர்தல் அதிகாரியிடம் மீண்டும் இதுபற்றி விவரம் கேட்கப்பட்டது. சோனியாவின் வயது 58 எனத் தெரிவித்தார் அதிகாரி.

இதைத் தொடர்ந்து, சோனியாவின் வயதை 58 எனத் திருத்தி புதிய அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இதனையடுத்தே சோனியாவின் வயதில் ஏற்பட்ட குழப்பம் இப்போதைக்கு முடிவுக்கு வந்துள்ளது. (ஒ)

## பா.ம.கவை தோற்கடிக்க ரஜனி ரசிகர் முழு முயற்சி

சென்னை,ஏப்.29

நாடாளுமன்றத் தேர்தலில் தமிழகத்தில் பாட்டாளி மக்கள் கட்சி போட்டியிடும் 6 தொகுதிகளிலும் அக்கட்சியை தோற்கடிக்க ரஜனிகாந்த் ரசிகர்கள் முழு மூச்சுடன் முயற்சித்து வருகின்றனர்.

அந்தத் தொகுதிகளில் வசிக்கும் ரஜனிகாந்த ரசிகர்கள் ரஜனி படத்துடன் கூடிய சுவரொட்டிகளை ஒட்டி வருகிறார்கள். அவர்கள் அ.தி.மு.க. - பாரதீய ஜனதா கூட்டணியை ஆதரித்தும் பா.ம.கவை எதிர்த்தும் வாசகங்கள் எழுதி விளம்பரம் செய்கிறார்கள். துண்டு பிரசுரங்களும் விநியோகிக்கின்றனர். ரஜனி ரசிகர் மன்ற தலைவர் சத்திய நாராயணா 6 தொகுதிகளிலும் மின்னல் வேக சுற்றுப்பயணம் செய்து தேர்தல் பணிகளை நேரில் பார்வையிட்டு வருகிறார். அனைத்துத் தொகுதிகளிலும் ரசிகர்களின் பிரசாரத்தை முடுக்கி விட்டுள்ளார்.

பா.ம.க. போட்டியிடும் புதுவை, தர்மபுரி, செங்கல்பட்டு, திண்டிவனம், சிதம்பரம், அரக்கோணம் ஆகிய தொகுதிகளில் அவர் சுற்றுப் பயணம் செய்து ரசிகர்களுடன் ஆலோசனை நடத்தி வருகிறார்.

இதற்கிடையில் 6 தொகுதிகளைச் சேர்ந்த ரசிகர்களை ரஜனிகாந்த் சென்னைக்கு அழைத்து ஆலோசனை நடத்த முடிவு செய்துள்ளார். (ஒ)

## மோனலிஸா ஓவியம் சேதமடைகிறது!

பரிஸ்,ஏப்.29

உலகப் புகழ்பெற்ற ஓவியர் லியனா டோடாவின்ஸி வரைந்த மோனலிஸா ஓவியம் தற்போது சேதமடைய ஆரம்பித்திருக்கிறது என்று அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

500ஆண்டுகள் பழமையான இந்த ஓவியம் பாரிஸ் நகரில் உள்ள ளோங்ரே தொல்பொருள் காட்சியகத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது.

பழைய கால மரப்பலகையில் தீட்டப்பட்டுள்ள இந்த ஓவியம் காலமாற்றம் காரணமாக இது சேதமடைய ஆரம்பித்திருப்பதற்கான அறிகுறிகள் தெரிய ஆரம்பித்துள்ளன. இது குறித்து தொல்பொருள் காட்சியக அதிகாரிகள் கவலையடைந்துள்ளனர்.

ஓவியத்திற்கு ஏற்பட்ட சேதம் அடுத்த ஆண்டு மதிப்பிடப்படவுள்ளது. சுமார் 45கோடி ரூபா செலவில் இந்த ஓவியத்தை புதுப்பிக்கும் திட்டம் ஒன்றையும் அதிகாரிகள் முன்வைத்துள்ளனர். (க)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



## திரு.கி.குணரட்ணம் J.P.

எமது அங்கத்துவ சங்கமான பண்டத்தரிப்பு பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுமுகாமையாளரான

## திரு.கிருஷ்ணன் குணரட்ணம்

அவர்கள் கடந்த 23.04.2004 இல் யாழ். மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் அவர்கள் முன்னிலையில் அகில இலங்கைச் சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் எடுத்துக் கொண்டமைக்காக அவரைப் பாராட்டி வாழ்த்துவதுடன் அவர் பணி மேன் மேலும் தொடர எல்லாம்வல்ல மருதடி விநாயகரைப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர், பணிப்பாளர், பணியாளர்கள்.

வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி.
மானிப்பாய்.

(சி-34801)(34-17-13)

# VACANCIES

**JSAC**, the premier voluntary social development non governmental organization in Jaffna immediately requires dynamic, self motivated and service oriented personnel with the under mentioned qualifications and experience to fill the the following vacancies:

**Project Officer** *(2 Posts on contract basis)*

- Graduate with relevant qualification aged between 25 and 40 years.
- Excellent English report writing and presentation skills.
- Strong Project implementation /management background.
- Self motivated with excellent communication skills.
- Two years experience in the area of women and children protection.
- Ability to work individually and with a team under minimum supervision
- Extensive computer skills in MS office
- Valid driving licence.

**Field Officer** *(2 Posts) Locations: (a) Chavakachcheri (b) Kopay*

- Graduate aged between 25 and 40 years.
- PRA/Social Mobilization skills.
- Self Motivated with good communication skills
- Ability to work long hours on occasion
- English Language skills preferable

**Case Facilitator** *(1 Post)*

- Strong background in Psychosocial field, wtih relevant experience in women and children individual protection .
- Graduate in Sociology and other professional qualifications related to individual case management area.
- Flexible work hours.
- Good communication skills.

Appointment will be for one year on contract basis, renewable if required for a further period with mutual consent.

Please apply on or before 12th May 2004, with full CV, clearly indicating experience directly related to the specific job, responsibilities and selection criteria.

Coordinator,
**Jaffna Social Action Centre,**
# 159, 4th Cross Street, Jaffna. (சி-34802)(34)


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

| | |
|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 572 |
| திகதி | 27-04-2004 |

டிக்கட்டின் நிறம் - நீலம்
செல்லுபடியாகும் தொடர் இல.
4655864-4668494

லக்கினம் துலாம்

வெற்றி இலக்கங்கள்
15 43 45 52

ஜக்பொட் பரிசு
ரூபா.10,00,000/-
வெல்லப்படவில்லை.
இந்த வெள்ளிக்கிழமைக்கான
ஜக்பொட் ரூபா. 16,16,750/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1.இல | 2,76,198 | 10 | 27,61,980 |
| 2.இலக்கங்கள் | 25,373 | 20 | 5,07,460 |
| 1.இல + லக்கினம் | 25,154 | 30 | 7,54,620 |
| 2.இல + லக்கினம் | 2,266 | 100 | 2,26,600 |
| 3.இலக்கங்கள் | 677 | 500 | 3,38,500 |
| 3.இல + லக்கினம் | 70 | 5,000 | 3,50,000 |
| 4.இலக்கங்கள் | 03 | 1,00,000 | 3,00,000 |
| 4.இல + லக்கினம் | - | 10,00,000 | - |
| மொத்தம் | 3,29,741 | - | 52,39,160 |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 52,39,160

4662170-9-58
4656682-2-29
4662740-8-28
4666298-7-37
4666240-7-42


## கட்டளைத் தளபதி மீதான விசாரணை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,ஏப்,29

யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால மீதான மனித உரிமைமீறல் குற்றச்சாட்டுத் தொடர்பான விசாரணை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் நேற்று நடைபெறவில்லை.

கடந்த வருடம் ஊடகவியலாளர் ஒருவர் இராணுவத் தளபதி சுசில் சந்திரபாலவினால் தனக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாகத் தெரிவித்து மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்திருந்தார். இது தொடர்பாக நேற்று விசாரணை நடைபெறவிருந்தது. எனினும் யாழ். மாவட்டக் கட்டளைத் தளபதி சுசில் சந்திரபால கொழும்பு சென்றிருந்தமையால் விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இவர் முன்னரும் இது சம்பந்தமான விசாரணைகளுக்கு மனித உரிமை ஆணைக்குழுவால் விடுக்கப்பட்ட அழைப்பின் பிரகாரம் சமுகமளிக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

(ஒ-ரி)

## மகளிர் கல்லூரிகளுக்கு ஓட்டோ வாகனம்

வடமராட்சி,ஏப்.29


உடுவில் மகளிர் கல்லூரி, சுன்னாகம் இராமநாதன் கல்லூரி ஆகியவற்றுக்குப் புதிய ஓட்டோக்கள் வழங்கும் வைபவம் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் முறையே 8.30 மணிக்கும் 9.30 மணிக்கும் நடைபெறும்.

இந்த ஓட்டோக்களை யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் குறித்த கல்லூரி அதிபர்களிடம் உத்தியோகபூர்வமாகக் கையளிப்பார்.

இரு கல்லூரிகளிலும் பெண்கள் விடுதிகள் இருப்பதால் அவசரத் தேவைகள் ஏற்படும்போது பயன்படுத்துவதற்காக கடந்த வருட பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதியிலிருந்து இரு ஓட்டோக்களும் வழங்கப்படுவதாக எம்.கே. சிவாஜிலிங்கம் எம்.பி. தெரிவித்தார்.

(ஜ-173)

# நெஞ்சகலாத நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்



## அமரர் துரையப்பா பரராசசிங்கம்

(ஓய்வுபெற்ற தொலைத்தொடர்பு உத்தியோகத்தர்)

பாசத்தோடும் நேசத்தோடும் வாழ்ந்து மறைந்தீரே!
நீங்கள் மறைந்தாலும் நெஞ்சில் நினைவுகள் மறையாது.

இன்று (29.04.2004) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற சபிண்டீகரணக் கிரியைகளிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கற்பகப் பிள்ளையார் லேன்,
உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்.

- பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.
(31430)(34-17-13)

# மரண அறிவித்தல்

## செல்லர் அன்னலிங்கம்

(இளைப்பாறிய உத்தியோகத்தர். உருக்குக் கூட்டுத்தாபனம்)

கோப்பாயைப் பிறப்பிடமாகவும் கோட்டைக்காடு, மல்லாகத்தை வசிபிடமாகவும் கொண்ட செல்லர் அன்னலிங்கம் நேற்று (28.04.2004) புதனகிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லர் - சின்னம்மாவின் அன்பு மகனும் காலஞ்சென்ற கதிரவேலு - பேரின்பநாயகியின் ஆசை மருமகனும் இந்திராதேவியின் அன்புக் கணவரும் தினேஸ்குமார், ரதீஸ்குமார், முகேஸ்குமார் ஆகியோரின் அன்புத் தந்தையும் தயாபதி, முருகானந்தபவா, குமரசக்திவேல், சோதி, ரேவதி, சிவசக்தி ஆகியோரின் அன்பு மைத்துனரும் இரத்தினவடிவேல் (இலங்கை மின்சாரசபை), சுபேந்திரன், மனோகரன் ஆகியோரின சகலனும் யோகாம்பிகை, சுமதி, தங்கராணி ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரனும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.04.2004) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் பிற்பகல் 2 மணியளவில் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

மல்லாகம். (31431)(37-13-17-34)


# வெல்லுங்கள் !

சென்னைக்கு 2 விமானச் சீட்டுக்கள்

ரூபா. 5000/- பெறுமதியான 5 பரிசு வவுச்சர்கள்

ரூபா. 2500/- பெறுமதியான 10 பரிசு வவுச்சர்கள்




விபரங்களுக்கு அண்மையிலுள்ள MMBL முகவரை தொடர்பு கொள்ளுங்கள்

011 2372 333

C/30/2004

எம்முடைய நாடளாவிய முகவர் அமைவிடங்கள்

**அமான இன்வஸ்மன்ஸ் லிமிட்டட்** - கல்முனை-067-2223588 காத்தான்குடி-065-2473988 **மற்றும் வேறு இடங்கள் - அக்கறைப்பற்று** - அடம்ஸ் APO-067-2277450 **மட்டக்களப்பு** - ரிவோரா என்ரபிறைசஸ்-065-2223447 சஸ்வரி APO-065-2223008 ஸ்ரீதரன் கொம்யூனிகேசன்-065-2223008 **சுன்னாகம்** - நீதினி APO-021-2226267 **இணுவில்** - கணேசன் சென்டர்-021-2225708 **யாழ்ப்பாணம்** - எட்லஸ் இன்டெல்-021-2222990 கணேஷா ஜுவல் ஹவுஸ்-021-2225987 குகன் கொம்யூனிகேசன்-021-2222027 குமார் ஏஜன்சி-021-2222050 021-2223052 மஹாலக்ஸ்மி ஸ்டோர்ஸ்-021-2222024 ராஜு ஸ்டோர்ஸ்-021-2225224 ஸ்ரீமுருகன்-021-2225392 திருமுருகன் கொம்நெட்-021-2227310 யோகா கொம்யூனிகேசன்-021-2222106 குமார் APO - 021-2223453 ஸ்ரீமுருகன் APO-021-2222670 **கைதடி** - வசந்தா APO-021-2223850 - **கொடிகாமன்** - எட்லஸ் இன்டெல்-021-2263400 **கொக்குவில்** - ஞானம்ஸ் APO-021-2223885 **கோப்பாய்** - எபனி APO-021-2223559 **மானிப்பாய்** - தினேஷ் பேக் ஹவுஸ்-021-2222570 **மன்னார்** - மஞ்சுளா ஸ்டோர்ஸ்-032-2232445 **நல்லூர்** - சந்தியா மல்டி கோட்யாட்-021-2226960 **நெல்லியடி** - அம்பிகா ஸ்டோர்ஸ்-021-2263139 **பருத்தித்துறை** - கணேஷா ஏஜன்சி-021-2263928 **பொத்துவில்** - NM ட்ரேடர்ஸ்-063-2248065 **திருகோணமலை** - லேசர் ஸ்டேஷனரீஸ்-026-2223072 026-2222038 **வாழைச்சேனை** - ASA இம்பெக்ஸ்-065-2257245 **வல்வெட்டித்துறை** - ஓம் சரவணபவ கொம்யூனிகேசன்-060-221616 **வவுனியா** - அம்பாள்ஸ்-024-2222421 கணேஷா ஜுவல்ஸ்-024-2222411 கோபி ஏஜன்சி-024-2222411

Flex Graphic

● நிபந்தனைகள் பிரயோகிக்கப்படும் ● அனேகமான இடங்கள் 365 நாட்களும் திறந்திருக்கும்

WESTERN UNION® MONEY TRANSFER

AUTHORISED AGENT
MMBL Money Transfer (Pvt) Ltd.
300, Galle Road, Colombo 3.

உதயன்

## மற்றொரு வழிமுறை

தன்னுடைய நலனுக்காக - தன்னுடைய கட்சியின் நலனுக்காக - தன்னுடைய கூட்டமைப்பின் நலனுக்காக - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மேற்கொள்ளும் ஒரு முயற்சி குறித்து நியாயமான கேள்வி ஒன்றை எழுப்பியிருக்கின்றார் சட்ட அறிஞரும், முன்னாள் அரசமைப்பு விவகார அமைச்சரும், ஐ.தே. கட்சி எம்.பியுமான பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ்.

நாட்டின் மிக உயர்ந்த சட்டம் அரசமைப்பு, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி தொடக்கம் நாட்டின் சாதாரண பிரஜை வரை அனைவருமே மதிக்க வேண்டிய உயர்சட்டமாகக் கருதப்படுவது அது.

ஜனாதிபதி முதல் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வரை - ஏன் சாதாரண அரச ஊழியர்கள் வரை - அனைவருமே அரசமைப்பைப் பேணிப் பாதுகாப்போம் என்று சத்தியப்பிரமாணம் செய்துதான் தமது பதவிகளை ஏற்றிருக்கின்றனர். ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் இதற்கு விதிவிலக்கு அல்லர். 1999 டிசெம்பரில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலை அடுத்துத் தனது இரண்டாவது பதவிக் காலத்தை ஆரம்பிப்பது தொடர்பாக 2000 ஆம் ஆண்டு முற்பகுதியில் பகிரங்கமாகவும் - 2000 ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில், அவர் கூறுவது போல ஊர் உலகத்திற்குத் தெரியாமலும் - செய்யப்பட்ட சத்தியப்பிரமாணங்களிலும் அரசமைப்பைப் பேணிப் பாதுகாக்கும் உறுதிமொழியை அவர் தவற விட்டிருக்கமுடியாது.

ஆனால், தமது சத்தியப்பிரமாண உறுதி மொழியையும், நாட்டின் உயர் சட்டமான அரசமைப்பின் உயர் தன்மையையும் மீறிச் செயற்பட முனைகிறார் ஜனாதிபதி குமாரதுங்க.

தற்போதைய அரசமைப்பை மாற்றுவதற்கோ, திருத்துவதற்கோ, சீரமைப்பதற்கோ அந்த அரசமைப்பில் திட்டவட்டமான ஏற்பாடுகள் உள்ளன. அவற்றுக்கு அமைவாக, அரசமைப்புத் திருத்தமோ, மாற்றமோ செய்யப்படுவது அரசமைப்புக்கு முரணான விடயம் அல்ல. ஆனால், அப்படிச் செய்வதற்குத் தேவையான நாடாளுமன்றப் பலம் தன்னிடம் இல்லாத நிலையில் தற்போதைய அரசமைப்புக்கு முரணான வகையில் - அந்த அரசமைப்பு ஏற்பாடுகளைத் தூக்கிக் கிடாசிவிட்டு - தம்பாட்டில் ஓர் அரசமைப்பை உருவாக்கும் முயற்சியை அவர் ஆரம்பித்திருக்கின்றார்.

அதற்காக மக்கள் கடந்த பொதுத் தேர்தலில் தனக்கு ஆணை தந்திருக்கிறார்கள் என்றும், அதனடிப்படையில் அரசியல் நிர்ணய சபை ஒன்றை உருவாக்கி அதன் மூலம் புதிய அரசமைப்பைத் தோற்றுவிப்பேன் என்றும் மார் தட்டுகிறார் ஜனாதிபதி.

கடந்த பொதுத் தேர்தலில் வாக்களித்தோரில் அரைவாசிப் பேரின் ஆதரவைக் கூடப் பெறாத - நாடாளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மையைக் கூட சுவீகரிக்க முடியாத - ஓர் அரசு, தன்பாட்டில் அரசமைப்பை மாற்றமுடியும் என்றால் -

அப்படிச் செய்வது ஏற்றுக்கொள்ளக்கூடிய ஜனநாயக நடைமுறை என்றால் -

ஒவ்வொரு பொதுத் தேர்தலின் பின்னரும் அரசமைப்பு மாற்றப்படுவது தடுக்க முடியாததாகவும் தவிர்க்க முடியாததாகவும் மாறிவிடும்.

ஒட்டுமொத்தத்தில் ஜனநாயக விழுமியங்களைக் கேள்விக் குறியாக்குவதாகவே அது முடியும்.

அது மட்டுமல்ல.

இருக்கும் அரசமைப்புக்கு முரணான முறையில் புதிய அரசமைப்பு ஒன்றை, 'மக்கள் ஆணை' என்ற பெயரில் ஆளும் கட்சி கொண்டு வருவதை நடைமுறையில் உள்ள அரசமைப்பால் தடுக்க முடியாது என்றால் -

அதே மக்கள் ஆணையின் பெயரால் - அதே சமயத்தில் - வடக்கு - கிழக்கு மக்களும் தங்களுக்கென்று ஓர் அரசமைப்பையும், அதனை உருவாக்குவதற்கான அரசமைப்பு நிர்ணய சபை ஒன்றையும் தோற்றுவிப்பதையும் தற்போதைய அரசமைப்பால் தடுக்கமுடியாது என்ற சட்ட நுணுக்கத்தைச் சுட்டிக்காட்டியிருக்கின்றார் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ்.

அரசமைப்பை மாற்றும் விடயத்தில் தற்போதைய அரசமைப்புக்கு முரணான வழிமுறையைப் பிரசாரப் படுததி, அத்தகைய எத்தனத்தில் ஜனாதிபதியும் அவரது அணியினரும் ஈடுபட்டு வருகின்றனர். ஆனால், அத்தகைய போக்கு - செயற்பாடு - அரசமைப்பை மீறும் ஒரு குற்றமாக இங்கு கருதப்படவில்லை என்பதும் கவனிக்கத்தக்கதாகும்.

பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் சுட்டிக்காட்டிய விடயமும் -

அரசமைப்பை அதன் ஏற்பாடுகளுக்கு முரணான முறையில் மாற்ற முயல்வது குற்றமாகக் கணிக்கப்படுவதில்லை என்ற நிலைப்பாடும் -

தமிழ்மக்களின் பிரதிநிதிகள் தமது கவனத்தில் எடுக்கவேண்டிய அம்சங்களாகும்.

தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான ஒருவழிமுறையாக இந்த விடயத்தையும் ஆலோசிக்கலாமே!

# தமிழரின் ஏகப்பிரதிநிதிகளான புலிகளை அமெ. தூதர் தவிர்ப்பது ஏமாற்றமளிக்கிறது

### தூதருடனான சந்திப்பில் கஜேந்திரன் எம்.பி. தெரிவிப்பு



யாழ்ப்பாணம்.ஏப்.29

யாழ்ப்பாணத்துக்கு வருகைதரும் அமெரிக்கத் தூதர்கள் மற்றும் தூதரக அதிகாரிகள் தமிழ்மக்களின் ஏகப்பிரதிநிதிகளான விடுதலைப் புலிகளைச் சந்திக்காமல் தவிர்த்து வருவது ஏமாற்றமளிப்பதாக உள்ளது.

அமெரிக்கத் தூதுவர் ஜெப்றி ஜே.லுன்ஸ்ரெட்டிடம் இவ்வாறு நேரில் தெரிவித்தார் தமிழ்க் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.கஜேந்திரன்.

நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயஞ்செய்த அமெரிக்கத் தூதரை தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய பிரதிநிதிகள் குழு ஒன்று யாழ். நகரில் பஸ்தியன் உல்லாச விடுதியில் சந்தித்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.கஜேந்திரனும் அக்குழுவில் இடம்பெற்றிருந்தார்.

அரசியல் நிலைமை உட்பட பல விடயங்கள் தொடர்பாக அப்போது அமெரிக்கத் தூதருக்கு விளக்கமளிக்கப்பட்டது.

தமிழ்த் தேசிய இனத்தின் ஏகப்பிரதிநிதிகள் விடுதலைப் புலிகள்தான். இதனை மீண்டும் ஒரு தேர்தல் மூலம் மக்கள் தெட்டத்தெளிவாக உணர்த்தியிருக்கின்றனர். ஆனால், அமெரிக்க ராஜதந்திரிகள் விடுதலைப் புலிகளைச் சந்திப்பதைத் தவிர்த்து வருகின்றனர். இது எமது மக்களுக்கு ஏமாற்றமளிக்கின்றது - என்று கஜேந்திரன் எம்.பி. அங்கு தெரிவித்தார்.

✷ விடுதலைப் புலிகள் இயக்கம்மீது விதித்துள்ள தடையை இனியாவது அமெரிக்கா நீக்கவேண்டும். சமாதானப் பேச்சுக்கள் மீள ஆரம்பிக்கப்படுவதற்கு அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

✷ தேர்தலுக்குப் பின்னர் சமாதான முயற்சிகளுக்குச் சாதகமான எத்தகைய சமிக்ஞைகளையும் ஜனாதிபதி வெளிக்காட்டவில்லை. அதனைச் செய்யாமல் தமிழ்மக்களால் நிராகரிக்கப்பட்ட சக்திகளுக்கு அமைச்சுக்களையும் பொறுப்புக்களையும் வழங்கி அவர்களை ஊக்கப்படுத்துவதிலேயே ஜனாதிபதி அக்கறையோடு செயற்படுகிறார்.

✷ விடுதலைப் புலிகள் இயக்கம் சிறுவர்களை ஆள்சேர்ப்பதாகத் தொடர்ந்து குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்பட்டு வருவது தவறு. கிழக்கில் சிறுவர்கள் அதிக எண்ணிக்கையில் ஆள்சேர்ப்புச் செய்யப்பட்டிருப்பது உண்மையே. ஆனால், அது கருணா என்ற தனிநபரின் நடவடிக்கையால் உருவாகியது. இதனை விடுதலைப் புலிகள் மீதான குற்றச்சாட்டாகக் கொள்ளமுடியாது.

இவ்வாறு அமெரிக்கத் தூதரிடம் எடுத்துரைக்கப்பட்டது.

நேற்றைய சந்திப்பில் கஜேந்திரன் எம்.பியுடன் ந.ரவிராஜ், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகிய எம்.பிக்களும் கலந்து கொண்டனர். (ஐ-6)

# தென்மராட்சி தெற்கில் உடனடியாக 84 குடும்பங்களுக்கு இருப்பிடங்கள்

யாழ்ப்பாணம்,ஏப்.29

தென்மராட்சி தெற்கில் கடந்த வாரம் மீளக்குடியமர்ந்த 84 குடும்பங்களுக்கு உடனடியாக வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கான ஏற்பாட்டினை யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன் மேற்கொண்டுள்ளார்.

தென்மராட்சியில் இராணுவத்தின் உயர் பாதுகாப்பு வலயப் பகுதியில் இருந்து கடந்த வாரம் சாவகச்சேரிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசனிடம் கையளிக்கப்பட்ட கோயிலாக்கண்டி, கைதடிநாவற்குழி, மறவன்புலோ போன்ற பகுதிகளிலேயே இந்த வீடுகள் அமைக்கும் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது.

இப்பகுதிகளில் மீளக்குடியமரவுள்ள 84 குடும்பங்களுக்கு ஒவ்வொன்றும் 25 ஆயிரம் ரூபா பெறுமதியான வீடு அமைத்துக் கொடுக்க யாழ். அரச அதிபர் திட்டமிட்டுள்ளார்.

இதன்படி கோயிலாக்கண்டியில் 12 வீடுகளும், கைதடி நாவற்குழி, மறவன்புலோ ஆகிய பகுதிகளில் 58 வீடுகளும் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

இது தொடர்பான கூட்டம் நேற்று யாழ். செயலகத்தில் அரச அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் நடைபெற்றது. இதில் தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன், யாழ். கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் கே. சுந்தரேசன், கோயிலாக்கண்டி கிராம சேவையாளர் க.சிறிவிக்கினேஸ்வரராஜா, கைதடிநாவற்குழி, மறவன்புலோ கிராம சேவையாளர் இ.சபாநாதன் ஆகியோரும் கலந்துகொண்டார்கள்.

கடந்த 12.12.1999 ஆம் ஆண்டில் இருந்து இடம்பெயர்ந்து சென்ற இப்பகுதி மக்கள் தற்போது கடந்த வாரமே தமது இருப்பிடங்களில் மீளக் குடியமர வந்துள்ளனர். எதுவித வசதிகளும் இல்லாமல் குடியமர வந்துள்ள மக்களுக்கு அடுத்த வாரம் முதல் வீடுகள் அமைக்கப்படும். திட்டம் மேற்கொள்ளப்படும். அத்துடன், குடிதண்ணீர், மலசல கூட வசதிகள் என்பனவும் செய்துகொடுக்கப்படும்.

அதுவரை இப்பகுதி மக்களுக்கான குடிதண்ணீர் விநியோகத்தைத் தென்மராட்சிப் பிரதேச சபை அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தின் உதவியுடன் மேற்கொண்டு வருகிறது. (ஐ-6)

## மீளக்குடியமரவுள்ள முஸ்லிம்களுக்கு விரைவில் வீடுகள் கையளிப்பு

தென்மராட்சி,ஏப்.29

சாவகச்சேரி, தனங்களப்பு வீதியில் அதியுயர் பாதுகாப்பு வலயப் பகுதியில் மீளக்குடியமர உள்ள முஸ்லிம் குடும்பங்களுக்கு அவர்களின் வீடுகள் வழங்கப்படவுள்ளன.

பாதுகாப்பு வலயத்தினுள் உள்ள சாவகச்சேரி மொகிதீன் ஜும்மா பள்ளிவாசல் அதன் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையிடம் ஒப்படைக்கப்படவுள்ளது. அவ்வாறு ஒப்படைக்கப்படும் போது பள்ளிவாசலில் தங்கியுள்ள ஐந்து முஸ்லிம் குடும்பங்களும் அவர்களின் வீடுகளில் மீளக்குடியமர படைத் தரப்பினர் இணக்கம் தெரிவித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

பள்ளிவாசல் கட்டடமும் குடியிருப்புகளும் இன்று அல்லது நாளை கையளிக்கப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது.(ஒ-117)

## உதிரிகளாக விற்கப்படும் பிஸ்கற்றுக்களால் நலக்கேடு

யாழ்ப்பாணம்,ஏப்.29

வர்த்தக நிலையங்களில் உதிரிகளாக விற்பனை செய்யும் பிஸ்கற் வகைகளை வாங்கி உண்ண வேண்டாமென்ற யாழ். மாநகரசபை வைத்திய அதிகாரி ம.மரியதாஸன் கேட்டுள்ளார்.

கடந்த சில மாதங்களாகச் சுகாதார அதிகாரிகள் காலாவதியான உணவுப் பொருள்கள் விற்பதைத் தடைசெய்யத் திடீர் சோதனைகளை நடத்திவருகின்றனர். இதனையடுத்து கடை உரிமையாளர்கள் சிலர் தம்மிடமுள்ள காலாவதியான பிஸ்கற் பைக்கற்றுக்களை உடைத்து பிஸ்கற்றுக்களை உதிரிகளாக விற்பனைசெய்து வருகின்றனர் என்று எமக்கு முறைப்பாடுகள் கிடைத்து வருகின்றன.

எனவே, பொதுமக்கள் கடைகளில் பிஸ்கற் வகைகளை வாங்கும்போது பைக்கறுக்களில் அடைத்து விற்பனை செய்யப்படும் பிஸ்கற்றுக்களை அதன் தயாரிப்புத் திகதி, முடிவுதிகதி என்பனவற்றை உரிய முறையில் அவதானித்துப் பாவனைக்கு உட்படுத்தவேண்டும்.

இதேவேளை, காலாவதியான பிஸ்கற்றுக்களை விற்பனை செய்யும் கடை உரிமையாளர்கள் மீது தகுந்த சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றார் அவர். (ஒ-ரி)

### நாளை

சித்திரை 18
வெள்ளிக்கிழமை
(30.04.2004)
திதி : தசமி
பகல் 8.57 வரை
நட்சத்திரம்: பூரம்
பின்னிரவு 3.58 வரை
சுபநேரம்: 5.58-7.28
ராகுகாலம்: 10.28-11.58
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

நியாயமாகவும் நாணயமாகவும் நடந்து கொள்ளும் மனிதர்களிடம் உள்ள ஒரேயொரு குறை எல்லாவற்றையும் நம்பிவிடும் ஏமாளிகளாக அவர்கள் இருப்பதுதான்.

## யாழ்ப்பாணத் தம்பதிகளுக்கு மட்டு. நகரில் கத்தி வெட்டு!

மட்டக்களப்பு,ஏப்.29

மட்டக்களப்பு நாவலடியில் வெட்டுக்காயங்களுடன் காணப்பட்ட யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தம்பதிகளைப் பொதுமக்கள் மீட்டு மட்டு. போதனா வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர்.

மட்டக்களப்பில் நீர்ப்பாசனத் திணைக்களப் படவரைஞராகப் பணிபுரியும் கே.சந்திரகுமார் (53 வயது), அவரின் மனைவி பாலலக்சுமி (43 வயது) ஆகியோரே வெட்டுக்காயங்களுக்கு உள்ளாகினர்.

கல்லடி நீர்ப்பாசனத் திணைக்கள விடுதியிலிருந்து விசாரணைக்கு வருமாறு மோட்டார் சைக்கிளில் வந்த இருவரால் கடந்த திங்கட்கிழமை இரவு 8.45 மணியளவில் இவர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர் என்று தெரியவருகிறது. இதன்பின்பே நாவலடி காயத்திரி கோயிலுக்கருகிலுள்ள சவுக்குத் தோப்பிலிருந்து அவர்கள் வெட்டுக்காயங்களுடன் மீட்கப்பட்டனர்.

இச்சம்பவத்தில் காயமடைந்த மனைவி அண்மையிலுள்ள வீடொன்றில் தகவல் கொடுத்ததையடுத்தே அவர்கள் வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்டனர் என்றும் -

கணவரின் நிலை ஆபத்தான நிலையில் இருப்பதாகவும் - தகவல்கள் தெரிவிக்கின்றன. இச்செயல் ஒரு குழுவின் வஞ்சம் தீர்க்கும் செயல் எனச் சொல்லப்படுகிறது. (ஒ-ரி)

## வழுக்கையாறுப் படுக்கையில் குளக்கட்டு மண் அபகரிப்பு!

வலி. தென்மேற்கு,ஏப்.29

வழுக்கையாறு படுக்கைப் பகுதியில் மானிப்பாய் மேற்கு விவசாய சம்மேளன பிரிவிலுள்ள முதலியார் குளத்தின் குளக்கட்டு மண் மற்றும் சங்கானைச் சுடலைக்குச் சமீபமாகவுள்ள குளக்கட்டு மண் ஆகியவற்றில் சிலரால் மண் வெட்டப்பட்டு டிராக்டர்களில் ஏற்றிச்செல்லப்படுவதாகப் புகார் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சமூக விரோதிகளைக் கண்டுபிடிப்பதற்கும் எதிர்காலத்தில் இவ்வாறான மண்திருட்டுகள் ஏற்படுவதைத் தடுப்பதற்கும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு யாழ். மாவட்ட நீர்ப்பாசன திணைக்கள பதில் நீர்ப்பாசன பொறியியலாளர் ரி.கணேசராசா வலி. தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலருக்கு அனுப்பிவைத்துள்ள அவசரக் கடிதம் ஒன்றில் கேட்டுள்ளார்.

வழுக்கையாற்றுப் படுக்கைப் பகுதியில் எட்டாவது மைலில் உள்ள முதலியார் குளத்தின் ஆற்று மண்கட்டில் 25 அடி நீளத்திற்கும் சங்கானைச் சுடலைக்குச் சமீபமாகவுள்ள ஆற்றுமண் கட்டில் 75 அடி நீளத்திற்கும் கடந்தவாரம் மண் எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

இதனால், மழைகாலங்களில் குளத்திலுள்ள நீர் சுற்றாடலிலுள்ள வயல் காணிகளுக்குள் புகுந்து நெற்பயிர்களுக்குச் சேதத்தை ஏற்படுத்தும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. மிகுதிக் கட்டுகளும் உடைந்து விழும் நிலையும் ஏற்பட்டுள்ளது. இந்த மண்கட்டிற்குச் சேதம் விளைவித்த நபர்களை கண்டுபிடிப்பதற்கும் இனிமேலும் இவ்வாறான சமூகவிரோதச் செயற்பாடுகள் நிகழ்வதைத் தடுப்பதற்கும் உரிய நடவடிக்கை எடுக்குமாறு தங்களைத் தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன் - இவ்வாறு மேற்படி கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, மானிப்பாய் மேற்கு விவசாயிகள் சம்மேளனத் தலைவர் சி.பொ.மா.க.முதலியார் இந்த மண்திருட்டுக் குறித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கடிதம் மூலம் கேட்டுள்ளார். (ஒ-135)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

கலர்மீன்கள், கண்ணாடி மீன் தொட்டிகள், மோட்டர்கள், அழகுப் பொருள்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: இரகுராமன் (ஹரிகடை), மூத்தவிநாயகர் கோயிலடி, கரண வாய் தெற்கு, கரவெட்டி. (சி-34677)

நல்ல நிலையிலுள்ள பாவித்த ஜெனரேற்றர் தயாரிப்பு Dorman Kw - 50 KVA 400V (3Phase) விற்பனைக்குண்டு. தொடர்பு: 40, 2/1, Edward Lane, Colombo - 3 T.P 4517501. (சி-34690)

நல்ல நிலையிலுள்ள (தனிப் பாவனை) புதிய மொடல் Yamaha YCLS Mate 50 NP xxxx (கூட் டெண்5) மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: துளிர் வீடியோ சென்ரர், மருதங்கேணி வீதி (கிராமக் கோட்டுச் சந்திக்கு அருகில்), பருத்தித்துறை. (சி-34693)

## தவறிவிட்டது

பண்ணாகம் தெற்கு, சுழிபுரத்தைச் சேர்ந்த பரமசிவம் சிவாஜினி என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.788342608V), விசேட அடையாள அட்டை, பல்கலைக்கழக அடையாள அட்டை என்பன தவறி விட்டன. கண்டெடுத்தவர்கள் பண்ணாகம் தெற்கு, சுழிபுரத்தில் ஒப்படைத்துதவவும். (31404)

தேவிபுரம், இலக்கம் 24, புதுக்குடியிருப்பைச் சேர்ந்த சதாசிவம் ரூபகௌரி என்பவருடைய தே.அ.அ. (இல.718221714V), உத்தியோகத்தர் அ.அட்டை, ஆசிரிய கலாசாலை அ.அட்டை, பயண அனுமதி அட்டை அடங்கிய கறுப்புப் பேர்ஸ் 26.04.2004 அன்று பஸ் நிலையத்திற்கும் ஆரிய குளம் சந்திக்கும் இடையில் தவறி விட்டது. (பருத்தித்துறை மினி பஸ்ஸில் வரும்போது) கண்டெடுத்தவர்கள் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அல்லது T.P.No: 021-222-7209 எனும் இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். (31425)

## வாடகைக்கு

பிரத்தியேக வழி உள்ள மேல் மாடி வாடகைக்குண்டு. (கந்தோர் பாவனைக்கு மட்டும்) தொடர்பு: இராசா வாமதேவன் T.P. 222 - 3239 (31424)

## திருமண சேவை

1964ஆம் ஆண்டு, செவ்வாய் இல்லாத Canada இல் இருந்து வந்துள்ள சைவ மணமகனுக்கு 70ஆம் ஆண்டுக்குட்பட்ட சைவ மணமகள் தேவை. தொடர்பு: துர்க்கா திருமண சேவை, 101/1, ஒட்டுமடம் வீதி, சிவலிங்கப்புளியடி, (K.K.S. வீதி) யாழ்ப்பாணம். பதிவுக் கட்டணம் இலவசம். (31422)

## பண்ணிசை வகுப்புகள் ஆரம்பம்

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினால் சுன்னாகம் கதிரமலைச் சிவன் தேவஸ்தானத்தில் நடத்தப்பட்டு வந்த இலவச தேவாரப் பண்ணிசை வகுப்புகள் மீண்டும் நாளை மறுதினம் சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.(10-ரி)

## ஈஸ்வரம்மா தினவிழா

யாழ்ப்பாணம்,ஏப்.29

யாழ்.பகவான் ஸ்ரீசத்யசாயி சேவா நிலையத்தில் எதிர்வரும் 4ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஈஸ்வரம்மாதின விழாவும் வெசாக் போயாதின நிகழ்ச்சியும் நடைபெறவிருக்கின்றன.

காலை 5மணிக்கு ஆரம்பமாகும் நிகழ்ச்சிகள் மாலை 4.15மணி வரை இடம்பெறும். வடபிராந்திய ஆன்மீகக் கல்வி இணைப்பாளர் திருமதி ம.சரவணபவன் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். பரிசில் வழங்கும் வைபவமும் இடம்பெறும். (ஐ)

## கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.29

சிறுப்பிட்டி வடக்கு, ஸ்ரீமுத்துமாரி அம்பாள் ஆலய மண்டலாபிஷேகப் பூர்த்தி விழாவில் 25 தினங்களும் "அம்பிகையின் மகிமை" என்னும் பொருளில் தொடர்சொற்பொழிவாற்றிய மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி ஆசிரியர் சைவப்புலவர் கந்த. சத்தியதாசன் ஆலய நிர்வாகத்தினரால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

இவரை இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின் உதவிப் பணிப்பாளர் சிவத்தமிழ்வித்தகர் சிவ.மகாலிங்கம் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். (10-ரி)

## இலவசம்

பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வுக்கட்டுரைகள் எமது கணனியில் அச்சுப்பதிப்பவர்களுக்கு புக்பயின்டிங் முற்றிலும் இலவசம். இது முதல் வரும் மாணவர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து மட்டுப்படுத்தப்படும் மற்றும் கணனியில் (றோணியோ) வினா விடை பேப்பர்கள், புத்தகங்கள் அச்சிட்டு வெளியீட 200 இரு பக்க பிரதிகளுக்கு 250/- மட்டுமே (எல்லாச் செலவும் உட்பட)

தொடர்புகளுக்கு:

**ராஜ் புக் பயிண்டிங் அன் கொம்பியூட்டர் பிறிண்டிங்**

பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

T.P-077-6176794

(31427) (37-19-17-21)

## நாரந்தனை, சரவணை கர்ணந்தோட்டம் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் பரிபாலனசபைப் பொதுக்கூட்டம் - 2004

மேற்படி ஆலயத்தின் பொதுக்கூட்டம் நாளை (30.04.2004) வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு ஆலய முன் மண்டபத்தில் தலைவர் திரு.க.நடராசா அவர்கள் தலைமையில் நடைபெறவுள்ளது. எனவே முருகன் அடியார்கள் அனைவரும் தவறாது சமுகமளித்து ஆலய வளர்ச்சிக்கு உதவிபுரியுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

- பரிபாலன சபை.

(C/34698)(34-21-13-17)

உ

தேவி துணை

## தும்பளை நெல்லண்டை அம்மன் கோவில் தரும பரிபாலன சபை

**Thumpalai Nellandai Amman Temple Board of Trustees**

தும்பளை. Thumpalai — ஸ்தாபிதம் ESTD 31.05.1945 — பருத்தித்துறை Point Pedro

பதிவு இல. Regd No. HA / 5 / JA / 419

(தும்பளை நெல்லண்டை பத்திரகாளி அம்மன் கோவில், தும்பளை முருகன் கோவில், தும்பளை முத்துமாரியம்மன் கோவில் ஆகிய மூன்று கோவில்களையும் பரிபாலனஞ்செய்யும் சபை)

## அறிவித்தல்

**துமபளை நெலலணடை அமமன கோவல தரும பாபாலன சபையின**

**60 ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம்**

2004 ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆலயத்தின் திருஞானசம்பந்தர் மண்டபத்தில் சபையின் 60 ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம் நடைபெறும் என்பதனை சகல மகாசபை அங்கத்தவர்களுக்கும் அறியத்தருகின்றோம். சபையின் 60 ஆவது வருடத்தை முன்னிட்டு **"மணிவிழா" மலர்** வெளியீடு நடைபெறும். பொதுக்கூட்டத்தில் ஆராயப்பட வேண்டிய பிரேரணைகள் கடிதங்கள் இருப்பின் 07.05.2004இற்கு முன்னர் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்படல்வேண்டும்.

தும்பளை நெல்லண்டை அம்மன் கோவில்,
தரும பரிபாலன சபை.

வை.சண்முகவடிவல்
செயலாளர்.

(31423)(37-21-19-17)

## JAFFNA MEDICAL ASSOCIATION

### GENERAL BODY MEETING 2004

The Council Members have decided to have the General body Meeting on 12th May 2004 at 11.30a.m. at the Clinical Lecture hall, Teaching hospital, Jaffna, to discuss about following matters,

1. Memorial Lecture on behalf of late Members of JMA
2. To discuss about increasing the Annual subscriptions for Library Membership.

**All the members and Doctors are cordially invited.**

(C/34697)(42-21-19-17) **Secretary - JMA**

## VACANCIES

### Distributor Sales Representatives

We are the authorized distributor in Jaffna for Hayleys Consumer Products Ltd., the sole agents in Sri Lanka for.Baygon (SC Johnsons - USA) requires Distributor Sales Representatives to engage in the sales activity. Suitable candidates will be young males in the age group of 18 - 23 years with a flair for selling. The training for the prospective candidates will be provided by Hayleys Consumer and will be assigned to us.

**The prospective candidates should posses the following:**

★ Should have passed the GCE (OIL) with passes in English and Maths.
★ Should be willing to work long hours and travel extensively.
★ Should be in a position to furnish a Security Deposit of Rs.15,000/


**Candidates who could satisfy the above could send their CV to:**

**Karan Electricals**

**760A,K.K.S.Road, Jaffna.**

On or before 10th May 2004 (40-21-17-13) (31405)

## கண்ணீர் அஞ்சலி



எமது ஆலயத் திருப்பணிக்கு பெரும் நிதியுதவி வழங்கியவரும் ஆலய மஹோற்சவத்தின் 3 ஆம் நாள் திருவிழா உபயகாரருமாகிய

**திருமதி இராசதிரவியம் கந்தசாமி**


அவர்கள் 24.04.2004 அன்று லண்டனில் காலமாகியதையிட்டு மிகுந்த வேதனையடைகின்றோம். அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல சிவபூத நாதேஸ்வரப் பெருமானைப் பணிகின்றோம்.

சிவபூதநாதேஸ்வரர் தேவஸ்தானம்.
நீர்வேலி, கோப்பாய், கரந்தன்,
உரும்பிராய் கிழக்கு.

ஆலய பரிபாலன சபையினர்.

(சி34699)(37)

## IN MEMORIAM





**VICTOR SINNATHAMBY KIRUPARAJ** — **INDRANI KIRUPARAJ**

4th January 1990 Called To Rest 29th April 2003

He that dwelleth in the secret Place
Of the most high shall abide under the
Shadow of the Almighty — Psalm 91:1

**Loved Ones.**

(31410)(34-21-13-17)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

### கட்டுவன திருமதி நாகலிங்கம் நகுலேஸ்வரி

அவர்கள் புகழ்பூத்த கட்டுவன் கிராமத்தினைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி நகுலேஸ்வரி நாகலிங்கம அவர்கள் 30.03.2004 அன்று அமரத்துவம் அடைந்தார்கள்.

இவர் கட்டுவன் மயிலிட்டிதெற்கு, வறுத்தலைவிளான் கிராமங்களை உள்ளடக்கிய பிரதேச மக்களின் மேம்பாட்டுக்கு பெரிதும் தொண்டாற்றிய பாலர் ஞானோதய சங்கத்தின் மாதர் பிரிவான, பாலர் ஞானோதய மாதர் சங்கத்தின் நிறுவன உறுப்பினராகவும், சங்கத்தின் பொறுப்பான பதவிகளை வகித்துப் பெருந் தொண்டாற்றிய பெருமாட்டியாகவும் விளங்கினார். அந்தக்காலத்தில், தமது இளமைப்பருவத்தைப் பெண்கள் முன்னேற்றத்திற்குப் பயன்படுத்தியதுடன், மக்கள தொண்டரான தமது கணவர் அமரர் திரு.நாகலிங்கம ஆசிரியர் அவர்களின் தூய பொதுவாழ்வுக்கும் அரணாக விளங்கினார்.

அன்னாரின் தன்னலமற்ற தொண்டுகளை நன்றியுடன் நினைவு கூர்ந்து எமது இதய அஞ்சலியைக் காணிக்கையாக்குகிறோம். அவருடைய மறைவால் துயருறும் பிள்ளைகள், உற்றார், உறவினர் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஆண்டவனை இறைஞ்சுகின்றோம்.

பாலர் ஞானோதய சங்கத்தினர்,
கட்டுவன், மயிலிட்டி தெற்கு, வறுத்தலைவிளான்.

(31388)(42-21-13-17)

தகவல்: க.த.பாலசுப்பிரமணியம் (தலைவர்).

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 14 - 01 - 1942



இறப்பு 11 - 05 - 2003

அமரர் **மாரிமுத்து சோமரத்தினம்**

திதி:29.04.2004

ஆறவில்லை எம்மனது வருடம் ஒன்றானதே!
தேறவில்லை எம்மனது தேற்றுகின்றோம்
தேடுகின்றோம் நாம் கிடைக்கவில்லையே!
ஆறுதலுக்கு ஆயிரம் உறவுண்டு - ஆனால்
அப்பா என்று அழைக்க யாருமில்லையே!

*இன்று (29.04.2004) வியாழக்கிழமை அன்னாரின் ஓராண்டு நினைவாக எமது இல்லத்தில் நடைபெறும் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்போடு கேட்டுக் கொள்கின்றோம்.*

பிரிவால் துயருறும்:
**மனைவி, மக்கள், மருமக்கள்,பேரப்பிள்ளைகள்.**

*பிடாரி கோவிலடி,*
*கொக்குவில் மேற்கு.*

(31391)(42-21-13-17)

## மரண அறிவித்தல்

### எஸ்.ஐ.ஜேக்கப்

யாழ்ப்பாணம், சுண்டுக்குளியைச் சேர்ந்த சீனி ஐயன் ஜேக்கப் அவர்கள் (26.04.2004) திங்கட்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் எஸ்தரின் அன்புக் கணவரும் Bro ராஜன், Bro அல்பிரட், Bro செல்வராஜ் (இலங்கை பெந்தெ கொஸ்தே சபை), மேசி (ஆஸ்திரேலியா), சோதி (ஆஸ்திரேலியா), ரஞ்சி (ஆஸ்திரேலியா), நெகஜீவன் ஜேகப் (A.G.A. அலுவலகம், நல்லூர்), ஜெனி (டோகா) ஆகியோரின தகப்பனாரும் பீற்றர், ராஜவேல், சத்தியா, தருமலிங்கம், சிவகுமார், கிருஸ்ணபிள்ளை, கீத்தா, கிருஸ்ரோபேர் அருள்ராஜ் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் அடக்க ஆராதனை இன்று (29.04.2004) வியாழக்கிழமை மாலை 2.00 மணிக்கு இல.111, கண்டி வீதி, சுண்டுக்குளி யாழ்ப்பாணத்தில் உள்ள இலங்கை பெந்தெ கொஸ்தே சபை சாலையில் நடைபெற்று நல்லடக்கத்திற்காக கொட்டடி மயானத்திற்கு கொண்டுசெல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*178, கண்டி வீதி,*
*சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.*
*T.P 021 222 2980*

தகவல்:
- குடும்பத்தினர்.

(31416)(40-13-21-17)

# ஈழத்தமிழர்களின் உள்ளங்களுடன் ஒன்றித்து அவர்கள் வாழ்வில் தாக்கத்தைத் தந்த பாரதிதாசன்

விடுதலைக்கவிஞர் பாரதிதாசனின் நினைவுதினம் இன்றாகும். அதனை முன்னிட்டு இந்த ஆக்கம் பிரசுரமாகின்றது.

தமிழகம் காலத்திற்குக் காலம், காலத்தின் தேவையை நிறைவு செய்கின்ற முறையில் தமிழ் அறிஞர்களைக் குறிப்பாகக் கலைஞர்களை உருவாக்கியுள்ளது. இவர்கள் ஒவ்வொருவரும் தமிழகத்திற்கு அண்மையிலுள்ள ஈழத்தில் தம் தனித்தாக்கதை ஏற்படுத்தியுள்ளனர். இக்கவிஞர் வரிசையில் இருவரை இங்கு நினைவுகொள்கிறோம். ஒருவர் பாரதி, மற்றொருவர் அவரின் தாசன் பாரதிதாசன்.

முன்னையவர், இந்திய விடுதலைக்குக் குரல் எழுப்பினார். பின்னையவர் அடிமையில் ஊறிக்கிடந்த தமிழ்ச் சமுதாயத்தைத் தட்டி எழுப்பத் தன் கவிதைகளைப் பயன்படுத்தினார். இந்தியா விடுதலையை வேண்டி நின்றதுபோல் "இலங்கையர்" என்ற உணர்வினால் உந்தப்பட்டு இலங்கையின் விடுதலையை வேண்டி நின்ற இலங்கைத் தமிழர்களுக்குப் பாரதியின் பாடல்கள் தேவைப்பட்டன.

இலங்கையும் இந்தியாவும் விடுதலைபெற்ற பின்பு வெள்ளையர் ஆட்சிக்குப் பதில் வட இந்தியர் ஆட்சி தலைதூக்கியது. இதை எதிர்த்துக் குரல்எழுப்ப வேண்டிய நிலைக்குப் பாரதிதாசன் தள்ளப்பட்டார். அதுபோல் சிங்கள வல்லாண்மையை எதிர்த்து ஈழத் தமிழ்மக்கள் குரல் எழுப்பிய போது பாரதியை மிஞ்சுகின்ற அளவிற்குப் பாரதிதாசனின் பாடல்கள் ஈழத்தமிழ் மக்களின் தேவையை நிறைவுசெய்தன.

பாரதி 1882 இல் தோன்றி *1921 இல் தனது 39 ஆவது அகவையில்* இறைவனடி எய்தினார். பாரதிதாசனோ 1891 ஏப்ரல் 29 இல் தோன்றி 1964 ஏப்ரல் 21 இல் தனது 73 ஆவது அகவையில் ஓரளவு நிறைவாழ்வு எய்திய நிலையில் மறைந்தார்.

### பாரதிதாசனின் தோற்றம்

பாரதிதாசனை அவரின் கவிதைகள் வாயிலாகப் பார்ப்பதற்கு முன்பு அவருடைய தோற்றத்தை, அவருடைய ஆளுமையை முதலில் நினைவுகொள்ளல் நலம். பாரதிதாசனுடைய தோற்ற எழுச்சியைக் கவிஞர் மதிவண்ணன் மிக ஏற்றமுற எடுத்துக்காட்டுகிறார். அவர் காட்டுகின்ற முறை, பாரதிதாசனை அப்படியே படம் பிடித்துககாட்டுவது போல் அமைந்திருப்பதால் அப்பாடலை அப்படியே இங்கு தருகிறோம்.

**காந்தம் போல் நமை இழுக்கும் கவிதைக் கண்கள்!**
**கச்சிதமாய் பதித்தது போல் நறுக்கு மீசை!**
**வாய்ந்த எழில் தோள் மேல் சால்வை! போலி**
**வைதீகம் எதிர்க்கின்ற வைர நெஞ்சம்!**
**நீந்துவதோ எப்போதும் எதிர்நீச்சல் தான்!**
**நெருப்பு வரிக் கவிதையிலோ புலிப பாய்ச்சல்தான்!**
**சேர்ந்திவைகள் ஒன்றான சங்கமம் தான்!**
**சுப்புரத்தினக் கவிஞன்! அன்னோன் வாழ்க!**

தமிழ் இலக்கிய உலகிற்குப் பாரதிதாசன் பங்களிப்பு எத்தகையது என்பதையொட்டித் தமிழறிஞர்கள் பலர் பல்வேறு நிலையில் சுவைபட ஆராய்ந்துள்ளனர். அவர்கள் ஒவ்வொருவருடைய ஆய்விலும் ஆழமுண்டு, அகலமுண்டு.

### பகுத்தறிவுச் சுடர்

"கவிதை உலகில் அவர் முடிசூடா மன்னர். புரட்சி உணர்வில் அவர் ஒரு தமிழ்நாட்டு ஷெல்லி. இயற்கையைப் பாடுவதில் வால்ட்விட்மன். வரலாற்றைக் காவியமாக்குவதில் அவர் இளங்கோ. வருணனையில் சொல் வளத்தில் அவர் கம்பர். காலத்தின் தேவையில் அவர் பாரதி". 'நம்முடைய உள்ளத்தில் அவர் என்றும் பாவேந்தர். புரட்சிக்கவிஞர். இனமுரசு - தன்மான வீரர் - பகுத்தறிவுச் சுடர்' என்ற இக்கூற்று பாரதிதாசனின் பணியை ஏற்றமுறச் சுருக்கி விளக்குகிறது.

### புதுச்சேரியின் பங்களிப்பு

தமிழகத்தின் அண்மைக்கால வரலாற்றில் புதுச்சேரி தனியொரு சிறப்பான இடத்தை வகிக்கின்றது. வெள்ளையர் ஆட்சி நிலவிய காலத்தில் அவ்வாட்சியை எதிர்த்துப் பாரதி குரல் எழுப்பியதன் விளைவு, பிரெஞ்சு ஆட்சிக்குட்பட்டிருந்த புதுச்சேரியில் தஞ்சம்புகும் நிலைக்கு பாரதி தள்ளப்பட்டார். 1906 ஆம் ஆண்டு தொட்டு, 1918 ஆம் ஆண்டு வரை புதுச்சேரியில் பாரதி வாழவேண்டிய நிலை ஏற்பட்டது.

இப் பன்னிரண்டு ஆண்டுகளில் பாரதிக்கும் புதுச்சேரியில் தோன்றி வாழ்ந்த பாரதிதாசனுக்கும் இடையில் ஏற்பட்ட இதய இணைப்பு, கவித்துவ கருத்துப் பரிமாறல், தமிழ் இலக்கிய உலகிலேயே ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தியது.

### பார்ப்பனீயத்தைச் சாடிய பாரதியின் தாசன்

பாரதிதாசனைப் போல் பார்ப்பனீயத்தைச் சாடிய கவிஞன் தமிழகத்தில் வேறு எவரும் தோன்றவில்லை. இருந்தாலும் பார்ப்பனக் குலத்தில் தோன்றிய பாரதிக்கு அவர் தாசனாக விளங்கினார். பார்ப்பனக் குலத்தில் பாரதி தோன்றினாலும் "பார்ப்பானை ஐயர் என்ற காலமும் போச்சே" என்று பாடியவர் பாரதி. பார்ப்பனரில் இருவர் பைந்தமிழ்ப்பற்றுடையவர். ஒருவர் பாரதி. மற்றையவர் சூரிய நாராயண சாத்திரி என்ற தன் இயற்பெயரை பரிதிமாற் கலைஞர் என்று மாற்றிய தமிழ் அறிஞர். எனவேதான், இருவர் மீதும் பாரதிதாசனுக்குத் தனிப்பற்றும் பாசமும் இருந்தது.

தமிழகத்தில் எத்தனையோ புலவர்கள் தோன்றி உள்ளனர். அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு சிறப்பு உண்டு. அவற்றை நாம் குறைத்து மதிப்பிட விரும்பவில்லை. ஆனால், பாரதிதாசன் ஒருவர்தான் தமிழைத் 'தெய்வ நிலைக்கு' மேலாகத் தன் உயிரென ஓம்பிய கவிஞனாக விளங்கினார். அவருக்குத் தமிழ்மீது இருந்த எல்லையற்ற பற்றினை எடுத்துக்காட்டுவதற்கும் தமிழே அவர் வாழ்வை உந்துகின்ற உயிர் ஆற்றலாக விளங்கியது என்பதற்கும், நிறையச் சான்றுகள் உண்டு. ஆனால், தமிழுக்கு வெறுமனே புகழ்மாலை சூட்டுவதாலோ பாமாலை சூட்டுவதாலோ அது வாழப் போவதில்லை. ஒரு மொழியின் வாழ்வு அம்மொழியைப் பேசுவோர் அதனை எவ்வளவு தூரம் பேணிக் காக்கின்றனர் என்பதைப் பொறுத்தே அமையும் பாரதிதாசன் வாழ்ந்த காலத்தில் ஆர்.கே.சண்முகம் செட்டியார் அவர்கள் ஓரிடத்தில் குறிப்பிட்டதற்கமைய *'தமிழனுக்குத் தேசியம் என்றால் இந்தி, அனைத்துலக மொழி என்றால் ஆங்கிலம், இசை என்றால் தெலுங்கு, வழிபாடு என்றால் வடமொழி, அடுக்களையில் கூட அருந்தமிழ் ஆட்சிசெலுத்துமா என்பது கேள்விக்குறி'* இந்த அளவிற்கு அனைத்துத் துறைகளிலும் வேற்றுமொழிகள் தலைதூக்கத் தமிழை மறந்து தமிழன் வாழ்ந்த வரலாறே அன்று நிலவிய சூழ்நிலையாகும்.

இதை மாற்றியமைக்க வேண்டிய பொறுப்பில் இயல்துறை மறைமலை அடிகளாரிடமும், இசைத்துறை பாரதிதாசனிடமும் ஒப்படைக்கப்பட்டது. எனினும், பண்டைய தமிழ் இசையின் பெருமையை முதலில் ஆய்வுநிலையில் எடுத்துக்காட்டிய பெருமை 'யாழ் நூல்' தந்த ஈழத்து விபுலானந்த அடிகளையே சாரும் துறைதோறும் தமிழ துலங்கினாலன்றி தமிழோ தமிழனோ தலைதூக்க முடியாது என்பதை உணர்ந்த பாரதிதாசன் தமிழனின் அன்றாட நிகழ்ச்சிகள் அனைத்திலும் தமிழ் இடம்பெறும் நிலையை உருவாக்க ஓயாது உழைத்தார்.

*"நாயினும் கீழாய் நந்தமிழ் மக்கள் நலிவதை நான் கண்டும் ஓயுதலின்றி அவர் நலம் பேணி உழைத்திட நான தவறேன்"* என்று அவர் பாடியதற்கமைய தன்னை மறந்திருந்த தமிழனுக்கே தமிழுணர்வை ஊட்டும் பணியில் பாரதிதாசன் ஓய்வின்றிப் பாடுபட்டார். தூக்கத்தில் ஆழ்ந்திருந்த தமிழனைத் துடித்து எழுந்து துறைகள் தோறும் தமிழை வாழ்விக்கின்ற பணியில் அவனை ஈடுபடுத்திய பெருமை பாரதிதாசனையே சாரும் பாரதிதாசன் தோனறியிராவிடில் இத்தகைய பேருணர்சசி தமிழகத்தில் உருவாகியிருக்குமா என்பது பெருங்கேள்வியே ஆகும்.



*'எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு'* என்று அவர் பாடிய போது உணர்ச்சி முற்றிலும் அழிந்திருந்த தமிழன் கூட உணர்வுபெற்று, தமிழனாக வாழமுயன்ற வரலாறு தமிழகததில் ஏற்பட்டதனை நடுநிலை வழுவாது வரையும் ஆசிரியர்கள் ஏற்றுளளனர்.

### இசையில் தமிழ்

ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி உவப்பிலா இன்பத்தினை நலகுகின்ற ஆற்றல் தமிழ் இசைககு இருந்தபோதும் தமிழ் இசையை விடுத்து, புரியாத செத்த வடமொழிக்கும், தெலுங்கிசைக்கும் கைத்தாளமிட்டு மகிழ்ந்த தமிழனின் அறியாமையைக் கண்டு, எண்ணி ஏங்கினார் பாரதிதாசன்.

தமிழ் இசைத்துறையில், தமிழ் தலைதூக்க வேண்டும் என்று விரும்பிய பாரதிதாசன் தமிழ் நாடகத்துறையில் நல்ல தமிழ் ஆட்சி செலுத்த வேண்டும் என விரும்பியதோடு தமி

**மா.க.ஈழவேந்தன்**
**நாடாளுமன்ற உறுப்பினர்,**
**யாழ்ப்பாணம்**

ழில் நாடகங்களையும் எழுதி வழங்கினார்.

### வணிகத்தில் வளமான தமிழ்

தமிழன் பணியாற்றும் துறைகள் பல. அவற்றுள் வணிகத்துறை முதன்மை வாய்ந்தது. இந்த வணிகத் துறையில் வண்டமிழ் வளமோடு விளங்க வேண்டும் என வேண்டி நின்றார். வணிகர் தம் முகவரியை வரைகின்ற பலகையில் ஆங்கிலமா வேணடும்? எனக்கேட்ட அவர், *மாணுயர்ந்த செந்தமிழால் வரைக என அனைவருக்கும் சொல்லவேண்டும்* என வேண்டுகோள் விடுத்தார்.

### கல்லூரிகளில் கன்னித்தமிழ்

இன்றைய தமிழினத்தின் அடுத்த தலைமுறையை - வழித்தோன்றல்களை உருவாக்கித் தருபவை கல்லூரிகள். அவற்றை வழிநடத்தும் கல்லூரித்தலைவர்கள் திசைமாறித் தமிழினத்தையே பாழடிக்க முயன்ற போது பாரதிதாசன் நெஞ்சம் பதைபதைத்து அவர் உள்ளத்தில் ஊறிய துன்ப உணர்ச்சி, உணர்வற்ற தமிழனையும் உணர்வுபெறும் முறையில் அமைந்தது.

### தமிழ்த் திருமணம்

தமிழ் இசையிலும் தமிழ் நாடகததிலும் தமிழ் தலைமை தாங்கவேண்டும் என விரும்பிய பாரதிதாசன், கல்லூரியில் அனைத்திலும் கன்னித் தமிழே அரசோச்சவேண்டும் என விரும்பிய பாரதிதாசன், தமிழனுடைய திருமணங்களில் வடமொழி வல்லாண்மை செலுத்துவது கண்டு நெஞ்சம் நொந்து *'விவாக சுபமுகூர்த்தம்'* என வெளிப்படுத்தும் மண அழைப்பில் மேன்மை என்ன? என்று கேட்கிறார். மேலும், *"அவாள், இவாள்"* என்று அழைக்கும் பார்ப்பனரை இடித்துரைத்த அவர் *உவகைபெறத் தமிழன் மணம் விழையுங்கால் உயிரற்ற வடசொல் உச்சரிப்பு கவலையினை ஆக்காதோ* என மணவிழா காண்போரை பார்த்து அவர் விடுக்கின்ற வினா, பொருள் பொதிந்த வினாவாக விளங்குகிறது.

### இன்பத்தமிழால் இறைவனைப் பாடுக

மேற்குறித்த துறைகள் அனைத்திலும் தமிழ் புறக்கணிக்கப்பட்டதை அறிந்து துன்பக் கடலிலே மூழ்கிய பாரதிதாசன் இறைவழிபாட்டுத் துறையை நோக்குகிறார். எங்கும் நிறைந்தவன் இறைவன; *எல்லாம் வல்லவன் இறைவன்* என்றும் *ஓசை ஒளியெல்லாம் ஆனாய் நீயே* என்றும், *தமிழோடு இசைபாடல் மறந்தறியேன* என்றும் அடியார்களால் ஓதி உணரப்படுகின்ற *இறைவனுக்குத் தமிழ் தெரியுமா?* என்று கேட்கின்ற தமிழனின் மடைமையை எண்ணிக் கண்ணீர்விடுகின்ற பாரதிதாசன், *"உயிர் போன்ற உங்கள் தமிழ்கடவுளுக்கே உவப்பதால் இல்லை போலும். உயிர்போன்ற உங்கள் தமிழ் உரைத்தக்கால் கடவுளதை ஒப்பார் போலும; பயிரழிக்கும் விட்டிலெனத் தம் வழியே படுத்த வந்த, வடமறைதான் செய்தீர் வாழ்த்துவதற்கும் தேவை என்று சொல்வதற்கும்"* என்று குடைந்து குடைந்து வினாக்களைத் தொடுக்கின்றார்.

### ஈழத்தமிழர் இதயத்தில் இடம்பெற்ற கவிஞன்

பாரதிதாசன் தமிழகத்தை மட்டும் எண்ணிப் பார்த்ததில்லை. 20கல தொலைவிலுள்ள ஈழத்தை அவன் மறந்ததில்லை. *"வீரத்தமிழன்"* என்ற தலைப்பில் இலங்கைவேந்தன் இராவணனை நம் புரட்சிக் கவிஞர் உணர்சசியின் உச்சநிலைக்கு எம்மை அழைததுப் பின்வருமாறு பாடுகின்றார்.

**'தென்திசையைப் பார்க்கின்றேன் என்சொல்வேன், என்றன்**
**சந்தையெலாம் தோளகளெல்லாம் பூரிக்குதடா!**
**அன்றந்த இலங்கையினை ஆண்ட மறத்தமிழன்**
**ஐயிரண்டு திசை முகத்தும் தன் புகழை வைத்தோன்**
**குன்றெடுக்கும் பெருந்தோளான் கொடை கொடுக்கும் கையான்**
**குள்ளநரிச் செயல் செய்யும் கூட்டத்தின் கூற்றம்**
**என்றதமிழர் மூதாதை என்றமிழர் பெருமான்**
**இராவணன்காண் அவன் புகழை இவ்வுலகம் அறியும்**
**வீழ்ச்சியுறு தமிழகத்தில் எழுச்சி வேண்டும்**
**விசையொடிந்த தேகத்தில் வன்மை வேண்டும்**
**சூழ்ச்சிதனை வஞ்சகத்தைப் பொறாமை தன்னைத்**
**தொகையாக எதிர் நிறுத்தித் தூள் தூளாக்கும்**
**காழ்சிந்தை மறச்செயல்கள் மிகவும் வேண்டும்**
**கடல்போலச் செந்தமிழைப் பெருக்க வேண்டும்**
**கீழ்ச்செயல்கள் விடவேண்டும் இராவணன்றன்**
**கீர்த்திசொல்லி அவன் நாமம் வாழ்த்தவேண்டும்.**

### வீரத்தின் விளைநிலம் ஈழத்தமிழர்

மேற்குறித்த முறையில் இராவணனை நம் பாரதிதாசன் வாழ்த்துகிறார். ஏதோ தனிமனிதன் இராவணனை வாழ்த்துகிறார் என்பது பொருளல்ல. மாறாக, ஈழத்தமிழரின் வீரத்தை எண்ணிப்பார்த்தே பாரதிதாசன் இப்பாடலைப் பாடுகிறார். எம்கூற்றுக்கு வலுவூட்டுகின்ற முறையில் மற்றுமோர் இடத்தில்

*'சிங்களம் சேர் தென்னாட்டு மககள் தீராத தீர் என்று ஊது ஊது சங்கே'* என்றும் -

*வெங்கொடுமைச் சாக்காட்டில் விளையாடும் தோள் எங்கள் வெற்றித்தோள்கள்* என்றும் *'கங்கையைப் போல் காவிரி போல் கருத்துக்கள் ஊறும் உள்ளம் எங்கள் உள்ளமென்றும்'* ஈழத் தமிழரை வாழ்த்துகினற போது, எவ்வளவு தூரம் ஈழததுமக்கள் உள்ளத்தோடு அவர் உள்ளமும் ஒனறியிருககிறது என்பது நாம் உணரத்தக்கதாக இருக்கிறது. இத்துடன் ஈழத் தமிழரை *வீரத்தின் விளை நிலமாகவும், கருத்துக்களின் கருவூலமாகவும* அவர் காண்கிறார் என்பதையும் நாம் இங்குச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

*பாரதிதாசனும் காசி ஆனந்தனும் கண்டகனவு நனவாகும்*

*"கொலை வாளினை எடடா மிகக் கொடியோர் செயல் அறவே! குகை வாழ் ஒரு புலியே உயர் குணமேவிய தமிழா"* என்று கொடியோர் செயலை வீழ்த்த கொலை வாளினை எடுககும்படி அவர் அன்றே கட்டளையிட்டார். அவர் வழியில் சிந்திக்கும் எம் உணர்ச்சிக்கவிஞன் காசிஆனந்தன்

*"மறவர் படைதான் தமிழ்ப்படை*
*குலமானம் ஒன்றுதான் அடிப்படை*
*வெறிகொள் தமிழர் புலிப்படை*
*அவர் வெல்வார் என்பது வெளிப்படை"*

என்று உணர்ச்சியின் உச்ச நிலைக்கு அழைத்துச்செல்லும் இப்பாடல் ஈழத்தமிழர் வாழ்வில் பாரதிதாசன் ஏற்படுத்திய தாக்கத்திற்கு தலையாய எடுத்துக்காட்டாகும். ❋

---

காணாமற்போனோர் குறித்த வழக்கு:

## ஆட்சேபனைகளைச் சமர்ப்பிக்க மே 24ஆம் திகதி வரை அவகாசம்

யாழ்ப்பாணம்,ஏப்.29

1996ஆம் ஆண்டுக்காலப் பகுதியில் குடாநாட்டில் படையினரால் கைது செய்யப்பட்டுக் காணாமற்போனவர்களில் ஆறு பேர் தொடர்பான ஆட்கொணர்வு மனுக்கள் குறித்த வழக்கில் சம்பந்தப்பட்ட படை அதிகாரிகள் தமது பதிலாள் பத்திரம் (தமக்குப்பதிலாக நீதிமன்றத்தில் ஆஜராகும் சட்டத்தரணியை உறுதிப்படுத்தும் பத்திரம்) மற்றும் ஆட்சேபனைகள் ஆகியவற்றை அடுத்தமாதம் 24 ஆம் திகதி சமர்ப்பிக்க யாழ். மேல் நீதிமன்றம் அனுமதித்துள்ளது

காணாமற்போனவர்களான - சிவகுரு தங்கத்துரை (நாவற்குழி மேற்கு), செல்லத்துரை நந்தகுமாரன் (புத்தூர் கிழக்கு), பொன்னையா ஜெயராசா (நாவற்குழி தெற்கு), லோகேஸ்வரன் சேரன் (அரியாலை), பூதத்தம்பி யதீஸ்குமார் (புத்தூர் கிழக்கு), சுப்பிரமணியம் சுதாகரன் (அரியாலை) ஆகியோரின் உறவினர்கள் யாழ்.மேல் நதிமன்றத்தில் ஆள்கொணர்வு மனுககளைத் தாக்கல்செய்திருந்தனர்.

இவை தொடர்பான வழக்கு யாழ். மேல்நீதிமன்ற நீதிபதி கே.பி.எஸ். வரதராசா முன்னிலையில் நேற்று முனதினம் விசாரணைக்கு எடுக்கபபடடது.

இந்த வழக்கில் எதிர்மனுதாரர்களான படைஅதிகாரிகள் சார்பில் பதிலாள் பத்திரம் மற்றும் ஆட்சேபனைகளை சமர்ப்பிக்க வசதியாக அடுத்த மாதம் 24 ஆம்திகதி இந்தவழக்கு அழைக்கப்படும் என நீதிபதி அறிவிததார். (ஒ-3-ரி)

---

## குண்டின் சிதறல்கள் பகுப்பாய்வுக்கு

யாழ். சிவன் பண்ணை வீதியில் உள்ள கணனி நிலையம் ஒன்றின் அருகே வெடித்த குண்டின் சிதறல்களைக் கொழும்பு ஆய்வுப்பகுப்பாய்வுத் திணைக்களத்திற்கு பரிசோதனைக்காக அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக யாழ்.பொலீஸ் நிலையக் குற்றத்தடுப்புப்பிரிவு பொலஸார் தெரிவித்தனர்.

கடந்த 23ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை இந்தக் குண்டுவெடிப்பு இடம்பெற்றது. மறுநாள் விசாரணை செய்யச்சென்ற பொலீஸார் வெடிகுண்டுச் சிதறல்களை கண்டெடுத்தனர்.

இதுதொடர்பாக பரிசோதனை முடிவுகள சில நாள்களில் தெரிந்துவிடும் என்று குற்றத்தடுப்புப் பிரிவு பொலீஸார் தெரிவித்தனர். இதேவேளை இச்சமபவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்ட நபரின் வாககுமூலம் பதிவுசெய்யப்பட்டபின் விடுவிக்கப்பட்டார். (ஒ-7)

# இவர் உண்மையில் மோட்டார் சைக்கிள் ஒன்றின் பாவனையாளர்.

**"தொழிலுக்கும் தொல்லையில்லை...
வீட்டு வேலைக்கும் தொந்தரவில்லை !**




ரொஷான் சாமிக்க விக்ரமசிங்ஹ
தொடர்புபடுத்தும் அதிகாரி
ஓஷனிக் லொஜிஸ்டிக் (பிரைவேட்) லிமிட்டட்

"முன்பு என்னிடம் ஒரு ரீ-கண்டிஷன் மோட்டார் சைக்கிள் தானிருந்தது. பெற்றோல் செலவுக்கென்றே அதிகளவு பணம் விரயமானது. தற்செயலாக பத்திரிக்கையில் Caliber 115 மோட்டார் சைக்கிளின் விளம்பரத்தைப் பார்த்தேன். அக் கணமே எனக்கேற்ற மோட்டார் சைக்கிள் இதுவே என்று முடிவு செய்ததோடு, ∴பினான்ஸ் முறையில் Caliber 115 மோட்டார் சைக்கிள் ஒன்றை வாங்கினேன்.

என்னுடைய தொழிலைப் பொறுத்தவரையில் துறைமுகம், ஷிப்பிங் லைன் தொகுதிகள் மற்றும் வங்கிகளுக்கு பல்வேறு சந்தர்ப்பங்களில் போகவேண்டியிருக்கும். எந் நேரமானாலும் குறிப்பிட்ட இடத்திற்கு, குறித்த வேளையில் போகவேண்டுமென்பதால் நான் Caliber 115 மோட்டார் சைக்கிளையே பயன்படுத்திவருகின்றேன். அது வீட்டு வேலைகளுக்கும் வசதியானது. திருமணங்களுக்குக் கூட நான் Caliber 115 ல் தான் பயணம் செய்கிறேன்.

Caliber 115 மோட்டார் சைக்கிளின் கவர்ச்சிகரமான தோற்றம், டிஸ்க் பிறேக்,பிரகாசமான ஹெலஜன் லைட் ஆகிய அம்சங்கள் எனக்கென்றே அமைக்கப்பட்டது போல் நான் கருதுகிறேன். **K - Tec** தொழில்நுட்பம் கொண்டதால் பெற்றோலுக்கு ஆகும் செலவும் குறைவு தான்.

மோட்டார் சைக்கிளை வாங்கிய நாள் முதல் டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்டின் உதிரிப்பாக சேவை வலையமைப்பினர் வழங்கும் சேவையானது அளப்பரியது. எமது அலுவலகத்தில் பணியாற்றும் அநேகமானோர் இப்பொழது பஜாஜ் மோட்டார் சைக்கிளைத் தான் பயன்படுத்துகின்றார்கள்."

"ஏனையோரைவிட மோட்டார் சைக்கிளின்
பெருமையையும், பெறுமதியையும் நன்குணர்ந்தவர்கள்,
அதைப் பாவித்துப் பயனடையும் நாம் மட்டுமே."

**பஜாஜ்** இலங்கையில் மும்முரமாக விற்பனையாகும் மோட்டார் சைக்கிள்.

DPMC **டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்.**

75, ஹைட் பார்க் கோனர், கொழும்பு - 2. தொலைபேசி : 4700600. தொலைநகல் : 4700677, 2687175.
மோட்டார் சைக்கிள் பற்றிய விபரங்களுக்கான அவசர அழைப்பு : 4715050.
இணைய தளம் : http://www.dpmco.com
பிராந்திய அலுவலகங்கள் : கண்டி, மாத்தறை, அம்பாறை, தெஹியத்தக்கண்டிய, அனுராதபுரம், இரத்தினபுரி, புத்தளம், நுவரெலியா, யக்கலை, பதுளை, திருகோணமலை, மத்துகமை.
சகல பிராந்திய அலுவலகங்களினதும் பொதுவான தொலைபேசி எண்கள்: 4700600.

mel ads 3/9/2505

# யாழ். பல்கலை. வாண்மை விருத்திக்கு ரூ. 235 மில்லியன் உலக வங்கி வழங்கும்

யாழ்ப்பாணம்,ஏப்.29

யாழ். பல்கலைக்கழகத்தின் மாண வர் மற்றும் ஆசிரியர்களின் வாண் மையை விருத்தி செய்வதற்காக 235 மில்லியன் ரூபாவை உலக வங்கி வழங்க முன் வந்துள்ளது.

ஜனாதிபதிக்கும் துணைவேந்தர் களுக்கும் இடையில் கடந்த திங் கட்கிழமை நடந்த சந்திப்பில் இந் தத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

நாட்டிலுள்ள சகல பல்கலைக் கழகங்களின் துணைவேந்தர்களும் ஜனாதிபதியை ஜனாதிபதி மாளிகை யில் சந்தித்துக் கல்வி முன்னேற்றம் குறித்து ஆராய்ந்தனர்.

பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலும் மாணவர், ஆசிரியர்களின் வாண்மையை அபிவிருத்தி செய்ய வேண்டியதன் அவசியம் குறித்தும் - பட்டம் பெற்று வெளியேறுபவர் களுக்கு வேலைவாய்ப்பை அளிக் கும் விடயத்தில் பல்கலைக்கழகங் களும் தமது பங்களிப்பை வழங்க வேண்டும் என்றும் - ஜனாதிபதி இச்சந்திப்பில் தெரிவித்தார்.

சகல பல்கலைக்கழகங்களுக் கும் பல்வேறு திட்டங்களுக்கு உலக வங்கி நிதி உதவிகளை வழங்க முன்வந்துள்ளது. அந்த நிதியை விரைவாகவும் திட்டமிட்டபடியும் செல விட்டு, அதனால் முழுப் பயன்பெற அனைவரும் உதவவேண்டும் என்று ஜனாதிபதி அப்போது கேட்டுக்கொண் டார்.

உலக வங்கியின் உதவித் திட் டத்தின் கீழ் யாழ். பல்கலைக்கழகத் துக்கு -

★ மாணவர்களுக்கான வசதிகளை அதிகரித்தல், சமூக ஒற்றுமை, தக வல் தொழில்நுட்பக் கல்வி, ஆங்கி லம் ஆகிய துறைகளை விருத்தி செய்வதற்கு 35.6 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

★ மாணவர் மற்றும் ஆசிரியர் வாண் மையை விருத்தி செய்வதற்காகவும் மாணவரின் தரத்தை உயர்த்துவதற் குத் தேவையான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காகவும் தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தக் கூடிய திட்டங்களை வகுப்பதற்காகவும் ஆராய்ச்சிப் பணிகளை மேம்படுத்து வதற்காகவும் வகுக்கப்படும் திட்டங் களுக்கு 200 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

★ பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டம்.

மாணவர்களின் விடுதி வசதி கள், தகவல் தொழில்நுட்ப வசதி கள் ஆகியவற்றுக்கு முன்னுரிமை ஆகிய உதவிகள் கிடைக்க உள் ளன. (ஒ-3)

# கல்விச்சாலைக் காட்சிகள்



உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொ யாழ். இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் அ.பஞ்சலிங்கம் ட வழங்குவதைப் படத்தில் காணலாம். வித்தியாலய அதிபர் க.ஆ ராசாவும் படத்தில் காணப்படுகிறார். *(படம்: அச்சுவேலிச் செய்தியாளர்)*



பாஷையூர் சென்.அன்ரனிஸ் மகளிர் வித்தியாலயத்தின் மாணவத் தலைவர்களுக்குச் சின்னம் சூட்டும் நிகழ்வு அண்மையில் நடைபெற்ற போது மாணவி ஒருவருக்கு அதிபர் திருமதி எம்.சி.செல்வநாயகம் சின்னம் சூட்டுவதைப் படத்தில் காணலாம். உப அதிபர் திருமதி ச.ஜோர்ஜ், பங்குத்தந்தை வண. பிதா எம்.யேசுரட்ணம் ஆகியோரும் படத்தில் உள்ளனர். (10)

# மக்களுக்கு நெருங்கிய நிறுவனங்களாக அரச நிறுவனங்களை மாற்றுங்கள்

## அமைச்சர்கள், பிரதி அமைச்சர்களுக்கு ஜனாதிபதி உத்தரவு

கொழும்பு,ஏப்.29

அரச நிறுவனங்கள் அனைத்தை யும் மக்களுடன் நெருங்கிய தொடர்பு பட்ட நிறுவனங்களாக மாற்றும்படி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சகல அமைச்சர்களுக்கும் பிரதி அமைச்சர்களுக்கும் உத்தரவு பிறப் பித்துள்ளார்.

மே மாதம் முதலாம் திகதி முதல் இத்திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவருமாறு அவர் அமைச்சர் களுக்கு எழுதிய கடிதத்தில் தெரி வித்துள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக் கப்பட்டுள்ளதாவது:-

மக்கள், ஐக்கிய மக்கள் சுதந் திரக் கூட்டமைப்புக்கு வழங்கியுள்ள ஆணையின்படி மக்களுக்கு நாம் அளித்த வாக்குறுதிகளை நிறை வேற்றவேண்டிய கடமைப்பாடு எமக்கு இருக்கிறது. இதை சகல அமைச்சர்களும் நிறைவேற்றவேண டும்.

கடந்த அரசின் ஆட்சிக் காலத் தில் அரச நிறுவனங்கள் மக்களை விட்டு வெகுதூரத்திலேயே இருந்து செயற்பட்டன. மக்களின் தேவை களைப் பூர்த்திசெய்யாமல் தனியார் நிறுவனங்கள் போல் சுயலாப நோக் குடன் செயற்பட்டுவந்தன. அந்த நிலை மாற்றியமைக்கப்படல் வேண் டும். அரச நிறுவனங்களில் கடமை யாற்றும் ஊழியர்களின் சகல தேவை களும் நிறைவேற்றப்படவேண்டும்.

அரச நிறுவனங்கள் மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்யும் மக் கள் நிறுவனங்களாகச் செயற்படு வதையே நாட்டுமக்கள் விரும்பு கின்றனர். நாட்டை முன்னேற்றுவது என்பது எமது தாரக மந்திரம். இதன் மூலம் நாடு அபிவிருத்தியடையும் என நம்புகிறேன்.

எதிர்வரும் 29ஆம் திகதி (இன்று) பிற்பகல் சகல அரச நிறுவனங்களி லும் மேற்கொள்ளவேண்டிய உட் கட்டமைப்பைச் சரியாக ஒழுங்கு படுத்தி அந்த நிறுவனங்கள் சிறப் பாக இயங்கப் பாடுபடவேண்டும். 30ஆம் திகதி பிற்பகலுக்குள் சகல குறைபாடுகளையும் பூர்த்திசெய்து மே மாதம் முதலாம் திகதி முதல் புதுத்தெம்புடன் நிர்வாகக் கட்டமைப் புகள் நிறைவேற்றப்படவேண்டும்.

சிரமதான முறையில் இந்தக் காரியங்கள் மேற்கொள்ளப்படவேண் டும். பணிகள் நிறுவனத்தின் உய ரதிகாரிகள் தலைமையில் நடை பெறவேண்டும். மேற்குறிப்பிட்ட இரண்டு தினங்களில் இவை செய்துமுடிக்கப் படல் வேண்டும் என அவர் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார். (க)

# பாடசாலையை மீள இயக்குவதற்கு கண்ணிவெடி அச்சம் முட்டுக்கட்டை

தென்மராட்சி,ஏப்.29

எழுதுமட்டுவாழ் வடக்கு அரசி னர் தமிழ் கலவன் பாடசாலை வளா கத்தில் கண்ணிவெடிப் பரிசோதனை இடம்பெறாததால் அப்பாடசாலையை ஆரம்பிப்பது தாமதமாவதாகப் பாட சாலைச் சமூகத்தினர் கவலை தெரி விக்கின்றனர்.

அதியுயர் பாதுகாப்பு வலயத்திற் குள் அமைந்திருந்த இப்பாடசாலை கடந்த இரு மாதங்களுக்கு முன்னர் இராணுவத்தினரால் கையளிக்கப்பட் டது. இப்பாடசாலை வளாகம் இன்னும் கண்ணிவெடி அகற்றும் பிரிவினரால் பரிசோதிக்கப்படவில்லை. ஆகவே, அதற்குள் எவரும் நுழையமுடியாதுள ளது.

இதனால், இப்பாடசாலையை மீண் டும் ஆரம்பிப்பதற்கென கடந்த செவ் வாய்க்கிழமை துப்புரவு செய்யச்சென்ற பாடசாலைச் சமூகத்தினரைப் பாட சாலை வளாகத்தினுள் செல்லவிடாது படையினர் திருப்பி அனுப்பிவிட்ட னர் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, இப்பாடசாலையில் நடைபெறவிருந்த சிரமதானத்தில் கலந்துகொள்ளச் சென்ற நாடாளு மன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் படை அதிகாரிகளுடன் கலந்துரையாடிய தையடுத்து விரைவில் பாடசாலை வளாகத்தைக் கண்ணிவெடி அகற் றும் பிரிவினரால் பரிசோதிக்க இணக கம் காணப்பட்டதாகத் தெரிவிக்கப் பட்டது.

இதுதொடர்பாகத் தென்மராட்சிக் கல்வி வலயப் பணிப்பாளருடன் தொடர்புகொண்டு கேட்டபோது பாட சாலை இன்னமும் வலயப் பணி மனையிடம் கையளிக்கப்படாததால் மீளத்திறப்பது பற்றி முடிவுசெய்யப் படவில்லை எனத் தெரிவித்தார். (ஒ-117)

## தொழில்நுட்பப் பயிற்சி நெறி

யாழ்ப்பாணம்,ஏப்.29

கட்டுநாயக்க தொழில்நுட்ப வியலாளர் பயிற்சி நிறுவனத்தில் எந் திரவியல் விஞ்ஞான டிப்ளோமா பயிற்சிபெற விரும்புபவர்களிடமி ருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள் ளன.

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் விஞ்ஞான பாடத்தில் சித்தியடைந்த 18 வயதுக்கும் 25 வயதுக்கும் இடைப் பட்டவர்கள் இப்பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்கலாம்.

இது தொடர்பாக மேலதிக விவ ரங்களை இல.7, கோயில் வீதி, யாழ்ப்பாணம எனும் முகவரியிலுள்ள தேசிய பயிலுநர் கைத்தொழில் அதிகார சபையின் அலுவலகத்தில் பெற்று விண்ணப்பங்களை ஜூன் மாதம் 6ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட் டுள்ளது. (ஒ-ரி)



கொழும்புத்துறை இந்துமகா வித்தியாலயத்தின் இல்ல மெய்வன் மைப் போட்டி அண்மையில் நடைபெற்றபோது பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் த.அருணகிரிராஜா உரையாற்றுவதையும் பாடசாலை அதிபர் திருமதி வி.சிவபாலன், ஓய்வு பெற்ற ஆசிரியர் எஸ்.சச்சிதானந்தசிவம் ஆகியோர் அமர்ந்திருப்பதை யும் படத்தில் காணலாம். *(படம்: அரியாலைச் செய்தியாளர்)*

# புலன் வலுக்குறைந்த மாணவர்களுக்கு தொண்டு நிறுவனங்கள் உதவவேண்டும்

## துறைசார்ந்தோர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம்,ஏப்.29

புலன் வலுக்குறைந்த மாணவர் களுக்கு உதவத் தொண்டு நிறு வனங்கள் முழுமனத்துடன் செயற் படவேண்டும் என்று கல்வித் துறை சார்ந்தோர் வேண்டுகோள் விடுத் துள்ளனர்.

பாடசாலைகளில் இருந்து மாண வர்கள் இடைவிலகும் சூழ்நிலையில் கல்வியில் ஆர்வம் கொண்டு கற்ற லைத் தொடரும் வலுக்குறைந்த மாணவர்களுக்கு உதவுவது அனை வரின் கடமையாகும் என்றும் அவர் கள் தெரிவித்தனர்.

யாழ். கல்விக் கோட்டப் பாட சாலைகளில் மட்டும் புலன்வலுக் குறைந்த மாணவர்கள் 47 பேர் கல்வி கற்று வருகின்றனர் என்று புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை -

கடந்த ஜனவரி மாதம் யாழ். மாவட்டத்தில் திரட்டப்பட்ட புள்ளி விவரங்களின்படி 2 ஆயிரத்து 275 மாணவர்கள் யாழ். மாவட்டப் பாட சாலைகளில் இருந்து இடைவிலகி யுள்ளனர்.

யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் 648 மாணவர்களும் வலிகாமம் கல்வி வலயத்தில் 527 மாணவர்களும் வடமராட்சிக் கல்வி வலயத்தில் 270 மாணவர்களும் தென்மராட்சிக் கல்வி வலயத்தில் 470 மாணவர்களும் தீவ கக் கல்வி வலயத்தில் 360 மாண வர்களும் பாடசாலைகளில் இருந்து இடைவிலகியுள்ளனர். மாணவர்களின் இடைவிலகலுக்கு வறுமையே முக் கிய காரணமாகப் பாடசாலை அதி பர்களினால் கூறப்படுகின்றது.

பாடசாலைகளில் இருந்து மாண வர்களின் இடைவிலகலைக் கட்டுப் படுத்த சம்பந்தப்பட்ட அனைவரும் முழுமூச்சுடன் செயற்றிட்டங்களை வகுத்து நடைமுறைப்படுத்த வேண் டும் என்றும் - கல்வித்துறை சார்ந் தோர் கருத்து வெளியிட்டனர். (ஒ-12)

## இலக்கிய விரிவுரை

யாழ்ப்பாணம்,ஏப்.29

கொழும்புக் கம்பன் கழகம் நடத் தும் 'இலக்கியத் தொடர் விரிவுரை' எதிர்வரும் முதலாம் திகதியிலிருந்து 8ஆம் திகதிவரை தினமும் மாலை 6மணிக்கு கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடைபெறவுள் ளது.

இந்த இலக்கியத் தொடர் விரி வுரையில் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஸ்ரீமதி இரா.ருக்மணி 'மகாபாரதம்' பற்றி விரிவுரையாற்றவுள்ளார். 'நதிக் கரை நாணல்', 'செம்புலப்பெயல்நீர்', 'புள்ளிமாறியகோலம்', 'வெளிச்சப் பொட்டுகள்', 'கவிதை அரங்கேறி யது', 'வாழ்க்கைக் கணக்கின் வரவு செலவுகள்', தவறான இசைக்கு சரி யான பாடல்', புதிய பூபாளம்' போன்ற தலைப்புக்களில் அவரது விரிவுரை கள் இடம்பெறவுள்ளன.

மேற்படி இலக்கிய விரிவுரைகளை வருடந்தோறும் கம்பன் கழகம் நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது. (ஒ-ரி)



கல்வியங்காடு இந்து தமிழ் கலவன் பாடசாலையில் புதிதாக அமைக்கப்பட்ட நீர்த்தாங்கிக் கட்டடத்தை யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் திறந்து வைப்பதைப் படத்தில் காண லாம். பாடசாலை அதிபர் திருமதி த.கமலராஜாவும் படத்தில் உள் ளார். *(படம்: கோண்டாவில் செய்தியாளர்)*

நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு, இளநரை, தலையிடி, தலைப்பாரம், மூக்கினால் இரத்தம் வடிதல், காதடைப்பு, கண்மங்கல் என்பவற்றால் அவதிப்படுகிறீர்களா?

இதோ பாவியுங்கள்!

கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும், கறுப்பாகவும், அழகாகவும் வளரச் செய்யும் சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட

**சித்தாரா பொன்னாங்காணி தைலம்**

யாழ்.குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.


Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road,
Chilaw.
(Reg.No.:-6382)AR/PR/No.-228

யாழ்.மாவட்ட
ஏக விநியோகஸ்தர்:-
சிவா நறுமணப் பூங்கா
இல. 288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பேசி இல.-021-222-2567

(26-11-19) (குறிப்பு:- சத்திரச்சந்திக்கு அண்மையில்) (சி-34194)

## நான்காம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 04 – 01 – 1936



உதிர்வு 02 – 05 – 2001

**திருமதி இராசரத்தினம் பாக்கியம்**

திதி:29.04.2004 பூர்வபக்கத் தசமி

எமது அன்புத் தெய்வமே! ஆண்டுகள் நான்கு மறைந்தாலும்
உங்கள் நினைவுமட்டும் மறையவே மறையாது!

எழுதுமட்டுவாள் தெற்கு,
எழுதுமட்டுவாள்

பிரிவால் துயருறும்:
அன்புக் கணவர் - இராசரத்தினம்.

(31057)(42-26-11-19)

## நினைவஞ்சலி

**திருமதி நகுலேஸ்வரி நாகலிங்கம்**

லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரியின் உபஅதிபர்
வைத்திய கலாநிதி நாகேஸ்வரி நாகலிங்கம்,
வட-இலங்கை சுதேச மருத்துவச்சபையின்
கௌரவ செயலாளர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன்
ஆகியோரின் அன்புத் தாயாரான
திருமதி நகுலேஸ்வரி நாகலிங்கம் அவர்கள்
சிவபதமடைந்து 31ஆவது நாள் நினைவு ஆராதனையில்,
அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

**லங்கா சித்தஆயுர்வேத**
**மருத்துவக் கல்லூரிச் சமூகம்.**

(31366) (26-11-19)

## ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு 09 – 01 – 1981



உதிர்வு 11 – 05 – 2003

**சிவஞானம் விஜிதரன்**

திதி: 29.04.2004

முடிந்ததுவே ஓராண்டு எமைப்பிரிந்து நீ மாண்டு
எம் வாழ்வில் இருள் சூழ்ந்து முடிந்ததுவே ஓராண்டு
மீண்டும் நம் குடும்பத்தில் நீ பிறந்து வரவேண்டும்
இருண்ட நம் வாழ்வுக்கு ஒளியைத் தரவேண்டும் எம் செல்வமே!
உன் ஆத்மாசாந்தி அடையப் பிரார்த்திக்கிறோம்.
ஓம்சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சம்பந்தர் கடையடி,
கரவெட்டி மத்தி,
கரவெட்டி. (31303)(26-11-19)

உன்பிரிவால் துயருறும்:
**அம்மா, அப்பா, அண்ணா,**
**உற்றார், உறவினர்,**
**நண்பர்கள்.**

## 'ஹெல்மெற்' அணிவது கட்டாயம்

தென்மராட்சி,ஏப்.29

சாவகச்சேரி பொலீஸ் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மோட்டார் சைக்கிளில் பயணஞ்செய்வோர் கட்டாயம் தலைக்கவசம் (ஹெல்மெற்) அணிய வேண்டுமென பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.பீ.என்.அபேசிங்க அறிவித்துள்ளார்.

மோட்டார் சைக்கிள் செலுத்துபவரும் பின்இருக்கையில் அமர்ந்திருப்பவரும் தலைக்கவசம் அணிய வேண்டுமெனவும் தலைக்கவசம் அணியாது மோட்டார் சைக்கிளில் செல்வோர்மீது சட்டநடவடிக்கை மேற்கொளளப்படுமெனவும் அவர் அறிவித்துள்ளார்.

மே மாதம் முதலாம் திகதி தொடக்கம் மோட்டார் சைக்கிள்களில் செல்வோர் போக்குவரத்துப் பிரிவுப் பொலீஸாரால் கண்காணிக்கப்படுவர் எனவும் தெரிவித்தார். (10-117)

## ஆரம்பக் கூட்டம்

கோப்பாய்,ஏப்.29

நியாப் திட்டத்தின்கீழ் கோப்பாய் உச்சுவில்குளம் புனரமைக்கப்படவுள்ளது. இது தொடர்பான ஆரம்பக் கூட்டம் எதிர்வரும் 3ஆம் திகதி பிறபகல் 3மணிக்கு கோப்பாய் நாவலர் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இதேவேளை நியாப் வேலைத் திட்டத்தின் கீழ் வாதரவத்தை பெரிய குளம் புனரமைப்புத் திட்டம் தொடர்பான ஆரம்பக் கூட்டம் இன்று வியாழக்கிழமை காலை 9மணிக்கு வாதரவத்தை கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது (10-72)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஏப்.29

தீவுப்பகுதி மக்களின் பிரச்சினைகளை ஆராய்வது தொடர்பான கலந்துரையாடல் இன்று வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு புங்குடுதீவு தென்னிந்திய திருச்சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இநதக் கலந்துரையாடலில் இலங்கைத் தமிழ்அரசுக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் கலந்துகொள்வார். (10-ரி)

## ஓராண்டு நினைவலைகள்

தோற்றம் 1946 – 05 – 21



மறைவு 2003 – 05 – 11

**அமரர் கார்த்திகேசு தர்மலிங்கம்**

திதி: 29.04.2004

கண்நிறைந்த கணவனாய் வாழ்வு தந்து
பாசமிகு தந்தையாய் உயர்வு தந்து
தாளாத வேளையில் தவிக்கவிட்டுப் போனீர்களே
ஓராண்டு சென்றாலும் உங்கள் நினைவுகள்
எங்கள் நெஞ்சைவிட்டு அகலாது!

அண்ணாசிலையடி,
கரணவாய். (31282)(42-11-19-26) - குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



எமது அன்புக்கும் மதிப்புக்குமுரிய
சிறந்த ஏழுத்தாளர்
**திரு.செ.கணேசலிங்கம்**
அவர்களின் இனிய இல்லத்தரசி
**திருமதி க.மீனாம்பாள்**
(குமரன் பதிப்பக உரிமையாளர் - கொழும்பு)

இவ்வுலக வாழ்வு துறந்து இயற்கையெய்திய செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்து துவண்டு விட்டோம். இழப்பால் கலங்கி நிற்கும் துயரத்தில் நாமும் பங்கெடுக்கின்றோம்.

புகையிரத நிலைய வீதி,
சாவகச்சேரி.
(31409) (26-11-19)

துயரில் பங்குகொள்ளும்:
திரு.திருமதி பொன்னம்பலம் குடும்பத்தினர்,
திரு.திருமதி செல்வரெத்தினம் குடும்பத்தினர் (ஜேர்மன்).

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



**அமரர் அருளம்பலம் கிருஷ்ணமோகன்**

(மோகன்)

(உரிமையாளர், துளசி வர்த்தக நிலையம், யூனிவேசல்ரெலி, இருபாலைச் சந்தி)


கடந்த 30-03-2004 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர் *அருளம்பலம் கிருஷ்ணமோகன்* அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (29-04-2004) வியாழக்கிழமை முற்பகல் நடைபெற்று, அதனைத் தொடர்ந்து எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் தங்கள் குடும்ப சகிதம் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

இருபாலைச் சந்தி,
கோப்பாய். (31417) (26-11-19)

என்றும் உங்கள் நினைவுடன் தவிக்கும்:
**மனைவி, பிள்ளைகள்.**

# யதார்த்த நிலையை உணர்ந்து அரசு செயற்பட வேண்டும்



(மூலவடிவம்: டெய்லி மிரர்)

பொதுத்தேர்தலில் வெற்றிபெற்றவுடன் தங்களின் பிரதான எதிரியான ஐக்கிய தேசிய முன்னணியினரையும அவர்களின் ஆதரவாளர்களையும் தலைகுனியச் செய்துவிட்டதாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினர் பெருமைப்பட்டுக் கொண்டனர். குறிப்பாகத் தேர்தல் முடிவுகள் அறிவிகப்பட்ட விதம் - தென்பகுதி முடிவுகள் முதலில் அறிவிக்கப்பட்டமை முன்னணிக்கு அமோக வெற்றி கிட்டப்போவதான ஒரு பிரமையைத் தோற்றுவித்திருந்தன. அதேவேளை நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை கிடைத்துவிட்டது போன்றும் பெரிய எடுப்பில் அரச ஊடகங்களில் பிரசாரம் செய்யப்பட்டது.

ஆனால், உண்மையில் என்ன நடந்தது? நாடாளுமன்றில் பெரும்பான்மை ஆசனங்களைப் பெறுவதற்கு ஐ.ம.சு.முன்னணி தவறிவிட்டது. 50வீத செல்வாக்கு வாக்குகளையும் கூடப் பெறவில்லை. 46வீதமே கிடைத்தது. இந்தத் தோல்வியின் பெறுபேறுகள் இப்பொழுது வெளிப்படையாகி வருகின்றன.

நாடாளுமன்றின் சபாநாயகர் தெரிவில் தமது வேட்பாளரை வெற்றிபெறச செய்யமுடியாமல் போயிருப்பது இனிவரப்போகும் பல தோல்விகளுக்கு கட்டியம்கூறும் சம்பவமாக எடுத்துக் கொள்ளலாம். ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தனக்குக் கிடைத்துள்ள மட்டுப்படுத்தப்பட்ட மக்கள் ஆணையைப் புரிந்துகொண்டு, பிரச்சினைகளை இணைநதுத் தீர்த்துக்கொள்ளும் மனப்பான்மையுடன் ஏனைய கட்சிகளுடன் கைகோத்துக் கொள்ளத் தீர்மானித்தாலன்றி எதிர்கால தோல்விகளைத் தவிர்க்க முடியாது.

### சிறுபான்மை மக்கள் ஆதரவு

சிங்கள வாக்காளர்களின் கணிசமான ஆதரவு கிடைத்திருப்பதையும் ஐ.தே.கவைத் தோற்கடித்ததையும் வைதுக்கொண்டு அரசுக்கு அசைக்க முடியாத பெரும்பான்மை கிடைத்துவிட்டதாகப் பிரசாரத்தில் ஈடுபட்டவர்கள் ஒன்றை மறந்து விட்டார்கள். அல்லது வேண்டுமென்றே யோசிக்கத் தவறிவிட்டார்கள் - ஐ.மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு குறிப்பிட்ட அளவில் இனரீதியிலான சிறுபான்மையினரின் ஆதரவைப்பெறத் தவறிவிட்டது என்பதே அது. தேசிய தேர்தல் களத்தில் சிறுபான்மை இனத்தவர்களுக்கும் காத்திரமான பங்கு இருக்கின்றது.

சபாநாயகர் தேர்வின்போது இந்த நிலைமை, கடந்தவாரம் தெட்டத் தெளிவாக வெளிப்பட்டது. வடக்கு - கிழக்கிலிருந்து தெரிவான தமிழ்உறுப்பினர்கள் மலையகத்திலிருந்து தெரிவான தமிழ் உறுப்பினர்கள் மற்றும் அநேக முஸ்லிம் உறுப்பினர்களும் ஐ.தே.கவுடன் ஒன்று சேர்ந்து அரசின் வேட்பாளரைத் தோற்கடித்தார்கள். ஐ.தே.க. வேட்பாளரை வெற்றிபெறச் செய்தார்கள்.

நாடாளுமன்றின் ஆரம்பக் கூட்டததிலே ஏற்பட்ட குழப்பகரமான சம்பவங்கள் தேசிய மட்டத்தில் ஏற்பட்டுள்ள பிரிவு மனப்பான்மைகளை தெட்டெடன எடுத்துக் காட்டின.

### அதிகார சமநிலை

சபாநாயகர் தெரிவில் அரசுக்கு ஏற்பட்ட தோல்வியானது அதிகாரம் எப்பொழுதுமே ஒரே கட்சியிடம் இருக்காது என்பதை நினைவூட்டின. பதிலாக அதிகாரம் ஆட்சியிலிருக்கும் கட்சிகளுக்கிடையிலும் எதிர்க்கட்சிகளிடமும்கூட பகிர்ந்துகொள்ளவேண்டியிருக்கும் என்பது தெளிவாயிற்று. கடந்த நாடாளுமன்றத்திலும் இதே நிலைதான் நீடித்தது. முன்னைய ஐ.தே.கட்சி அரசுக்கு நாடாளுமன்றத்தைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் இருந்தது. பொதுவான சட்டவாக்கங்கள் பிரச்சினையின்றி நிறைவேற்றப்படக் கூடியதாய் இருந்தது. ஆனால், அபரிமிதமான நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்டுள்ள ஜனாதிபதியைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் இருக்கவில்லை. ஆட்சியின் மிக முக்கியமான ஒரு பகுதியான இது எதிர்க்கட்சியின் கைகளில் இருந்தது.

## சிறுபான்மை மக்களின் ஆதரவு எதிர்காலத்தில் தேவைப்படலாம்

இம்மாதிரி நிலைமையில் எதிர்க்கட்சிகளின் ஒத்துழைப்பின்றி ஆட்சியைக்கொண்டு நடத்துவது சாத்தியமில்லை. முன்னைய ஆட்சி ஜனாதிபதியோடும் அப்போதைய எதிர்க்கட்சியினரோடும் ஒத்துப் போகமுடியாமல போனதால் அதன் அரைவாசி ஆட்சிக காலத்தையும் கூட ஓட்டமுடியவில்லை. இதன் விளைவாக ஜனாதிபதி அவ்வரசைக் கலைத்துவிட்டார். அவரையே அதிகாரமற்றவராக்குவதற்கு முயற்சிகள் இடம்பெற்றன.

அதேசமயம் முன்னைய அரசு அமைதிப் பேச்சுக்களை முன்னெடுத்துச் செல்வதிலும் சிக்கலுக்குள் மாட்டிக்கொண்டிருந்தது. அதிகாரப் பரவலுக்கான ஓர் ஏற்பாட்டைத் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் செய்துகொள்ளமுடியாமல் போயிற்று. அதனால் அமைதிப் பேச்சுக்களும் இடைநிறுத்தப்பட்டன.

அதிகாரங்கள் ஜனாதிபதிக்கும் அரசுக்குமிடையில் பகிரப்பட்டிருந்தமையால் முன்னைய அரசினால் அதிகாரங்களை துஷ்பிரயோகம் செய்ய முடியாத ஒரு நிலை இருந்தது. அதாவது, இருதரப்பும் ஒருவரை ஒருவர் கண்காணித்துக் கொள்ளக் கூடியதாய் இருந்தது.

### பிக்குகள் மீது வசைபுராணம்

நாடாளுமன்றில் சபாநாயகர் பதவியைக் கைப்பற்றிக்கொள்ள முடியாமல் போனமை அரசுதரப்பினருக்கு மிகக்கசப்பான அனுபவத்தையே கொடுத்திருக்கும். அரசுக்கு எதிராக வாக்களித்த பிக்குகள் மீது வசைபாடுவதையே ஓர் இயக்கமாக அரச ஊடகங்கள் நடத்திவந்தன. அவர்கள எந்த அளவு வெறுப்படைந்திருந்தார்கள் என்பதை அதுகாட்டியது. அரசு சார்பு அரசியல்வாதிகள், ஹெலஉறுமய உறுப்பினர்கள், தமிழ்கூட்டமைப்பினருடன் சேர்ந்து வாக்களித்திருந்ததை மிகவன்மையாகக் கண்டித்திருந்தனர். தமிழ்க்கூட்டமைப்புப் பிரிவினவாத ஈழம்வாதிகள் என்று அவர்கள் விமரிசித்திருந்தனர். சிங்கள மொழியில் இவை அதிக கருத்துக் கொண்ட சொற்களாகும்.

பௌத்த பிக்குகளதும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினதும் ஒத்துழைப்பை எதிர்காலத்தில் பெற்றுக்கொள்ள வேண்டியிருக்கும் என்பதை மறந்து சிறு அரசியல் லாபத்துக்காக தமது கோபதாபங்களை வெளியிட்டு அந்த அனுகூலமான நிலைமையைச் சிதறடித்து வருகிறார்கள்.

நோர்வேயின் அனுசரணையுடன் அமைதிப் பேச்சுக்களைத் தொடர விரும்பும் அரசு தமிழ்க் கூட்டமைப்பின்மீதும் ஹெலஉறுமய பிக்குகள் மீதும் வசைபாடுவதை நிறுத்தவேண்டும். பேச்சுகள் ஆரம்பமாக வேண்டுமெண்பதில் அக்கறையிருக்குமானால அரசு தரப்பினர் அதற்கு ஏற்றமுறையில் பேசவும் செயற்படவும் முன்வரவேண்டும்.

அமைதிப் பேச்சுக்களை ஆரம்பிப்பது பற்றி ஜனாதிபதி உடன்பாடான முறையிலேயே பேசிவருகிறார். அதேசமயம் ஜே.வி.பி. மௌனம் சாதித்து வருகின்றது.

சபாநாயகர் தேர்தலில் பௌத்த பிக்குகள் எதிர்க்கட்சிக்குச் சார்பாக வாக்களித்ததனால் அரசதரப்பினர் ஆத்திரமடைந்திருப்பார்கள் என்பது விளங்கக் கொள்ளக்கூடிய விடயம் தான். அது நியாயம் ஆனதா இல்லையா என்பதை விட புதிய அரசு தமிழ்க்கூட்டமைப்புக்கு எதிரான பகைமைப் போக்கையும் அவர்களுடன் சேர்ந்து வாக்களித்தவர்களை ஈழப் பிரிவினை வாதிகளுடன் சேர்நதுவிடடார்கள் என வசைபாடுவதையும் தொடர்ந்து கடைப்பிடிப்பது சரியல்ல. உண்மையில் புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பிக்க விரும்பினால் அரசு இந்தப் போக்கைக் கைவிடவேண்டும்.

### எதிரணியின் ஆதரவு

நாடாளுமன்றின் சபாநாயகர் நாடாளுமன்றையும் அதன் செயற்பாடுகளையும் மட்டும் கட்டுப்படுத்துபவர் அல்லர் எவர் மீதும் குற்றப்பத்திரிகை கொண்டுவரப்படுவதை அனுமதிக்கும் அதிகாரமும் அவருக்கு உண்டு அரசமைப்பு ஆணைக்குழுவின் தலைவராகவும் அவரே இருப்பார். எனவே அரசுக்கும் எதிர்க்கட்சிக்கும் இடையில் அதிகார சமநிலையைப் பேணுவதற்கு எதிர்க்கட்சியினால் தெரிவு செய்யப்பட்டுள்ள சபாநாயகரால் பெரும் பங்களிப்பு செய்யமுடியும். என்னதான் விஸ்தாரமான நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்ட ஜனாதிபதி இருந்தாலும் இந்த அரசு சிறுபான்மை அரசு தான் என்பதை மறந்துவிடக்கூடாது. எனவே, புதிய சட்டங்களை நிறைவேற்ற முனையும்போது ஒருசில எதிர்க கட்சியினரையாவது அரசு தன் பக்கம் ஈர்த்தாக வேண்டும் சபாநாயகர் தேர்வில் ஏற்பட்ட தோல்வியிலிருந்து இந்த அரசினால் ஒருதலைப்பட்சமாகத் தீர்மானங்களை நிறைவேற்றுவது சுலபமல்ல என்பதை உணர்ந்திருக்க வேண்டும். இன்றைய அரசியல் சூழ்நிலையை அவதானிக்கும் போது அரசு அரசமைப்பில் திருத்தம் ஏதும் செய்வதானால் இனரீதியிலான சிறுபான்மை மக்களின் ஆதரவைப் பெற்றுக்கொள்ள வேண்டியது அவசியம்.

அரசமைப்புத் திருத்தங்களைப் பொறுத்தவரை இத்திருத்தங்கள் சிறுபான்மை இன மக்களைக் கவரும் வகையில் அமைந்திருக்கவேண்டும். அவ்வாறு இருந்தால் மட்டுமே அவர்களால் ஆதரவு தருவதைப் பற்றி ஆலோசிக்கமுடியும். ஆனால், இதுசாத்தியமாகுமா? என்பதே இப்போதுள்ள முக்கிய கேள்வி.

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பை எடுத்துக்கொள்வோமானால், அவர்கள் பேச்சுக்கள் எதிலும் கலந்துகொள்வதானால் தமிழீழ விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ள இடைக்கால தன்னாட்சி அதிகார சபையொன்று அமைக்கப்படவேண்டும் என்ற கோரிக்கை எந்தவொரு அரசியல் தீர்வுத் திட்டமானாலும் அதில் உள்ளடக்கப்படவேண்டும் என்பதாக தெரிவித்திருக்கிறார்கள். இதிலிருந்து தமிழ்த் தரப்பினரின் ஆதரவைப் பெறுவதற்கு இடைக்கால தன்னாட்சி தீர்வுத் திட்டம் தொடர்பான அம்சங்கள் அரசமைப்பு திருத்தத் திட்டங்களால் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும் என்பது புலனாகின்றது.

ஆனால், இப்போதைய சூழ்நிலை

**ஜெகான் பெரேரா**
(தேசிய சமாதான சபை)

யால் அரசின் முக்கிய பங்காளிக் கட்சியான ஜே.வி.பி. இம்மாதிரி எந்தவொரு ஆலோசனைக்கும் உடன்படும நிலையில் இல்லை. எனவே, தமிழ்த் தேசியக்கூட்டமைப்பை அரசுடன் இணைத்துக் கொள்வது பற்றி அரசு நினைத்தே பார்க்கமுடியாத நிலையில் இருக்கிறது. மகாவலி அமைச்சுத் தொடர்பாக ஜே.வி.பி. முன்வைத்த கோரிக்கைகளை சமாளிப்பதற்கே பெரும் இழுபறிகளை எதிர்நோக்கிய அரசு இதுபோன்று இன்னும் பல பிரச்சினைகளுக்கு எதிர்காலத்தில் முகங்கொடுக்கப்போகிறது என்பது வெளிப்படை. இப்போதைய சூழ்நிலையில் அரசுக்கும் ஐ.தே.கட்சிக்கும் இடையில் ஒத்துழைப்பு எதுவும் சாத்தியமில்லாது போனாலும் எதிர்காலத்தில் அரசுக்கு ஏற்படக்கூடிய முட்டுக்கட்டைகளும் சிக்கல்களும் ஐ.தே.கட்சியுடன் அதிகமான அதிகாரப் பகிர்வுகளை மேற்கொள்ள வேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்திவிடக்கூடும். இப்படியான ஒருநிலைமையில் உண்மையான தேசிய அரசு ஒன்று ஏற்பட வாய்ப்பு ஏற்படலாம். அதில் சிறுபான்மை இனமக்களும் இணைந்திருபபார்கள் என்பது திண்ணம்.

தமிழில்: நந்தன்



தந்தை செல்வாவுடன் இணைந்து அரசியல் பணியாற்றியவர்களைக் கௌரவிக்கும் விழா கடந்த திங்கட்கிழமை யாழ்.பல்கலைக்கழகக் கைலா சபதி அரங்கில் இடம்பெற்றது.

அவ்விழாவில் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா பண்டிதர் க.சச்சிதானந்தத்துக்கு மாலை அணிவித்துக் கௌரவிக்கிறார்.

(27.04.2004 ஆம் திகதிய உதயனில் வெளியான இதேபோன்ற படம், அச்சுத் தெளிவின்றிப் பிரசுரமாகியதால் இன்று மீண்டும் வெளியிடப்படுகிறது.)

## தொடர்பு கொள்ளுமாறு அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.29

கீழே பெயர் குறிப்பிடப்பட்டவுர்களை செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவின் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

அருளம்பலம் கனகநாயகம் (பழைய உடையார் ஒழுங்கை, பருத்தித்துறை), ச.மனோகரன் (காளிகோயிலடி, இடைக்காடு), ஜேசுதாசன் பிரான்சிஸ்கா (கைதடி கிழக்கு), பூபாலசிங்கம் சரஸ்வதி (8ஆம் கட்டை - துர்க்கை அம்மன் கோயிலடி, தெல்லிப்பழை), நடராசா கனகலிங்கம் (கேணியடி ஒழுங்கை, கொக்குவில் மேற்கு), சதாசிவப் சிவகுருநாதன் (அம்மன் வீதி, திருநெல்வேலி), சுரேஸ்குமார் சிவமாலினி (விளையாட்டுத்திடல் வீதி, கல்வியங்காடு), கந்தசாமி சற்குணேஸ்வரி (கோயிலாக்கண்டி மத்தி, நாவற்குழி), ரத்தினம் கந்தசாமி (கதிர்காமக் கோயிலடி, நீர்வேலி வடக்கு), ரத்தினம் அன்னபூரணம் (ஞானவைரவர் கோயிலடி, நுணாவில்), தேவராசா ராஜேஸ்வரி (அம்மன் கோயிலடி, மானிப்பாய் மேற்கு), செபமாலை டேவிட் (வட்டாரம் 2, அல்லைப்பிட்டி).

வேலுப்பிள்ளை ரத்தினசிங்கம் (செட்டித்தெரு, பருத்தித்துறை), பொனனுத்துரை நாகேஸ்வரி (மே/பா.ப. சிவானந்தன், 10ஆம் கட்டை, புத்தூர் கிழக்கு), பாலசுப்பிரமணியம் ஈஸ்வரி (மே/பா.ப.சிவானந்தன், 10ஆம் கட்டை, புத்தூர் கிழக்கு), தேவகுலசிங்கம் கமலவதனா (அரசடி, தொண்டமனாறு), அ.பரராஜசிங்கம் (வல்லை வீதி, அச்சுவேலி வடக்கு), ஞானரத்தினம் ஜெயராணி (அட்வகேட் வீதி, வலவெட்டித்துறை), தம்பையா இளையதம்பி (பொற்பதி வீதி, கொக்குவில்), நிக்கலஸ் அடைக்கலம் (48/11 புனித மரியாள் வீதி அல்லது 29, முதலாம் குறுக்குத்தெரு, நாவாந்துறை), ராசரத்தினம் சுகந்தமலர் (ஆதி கோயிலடி, வல்வெட்டித்துறை), கந்தசாமி சின்னத்தங்கச்சி (மே/பா.சண்முகநாதன், வைரவர் கோயிலடி, நுணாவில்), ராசரத்தினம் மனோன்மணி (இன்பருட்டி, அல்வாய் வடக்கு), வேலாயுதம் புவனேஸ்வரி (முருகமூர்த்தி கோயிலடி, சாவகச்சேரி கிழக்கு), ஜெயச்செல்வம் ராஜகலா (ஆதி கோயிலடி, வல்வெட்டித்துறை), சண்முகம் செல்லமுத்து (தொல்புரம் மேற்கு, சுழிபுரம்). (10)

## அபராதம்

தென்மராட்சி,ஏப்.29

அனுமதிப்பத்திரமின்றி சாராயம் விற்பனை செய்த நபருக்கு சாவகச்சேரி நீதிவான் 3 ஆயிரம் ரூபா அபராதம் விதித்ததுடன் ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனையும் விதித்துள்ளார்.

கொடிகாமம், பருத்தித்துறை வீதியைச் சேர்ந்த சின்னையா மகேந்திரன் என்பவருக்கே மேற்கூறிய தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.(ஒ-117)

## மின்சாரம் வழங்குமாறு கோரிக்கை

வளலாய்,ஏப்.29

இதுவரை காலமும் மின்சாரம் வழங்கப்படாத கதிரிப்பாய் பகுதிக்கு மின்சாரம் வழங்குமாறு அப்பகுதி மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இப்பகுதியிலுள்ள அநேகமான மக்கள் தமது வீடுகளுக்கு மின்னிணைப்பை பெறக்கூடியதாகச் சகல வேலைகளையும் பூர்த்தியாக்கியுள்ளனர்.

இது குறித்து மின்சாரசபை அதிகாரிகளுக்கு முறைப்படி தெரியப்படுத்தியும் இதுவரையில் எதுவித பலனும் கிடைக்கவில்லை என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (10-178)

# சாயி சிந்தனை

## தெய்வத்துவம்



முதலில் அறிவு, அடுத்தது திறமை, மூன்றாவது இவற்றை சமநிலைப்படுத்துதல், நான்காவது உள்நோக்கிய பார்வை. முதல் படியில் அறிவு இருக்கிறது. இந்த அறிவை நல்லமுறையில் திறமையாகப் பயன்படுத்தும்போது முழுமையான சமநிலை ஏற்படுகிறது. இன்று அந்தச் சமநிலை காணப்படுவதில்லை. ஆனால், இப்போதெல்லாம் நாம் அறிவைத் திறமையாகப் பயன்படுத்துவதற்குப் பதில் கொன்று வருகிறோம். அதனால் வாழ்க்கையில் சமநிலை தவறுகிறது. மனித வாழ்க்கையில் சமநிலை என்பது மிகவும் அவசியமான ஒன்று. அப்போதுதான் நம்மால் உள்நோக்கிப் பார்வை செலுத்தமுடியும்.

மனிதன் மிகவும் புத்திசாலி. ஆனால், இன்று நட்பு, உடல் வலிமை, செல்வம் ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் தருகிறான். நற்குணங்களைப் பற்றியெல்லாம் நினைக்க அவனுக்கு நேரமில்லை. நல்ல குணங்கள் முக்கியமானவை. செல்வம் பெரிதல்ல, உடல் வலிமை பெரிதல்ல, மனித உயர்குண நலன்கள் இருக்கும்போது மனிதனுடைய வாழ்வு பிரகாசமாக ஒளிவீசிச் சிறக்கும். உண்மையான மனிதப் பிறவியாக வாழ்க்கை நடத்த அனைத்து முயற்சிகளையும் செய்யுங்கள். ஒரு உதாரண புருஷராய் எடுத்துக்காட்டாக, வாழ்க்கை நடத்துங்கள். சமுதாயத்தில் ஒற்றுமை வளர்க்கப் பாடுபடுவோம். அதுவே உண்மையான தெய்வத்துவம்.

*(ஆதாரம்: சனாதன சாரதி)*


# பாராட்டி வாழ்த்துகின்றோம்



அல்வாய் வடக்கைச் சேர்ந்தவரும், கிளிநொச்சி உருத்திரபுரம் 08ஆம் வாய்க்காலை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்டவரும்

ஓய்வு பெற்ற அதிபருமான

**திரு.வேலுப்பிள்ளை மகேசன்**

அவர்கள் சாவகச்சேரி மாவட்ட நீதிபதி திரு.பா.சுப்பிரமணியம் அவர்கள் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக 08.04.2004இல் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் அல்வாய் வடக்கு, இளங்கோ சனசமூக நிலைய முன்னாள் செயலாளரும், உருத்திரபுரம் கிராமிய அபிவிருத்திச்சங்கம், ஆலடி சித்தி விநாயகர் ஆலயம், சிறீ மாணிக்கப்பிள்ளையார் ஆலயம் ஆகியவற்றின் தற்போதைய தலைவரும், சிவன் கோயில் நிர்வாகியும், T.R.R.O நிர்வாகத் தலைவரும், சிறந்த சமூக சேவையாளரும் ஆவார். இவரை அல்வாய் வடக்கு அரசடி விநாயகர் அருள்பெற்று பெரு வாழ்வு வாழ பாராட்டி வாழ்த்துவதில் பெரு மகிழ்வடைகின்றோம்.

வே.தபேந்திரன் குடும்பம்,
கோ.வேல்நாதன் (சுவிஸ்) குடும்பம்,
பா.சிவபாலன் (சுவிஸ்) குடும்பம்.

(31426)(42-21-13-17)



# நல்வாழ்த்துக்கள்

*யாழ். ஆயர்*

**அதிவந்தனைக்குரிய தோமஸ் சவுந்தரநாயகம்**

ஆண்டகை அவர்களால் இன்று யாழ். மறைமாவட்டத்தின் புதிய குரவர்களாக அபிஷேகம் செய்யப்படும்



ஏழு அருட் தந்தையர்களும் இறைசேவையில் நற்பணி புரிய எமது உளம் நிறைந்த நல்வாழ்த்துக்கள்.

ஞா.பிறகேஸ்வரன் குடும்பத்தினர்
லைவ் ஸ்ருடியோ,
இல.09, 4ஆம் குறுக்குத் தெரு,
(O.L.R. தேவாலயம் முன்பாக) யாழ்ப்பாணம்.
T.P.: 0777570400, 021 222 6334

வண. யோசவ்வாஸ் வீதி,
சில்லாலை.

(31428) (24-21-13-17)


# மக்கள்ஆணை என்று உரிமை கொண்டாட சு.கூட்டமைப்புக்கு உரிமை கிடையாது!

## சுட்டிக்காட்டுகிறார் பேராசிரியர் பீரிஸ்

'மக்கள் ஆணை' என்று உரிமை கொண்டாட ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு அருகதை கிடையாது.

- இவ்வாறு கூறியுள்ளார் ஐ.தே.க. எம்.பி. ஜி.எல்.பீரிஸ்.

ஐ.தே.கட்சி சார்பில் அவர் வெளியிட்ட உத்தியோகபூர்வ அறிக்கையிலேயே இதனை அவர் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

ஐ.ம.சு.கூட்டமைப்பு, மொத்த வாகவில் ஐம்பது வீதத்தைப் பெற்றிருந்தாலும்கூட 'மக்கள் ஆணை' என்று சொந்தம் கொண்டாடுவது பொருத்தமற்றதாகவே இருக்கும். ஏனெனில், மக்கள் வாக்களிக்கும்போது பல விடயங்களைக் கருத்திற்கொள்கின்றனர்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையினை ஒழிப்பதென்று பொதுமக்கள் ஐக்கிய முன்னணி 1994 இல் வாக்குறுதி அளித்தது.

1994 ஜனாதிபதித் தேர்தலில் தெற்கில் அது அமோக வெற்றியீட்டி இருந்தது. மகியங்கனைத் தொகுதி தவிர்ந்த தெற்கின் ஏனைய எல்லாத் தொகுதிகளிலும் அதற்கு வெற்றி கிட்டியது. அப்போது நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதி முறையினையும் ஒழித்திருக்க முடியும்.

இப்போது அதனை மாற்றித்தான் தீருவேன் என்று ஒற்றைக் காலில் நிற்பதுபோல் ஏன் அப்போது நிற்கவில்லை என்ற கேள்வி எழுவதைத் தவிர்க்கமுடியாது.

அத்தோடு, அரசமைப்பு நிர்ணய சபை 1972ஆம் ஆண்டு அரசமைப்பில இருந்த ஓர் விடயம். இப்போதைய நடைமுறைக்கு அது ஒத்துவராது.

அரசமைப்பு மாற்றத்திற்காக அரசியல் நிர்ணய சபை முறையினை கொண்டு வருவது, அரசமைப்பினை நாடாளுமன்றத்தின் சாதாரண ஏற்பாடு ஒன்றின் தரத்திற்கு தாழ்த்தி விடுவதாகும். இது ஆபத்தானது.

அப்படி இறங்கி வந்தால் இலகுவாக அரசமைப்பை மாற்ற முடியும். அதுமட்டுமல்ல அந்த முறையின் மூலம் சாதாரண பெரும்பான்மையால் எதனையும் நீக்கவும் முடியும், இதனால், அடிப்படை உரிமைகள் அடங்கலாக அரசமைப்பு உத்தரவாதத்தை அது மலினப்படுத்திவிடும்.

இந்த நடவடிக்கை இன்னுமொரு புறத்தே சமாதான முன்னெடுப்புக்களுக்கு உலை வைப்பதோடு ஐக்கிய இலங்கை என்ற எதிர்பார்ப்புக்கும் சாவு மணி அடிக்கும்.

தெற்கில் உள்ள ஒரு கட்சியின் அபிலாஷையினை நிறைவேற்றிக் கொள்வதில் அரசமைப்பு தடையாக அமையப்போவதில்லையென்றால் வட-கிழக்கில் பெரும்பான்மை கொண்டவர்கள் தமக்கென்று ஓர் அரசியல் நிர்ணய சபையினையும் சொந்த அரசமைப்பினையும் ஏற்படுத்திக்கொள்வதைத் தடைசெய்வது எது?

உண்மையில் இம்முயற்சி ஒஸ்லோ பிரகடனத்தில் முன்வைக்கப்பட்டுள்ள தன் அடிப்படையில் அரசியல் தீர்வு காண்பதற்கு நிச்சயம் தடையாகவே அமையும்.

அத்தோடு ஐ.ம.சு.கூட்டமைப்பு பிரஸ்தாபித்துள்ள ஒரு தலைப்பட்ச அரசமைப்பு மாற்றம், இலங்கைக்கு சர்வதேச மட்டத்தில் ஆற்றாத இழுக்கைத் தேடித்தரும் இது அரசியல ஸ்திரமின்மையை தோற்றுவிக்கும். சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட மரபுகளுக்கு அமைந்த ஜனநாயக ஆட்சியை கேலிக்கூத்தாக்குவதாகவும் அது அமையும்.

அரசியல் நிர்ணய சபை வழிமுறை ஊடான எத்தனம் நாட்டின் அதியுயர் சட்டத்துக்கு முரணானது மட்டுமல்லாமல், ஜனநாயக அடிப்படைகளையும தொன்றுதொட்டு இலங்கை மக்கள் பேணிக்காத்து அனுபவித்து வந்த பெறுமானங்களையும் மீறுவதாகும்.

பல்வேறு காரணங்களுக்காக அரசமைப்புச் சீர்திருத்தம் இலங்கைக்குத் தேவையானது என்பதனை நாம் ஏற்றுக் கொள்கின்றோம் என்றாலும் அரசமைப்பு மாற்றம் சரியான வழிமுறையினாலும் தகுந்த நிறுவனங்களினாலும் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

- என்றுள்ளது.

*(இந்த அறிக்கையின் ஒரு பகுதி நேற்றைய உதயனில் பிரசுரமாகியிருந்தது).* (க)


# வெள்ளி விழா காணும் தம்பதிகளை

## மனமுவந்து வாழ்த்துகின்றோம்



ஊரெழு கிழக்கைச் சேர்ந்தவர்களான

**திரு. திருமதி**

**தவராஜா (V.T.R) -சந்திரா**

தம்பதிகள்

இன்று (29.04.2004) வியாழக்கிழமை தமது திருமண வாழ்வின் இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவு வெள்ளி விழாவை தமது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடி மகிழ்கின்றார்கள்.

இவர்களை மகள்மார் - றஜீனா, டிலானி ஆகியோரும் மருமகன்மார்-கருணசீலன் (கனடா), தனேஸ்வரன் (டென்மார்க்) மற்றும் மகன்மார்-றஜீபன், கஜன், நிஜின் மற்றும் அஞ்சலாவும் இளையகுட்டி அவர்களும் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் சீரோடுஞ் சிறப்போடும் வாழவேண்டுமென்று உளமார வாழ்த்துகின்றார்கள்.

ஊரெழு கிழக்கு. (31369) தகவல் : பிள்ளைகள்.



# மனமுவந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது அன்புக்கும் மதிப்புக்கும் உரிய சிவாச்சாரியர்கள்



சித்தாந்த பானு, சிவாகம விசாரதர்
சகலாகம பண்டிதர்

**பிரம்மஸ்ரீ சோ.சுப்பிரமணியக்குருக்கள்**

(முன்னாள் பிரதமகுரு,வடகோவை ஸ்ரீசித்திர வேலாயுத சுவாமி கோயில்)



சிவாகம வித்யாசாகரம், சிவாகம கலாநிதி, வேதாகம மாமணி, சிவாகம வனஸ்பதி, பிரதிஷ்டாகிரியா கலாபமணி, வேதாகம கிரியாவிநோதன், வேதாகம சிவாகம பிரதிஷ்டாசரஸ்வதி,

**பிரம்மஸ்ரீ மு.பரமசாமிக்குருக்கள்**

(விசேட குருமணி, நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்)

ஆகிய இருவருக்கும் தற்காப்புக்கான யப்பானிய உள்ளக பல்கலைக்கழகத்தினால் "கலாநித" கௌரவப்பட்டம் வழங்கப்பெற்றதையிட்டு, இவர்களை மனமுவந்து பாராட்டி வாழ்த்துகின்றோம். அத்துடன் இவர்கள் இருவரையும் பாராட்டிக் கௌரவிக்கும் முகமாக நாளை (30.04.2004) வெள்ளிக்கிழமை மாலை 6.00மணிக்கு கோப்பாய் ஞானபண்டித சைவ விருத்திச் சங்கத்தினால் நடத்தப்பெறும் விழா சிறப்புறவும் வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
கோப்பாய் விளையாட்டுக் கழகம்
கோப்பாய் வடக்கு சனசமூக நிலையம்
குகன் பான்சிஹவுஸ் + தொலைத்தொடர்பு சேவை.

*கோப்பாய் கந்தசுவாமி கோயிலடி,*
*கோப்பாய்.*

(C/34700)
(42-21-13-17)


## உரிமத்தகடு விநியோகம்

வடமராட்சி,ஏப்.29

இவ்வாண்டுக்கான சைக்கிள் உரிமத் தகடுகள் பருத்தித்துறை பிரதேச சபையினால் வழங்கப்பட்டு வருகின்றன.

இச்சபையின் புலோலி, குடத்தனை, செம்பியன்பற்று உபஅலுவலகங்கள் ஊடாக உரிமத்தகடுகள் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன. (ஒ-173)


## முன்பள்ளி ஆசிரியர் கலந்துரையாடல்

வடமராட்சி,ஏப்.29

வடமராட்சி வலய முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3மணிக்கு நெல்லியடி மத்தியமகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

வலயக் கண்காட்சி, விளையாட்டு நிகழ்வு பற்றிய முக்கிய தீர்மானங்கள் எடுக்கவிருப்பதால் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு வடமராட்சி வலய ஆரம்ப பிள்ளைப்பருவ அபிவிருத்திப்பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் துரை.சத்தியசீலன் அறிவித்துள்ளார். (ஜ-173)

# இலங்கை அணி வீரர்களின் தொடரும் சாதனைகள்.....



சர்வதேச கிரிக்கெட்டில் ஜாம்பவான்களாக இப்போது ஆஸ்திரேலிய அணியினர் திகழலாம். முன்னர் மேற்கிந்தியத் தீவுகள் அணியினர் இருந்திருக்கலாம். ஆனால் பெரும்பாலான சாதனைகளுக்குச் சொந்தக்காரர்கள் என்னவோ ஆசிய அணிகளைச் சேர்ந்தவர்களாகத்தான் உள்ளனர். ஒருசில சாதனைகள் அல்ல; பல சாதனைகளுக்குச் சொந்தக்காரர்கள் இலங்கை, இந்திய மற்றும் பாகிஸ்தான் அணியின் வீரர்கள் தான் என்பது மகிழ்ச்சிதரும விடயம்.

டெஸ்ட் போட்டிகளிலும் சரி ஒரு நாள் போட்டிகளிலும் சரி தரப்படுத்தல் வரிசையில் ஆஸ்திரேலிய மற்றும் தென்னாபிரிக்க அணிகள் முறையே முதலாம், இரண்டாம் இடங்களில் இருக்கின்றன. அதுவும் ஒரு சாதனைதான். கடந்த இரண்டு மூன்று வருடங்களாக முதலாம், இரண்டாம் இடங்களிலேயே இரு அணிகளும் இருக்கின்றன. ஆனால், இவற்றுக்கெல்லாம் மேலாக கிரிக்கெட் விளையாட்டை உலகுக்கு அறிமுகப்படுத்திய இங்கிலாந்து அணியினராலேயே நிகழ்த்த முடியாத பல சாதனைகளுக்குச் சொந்தக்காரர்கள் ஆசிய அணிகளைச் சேர்ந்த வீரர்கள்தான்.

சர்வதேச ஒருநாள் போட்டிகளில் அதிகூடிய விக்கெட்டுக்களைக் கைபற்றியோர் பட்டியலில் முதல் 6 இடங்களை ஆசிய அணிகளைச் சேர்ந்த வீரர்களே பிடித்துள்ளனர். ஒருநாள் போட்டியொன்றில் அதிகூடிய ஓட்டத்தைப் பெற்றவர் பாகிஸ்தான் அணியின் வீரர் சயிட் அன்வர். ஒருநாள் போட்டிகளில் அதிகூடிய ஓட்டங்களைப் பெற்றவர்களும் ஆசிய அணியின் வீரர்கள்தான். இவை மட்டுமா? டெஸ்ட் போட்டிகளில் அதிகூடிய மொத்த ஓட்டங்களைப் பெற்ற வீரர் அதிக சதங்களை எடுத்த வீரர் எனனும் சாதனைகளை இந்திய அணியின் முன்னாள் தலைவர் சுனில் கவாஸ்கர் தக்க வைத்துள்ளார். இதனை முறியடிக்கும் வாய்ப்பு இந்திய அணியின் சச்சின் டெண்டுல்கருக்கே உள்ளது.

இந்தச் சாதனைகளின் வரிசையில் இலங்கை அணியின் வேகப் பந்து வீச்சாளர் சமிந்தவாஸும் அண்மையில் இணைந்துகொண்டுள்ளார். ஆம் இலங்கை அணிக்கும் சிம்பாப்வே அணிக்கும் இடையே சிம்பாப்வேயில நடைபெற்று வருகின்ற ஒரு நாள் போட்டித் தொடரின் மூன்றாவது போட்டியில் தனது 300 ஆவது விக்கெட்டைக கைப்பற்றியதன் மூலம் 300 விக்கெட்டுக்களுக்கு மேல் கைப்பற்றிய 6 ஆவது வீரராகத் தன்னை இணைத்துக் கொண்டுள்ளார். இவருக்கு முன்பு ஐந்து இடங்களையும் பிடித்துள்ள வீரர்கள் அனைவரும் ஆசியர்களே.

பாகிஸ்தான் அணியின் வேகப் பந்து வீச்சாளர்களான வசீம் அக்ரம் முதலாம் இடத்திலும் (502 விக்கெட்டுக்கள்), வக்கார் யூனுஸ் இரண்டாம இடத்திலும் (416 விக்கெட்டுக்கள்), இலங்கை அணியின் சுழல்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் மூன்றாம இடத்திலும் (355 விக்கெட்டுக்கள்), இந்திய அணியின் வீரர்களான ஜவகல ஸ்ரீநாத், அனில் கும்ளே ஆகிய இருவரும் 315 விக்கெட்டுக்களைக் கைபற்றி நான்காம் இடத்திலும் உள்ளனர்.


தனது 235 ஆவது ஒரு நாள் போட்டியில் விளையாடிய வாஸ் சிம்பாப்வே வீரர் மரிக்வெட்டின் விக்கெட்டைக் கைப்பற்றியதன் மூலம் 300 விக்கெட என்ற மைல்கல்லை எட்டினார். இதன மூலம் இலங்கை அணியின் இரு வீரர்கள் ஒரு நாள் போட்டிகளில் 300 விக்கெட்டுக்களுக்கு மேல் கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சிம்பாவே அணியுடனான இரண்டாவது ஒரு நாள் போட்டியிலும் ஒரு சாதனை ஏற்படுத்தப்பட்டுள்ளது. அந்தச்சாதனைக்குச் சொந்தக்காரர் இலங்கை அணியின் அதிரடி வீரரும் இலங்கை அணியின் முன்னாள் தலைவருமான சனத் ஜயசூரிய. இவர் தனது 315 ஆவது ஒரு நாள் போட்டியில் விளையாடி மொத்தமாக 9 ஆயிரத்து 286 ஓட்டங்களைப் பெற்றுள்ளார்.

இதன் மூலம் அவர் இலங்கை அணியில் அதிகூடிய ஓட்டங்களைப் பெற்ற முதலாவது வீரராகவும் சர்வதேச ரீதியில் அதிகூடிய ஓட்டங்களைப பெற்ற 5 ஆவது வீரராகவும் திகழ்கிறார்.

அதிகூடிய ஓட்டங்களை ஒரு நாள் போட்டிகளில் பெற்றவர்கள் பட்டியல் வருமாறு:-


இந்திய அணியின் அதிரடி வீரர் சச்சின் டெண்டுல்கர் முதலாம் இடத்திலும் (13,134 ஓட்டங்கள்), பாகிஸ்தான் அணியின் தலைவர் இன்சமாம் உல்ஹக் இரண்டாம் இடத்திலும் (9,796 ஓட்டங்கள்), இந்திய அணியின் முனனாள் தலைவர் முகமட் அஸாருதின் மூன்றாம் இடத்திலும் (9,378 ஓட்டங்கள்), இந்திய அணியின் தலைவர் கங்குலி நான்காம் இடத்திலும் (9,309 ஓட்டங்கள்) உள்ளனர். ஜயசூரியவுக்கு அடுத்ததாக ஆறாம் இடத்தில் (9,284 ஓட்டங்கள்), இலங்கை அணியின் முன்னாள் வீரர் அரவிந்தடிசில்வா உள்ளார்.



- ஜெயஸ்ரீ -

இலங்கை அணியின் சிரேஷ்ட வீரர்கள் இருவர் அடுத்தடுத்து இந்த இரு சாதனைகளையும் நிலைநாட்டியுள்ளனர்.

இதனைத்தொடர்ந்து எதிர்வரும் 6 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள இலங்கை அணிக்கும் சிம்பாப்வே அணிக்கும் இடையிலான 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடர் இடம் பெறவுள்ளது. இதிலும் இலங்கை அணியினரின் சாதனைகள் தொடரும் என்று நம்பலாம்.



உலக அதிபாரக் குத்துச் சண்டை சம்பியன் பட்டத்திற்கான போட்டியில் முன்னாள் சம்பியன் லினோக்ஸ் லூயிஸும் கிற்ஸ்கோவும் மோதும் காட்சி. இதில் கிற்ஸ்கோ சம்பியனானார்.

# துடுப்பாட்டத் தர வரிசையில் லாராவும் பந்து வீச்சில் முரளியும் முதலிடத்தில்!

லண்டன்,ஏப்.29

பிரைஸ வாட்டர் ஹவுஸ் கூப்பர்ஸ டெஸ்ட் கிரிக்கெட்டின் துடுப்பாட்டத் தரவரிசையில் மேற்கிந்தியத்தீவுகள் அணியின் கப்டன் பிரையன் லாரா முதலிடத்தை தக்கவைத்துக் கொண்டுள்ளார்.

அவர் 897 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.

அவரைக் காட்டிலும் 5 புள்ளிகள குறைவாகப் பெற்று இரண்டாம் இடத்தில் உள்ளார் இந்தியாவின் ராகுல் டிராவிட்.

ராவல் பிண்டியில் நடைபெற்ற பாகிஸ்தானுக்கு எதிரான 3 ஆவது டெஸ்ட் போட்டியில் டிராவிட் 270 ஓட்டங்களைக் குவித்ததால், இந்தியா வரலாற்று வெற்றியைப் பெற்றது.

இதையடுத்து பிரைஸ்வாட்டர் ஹவுஸ் கூப்பர்ஸ் தரவரிசையில் அவா முதலிடத்துக்கு முன்னேறலாம் என்ற கருத்து நிலவியது.

ஆனால், அந்நிறுவனம் கடந்த செவ்வாய்க்கிழமை வெளியிட்டுள்ள தரவரிசைப் பட்டியலீல் இரண்டாம் இடத்திலேயே உள்ளார் டிராவிட்.

முல்தானில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியில் 3 சதம்பெற்ற வீரேந்தர் ஷேவாக் சச்சினுக்கு அடுத்தபடியாக 9ஆவது இடத்தில் உள்ளார்.

பெப்ரவரி இரண்டாம் வாரம் முதல் மேற்கொள்ளப்பட்ட இத்தர வரிசைப் பட்டியலில் ஆஸ்திரேலியாவின் டேமியன் மார்ட்டினும், இந்தியாவின் யுவராஜ் சிங்கும் நல்ல முன்னேற்றம் கண்டுள்ளனர்.

அவர்கள் முறையே 16 ஆவது, 65 ஆவது இடங்களுக்கு உயர்ந்துள்ளனர்.

பந்துவீச்சைப் பொறுத்தவரை, இந்தியாவின் இர்.'.பான் பதானும், பாகிஸ்தானின் உமர்குல்லும் தங்களது திறமைக்கு அங்கீகாரம் கிடைக்கும் வகையில் சமீபத்தில் பந்துவீசினாலும், இலங்கைவீரர் முத்தையா முரளீதரன் (904 புள்ளிகள்) முதலிடத்தில் உள்ளார்.

இந்தியாவிலிருந்து அதிகபட்சமாக அனில் கும்ப்ளே 7 ஆவது இடத்தைப் பிடித்துள்ளார்.

துடுப்பாட்டத்தில் முதல் 10 இடங்களைப் பெற்றவர்கள்

பிரையன் லாரா (897 புள்ளிகள்), ராகுல் திராவிட் (892 புள்ளிகள்), மத்தியூ ஹேடன் (881 புள்ளிகள்), ரிக்கி பொண்டிங் (864 புள்ளிகள்), ஜக்கலீஸ் (833 புள்ளிகள்),. ஹெர்சல் கிப்ஸ் (815 புள்ளிகள்), இன்சமாம் உல் ஹக் (785 புள்ளிகள்) சச்சின் டெண்டுல்கர் (784 புள்ளிகள்), வீரேந்திர ஷேவாக் (782 புள்ளிகள்), கிரேம சிமித் (759 புள்ளிகள்)

பந்துவீச்சில் முதல் 10 இடங்களைப் பெற்றவர்கள்

முரளீதரன் (904 புள்ளிகள்), ஷேன் பொலக் (837 புள்ளிகள்), சொயிப் அக்தர் (826 புள்ளிகள்), ஸ்டீவ் ஹாமிசன் (802 புள்ளிகள்), ஷேன் வோர்ன் (777 புள்ளிகள்), கிளென் மெக்ராத் (775 புள்ளிகள்), அனில் கும்ப்ளே (751 புள்ளிகள்), ஜேசன் கிலெஸ்பி (746 புள்ளிகள்), மகாயா நிதினி (722 புள்ளிகள்), டெரல் டபி (673 புள்ளிகள்). (ஒ-10)

# ஆசியக் கோப்பை ஹொக்கி; இறுதிச் சுற்றில் இந்தியா

கராச்சி,ஏப்.29

பாகிஸ்தானின் காரச்சி நகரில் நடைபெற்றுவரும் 5ஆவது ஆசியக் கோப்பைக்கான ஹொக்கிப் போட்டியில், பலம் வாய்ந்த தென்கொரியாவைத் தோற்கடித்து இறுதிச் சுற்றுக்கு முன்னேறியது இந்தியா.

இதையடுத்து, இன்று நடைபெறும் இறுதி ஆட்டத்தில் இந்திய அணி பாகிஸ்தானுடன் பட்டத்துக்காக மோதவுள்ளது.

கராச்சியில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில், இந்திய வீரர்கள் 4:2 என்ற கோல் கணக்கில் தென்கொரியாவைத் தோற்கடித்தனர்.

முன்னதாக நடைபெற்ற முதல் அரையிறுதி ஆட்டத்தில் வலுகுறைந்த மலேசியாவை 5:2 என்ற கோல் கணக்கில் பாகிஸ்தான் தோற்கடித்தது.

இப்போட்டியில் முதல் 3இடங்களைப்பெறும் அணிகள் உலகக் கோப்பைப் போட்டிக்கு முன்னேறும். ஆக இந்தியாவும், பாகிஸ்தானும் அத்தகுதியைப் பெற்றுவிட்டமை குறிப்பிடத்தக்கது.

# கிரிக்கெட் வீரர்கள், நடுவர்களுக்கு ஓய்வூதியம் வழங்க முடிவு

புதுடில்லி,ஏப்.29

முன்னாள் மற்றும் இந்நாள் கிரிக்கெட் வீரர்கள் மற்றும் நடுவர்களுக்கு ஓய்வூதியம் வழங்க இந்திய கிரிக்கெட கட்டுப்பாட்டு வாரியம் முடிவுசெயதுள்ளது.

## விளையாட்டு

கிரிக்கெட் வாரியத்தின் பவளவிழா ஆண்டை முன்னிட்டு இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதாக கிரிக்கெட் சபையின் செய்தித் தொடர்பாளர் கடந்த செவ்வாய்க்கிழமை தெரிவித்துளளார்.

இத்திட்டத்தால் 174 பேர் பயனடையவுள்ளனர். அவர்களுக்கு மாதம் 5 ஆயிரம் ரூபா ஓய்வூதியம் வழங்கபடவுள்ளது.

இதனால், கிரிக்கெட் சபைக்கு ஆண்டு தோறும் கூடுதலாக ஒரு கோடி ரூபா செலவாகும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

சச்சின் டெண்டுல்கர், சௌரவ் கங்குலி ஆகியோரும் இத்திட்டத்தால் பயனடையவுள்ளனர். ஆனால், அதற்கு அவர்கள் தகுதிபெறவேண்டும். அதாவது சர்வதேச அணிகளுக்கு எதிராக விளையாடமாட்டோம் எனக் கிரிக்கெட சபைக்கு சத்தியம்செய்து கொடுக்க வேண்டும்.

அதேசமயம் நிதிப் பற்றாக்குறையால் திண்டாடும் முஸ்தக் அலி சலம துரானி, பகவத் சந்திரசேகர் உள்ளிட்ட அக்கால வீரர்களுக்கு இத்திட்டம் பெரும் உதவியாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இருபோட்டிகளிலும் அதாவது, டெஸ்ட், ஒரு நாள் போட்டிகள் இரண்டிலும் வீரர்களும் நடுவர்களும் பணியாற்றியிருக்கவேண்டும். ரிதீந்தர் சிங், ரமேஷ் பவார் போன்ற ஒருநாள் ஆட்டங்களில் மட்டும் விளையாடியவர்கள் இத்திட்டத்தால் பயன்பெற முடியாது.

முன்னாள் அணித்தலைவர் முகமது அஸாருதீனுக்கு இத்திட்டம் பொருந்தாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சபையுடன் தகராறுசெய்து நீதிமன்றத்தை அணுகியுள்ளதால் அவரைக் கறுப்பு வீரர்கள் பட்டியலில் கிரிக்கெட் சபை வைத்துள்ளது.

அஸார் போன்று குற்றச்சாட்டுக்கு உள்ளாகி, 5 ஆண்டுகள் தடைக்குப் பிறகு தற்போது வடக்கு மண்டல அணிக்காக விளையாடி வரும் அஜய ஜடேஜாவுக்கு இத்திட்டம் பொருந்தும எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முக்கியமாக வீரரோ, நடுவரோ உயிருடன் இருக்கும்வரைதான் இத்திட்டத்தால் பயன்பெறமுடியும். அவர்கள் இறந்ததற்குப் பிறகு வாரிசுகளுக்கு அப்பணம் வழங்கப்படமாட்டாது.

இத்திட்டத்தைப் பல்வேறு வீரர்களும் நடுவர்களும் வரவேற்றுள்ளனர். (-10)

# வடக்கு-கிழக்கு பாடசாலைகளிடையே வருடாந்த விளையாட்டுப் போட்டி

வடக்கு-கிழக்கு மாகாணப் பாடசாலைகளின் வருடாந்த விளையாட்டுப் போட்டி எதிர்வரும் ஜூலை மாதம் 3ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

பெண்களுக்கான போட்டிகளில் ஜூலை மாதம் 3ஆம் திகதி உடற்பயிற்சிப் போட்டி 6ஆம், 7ஆம் திகதிகளில் - கபடிப் போட்டி, 7ஆம், 8ஆம் திகதிகளில் - எல்லேபோட்டி 8ஆம், 9ஆம் திகதிகளில் கரப்பந்தாட்டப் போட்டி 9ஆம், 10ஆம் திகதிகளில் வலைப்பந்தாட்டம், 12ஆம், 13ஆம் திகதிகளில் கரப்பந்து, பட்மின்றன், மேசைப்பந்து என்பன நடைபெறவுள்ளன. இந்தப் போட்டிகள் வவுனியா நகாசபை மைதானத்தில் நடைபெறவுள்ளன.

ஆண்களுக்கான போட்டிகளில் 16ஆம், 17ஆம் திகதிகளில் கபடி, 17ஆம், 18ஆம் திகதிகளில் உதைபந்தாட்டம், 18ஆம், 19ஆம் திகதிகளில் கரப்பந்து, 19ஆம், 20ஆம் திகதிகளில் மென்பந்து 20ஆம், 21ஆம் திகதிகளில் எல்லே, 24ஆம், 27ஆம் திகதிகளில் மெய்வல்லுநர் போட்டி என்பன நடைபெறவுள்ளன. இப்போட்டிகள் திருகோணமலை மக்கெய்சர் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலைகளுக்கிடையில் மாவட்டரீதியில் நடைபெற்ற போட்டிகளில் முதல் இரு இடங்களைப் பெற்ற அணிகளே மேற்படி போட்டிகளில் பங்குபற்றுகின்றன.

இம்முறை முதற்றடவையாக பட்மின்ரன், மேசைப்பந்து போன்ற இரு விளையாட்டுக்களும் இப்போட்டிகளில் அறிமுகப்படுத்தப்படவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

(ஒ-10-ரி)

# கண்ணிவெடிகளை அகற்றுவதற்கு உதவுவதன் மூலம் சமாதான முயற்சிக்கு டென்மார்க் உதவுகிறது!

## அந்நாட்டு றோட்டறி ஆளுநர் உதயனுக்குத் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.29

இலங்கை சமாதான முயற்சிகளில் கண்ணி அகற்றலும் ஓர் அங்கம். இந்த வகையில் கண்ணி அகற்றும் செயற்பாட்டுக்கு டென்மார்க் உதவுகிறது. அதன்மூலம் சமாதான முயற்சிக்குப் பலம் சேர்கின்றது. டென்மார்க் றோட்டறிக்கழக மாவட்ட ஆளுநர் நீல் ஒவி ஜான்சன் (NILS OVE JENSEN) தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கில் டெனிஸ் கண்ணி அகற்றும் குழுவின் செயற்பாடுகளை மறு ஆய்வு செய்வதற்காக அவர் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் வந்திருந்தார்.

யாழ்ப்பாணத்தில் டெனிஸ் கண்ணி அகற்றும் நிறுவனம் பருத்தித்துறையில் மேற்கொள்ளும் பணிகளைப் பார்வையிட்ட பின்னர் அவர் 'உதயன்' அலுவலகத்துக்கும் வந்திருந்தார்.

கண்ணிவெடி அகற்றும் செயற்பாடு குறித்து அப்போது கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டார்.

வடக்கு - கிழக்கில் கண்ணி அகற்றும் பணிகளுக்கு ஒரு லட்சம் அமெரிக்க டொலர் நிதி உதவியை டென்மார்க் றோட்டறிக் கழகம் வழங்கியுள்ளது என்றும் -

இங்குள்ள தேவையை ஆராய்ந்த பின், மேலும் நிதி உதவிகளை றோட்டறிக்கழகங்கள் ஊடாகச் சேகரித்து இங்கு அனுப்பத்திட்டமிட்டுள்ளதாகவும் -

அவர் தெரிவித்தார்.

டென்மார்க் அரசு 6.25 மில்லியன் டொலர் உதவியை வழங்கியுள்ளது என்றும் அவர் கூறினார்.

இலங்கையில் முன்னெடுக்கப்பட்டுள்ள சமாதான முயற்சிகளில் ஓர் அங்கம்தான் கண்ணி அகற்றும் பணியும் கண்ணிகள் அகற்றப்பட்டபின் அந்தப் பிரதேசங்களில் மக்கள் மீளக் குடியமர்வர். அதன்மூலம் மக்களுக்குச் சக வாழ்க்கை கிடைப்பதுடன் சமாதான முயற்சிகளும் தொடரும் என்றார் அவர்.

தற்சமயம் சமாதான முயற்சிகள் தடைப்பட்டுள்ளன. அந்த முயற்சிகளை மீள ஆரம்பிக்க டென்மார்க் தனது அழுத்தங்களை இலங்கை அரசுக்குப் பிரயோகிக்குமா? எனக் கேட்டதற்கு,

"சமாதானப் பேச்சுகள் தேர்தல் காரணமாக நிறுத்தப்பட்டுள்ளன. ஆனால், சமாதான முயற்சிகள் நிறுத்தப்படவில்லை. அந்த முயற்சிகளில் பல அங்கங்கள் உண்டு. அவை தடையின்றித் தொடருகின்றன. இதன் தொடர்ச்சியாக மீண்டும் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கும் என நாம் நம்புகிறோம்" என்றார் அவர்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கண்ணி அகற்றும் திட்டத்தை 3 வருடங்களில் பூர்த்தி செய்யத் திட்டமிட்டிருந்தோம். ஆலயங்கள், பாடசாலைகள், ஐஸ் தொழிற்சாலைகள், மக்கள் போக்குவரத்துப் பாதைகள் ஆகிய இடங்கள் முதன்மைப்படுத்தப்பட்டுள்ளன.

எமது குழுவினர் பருத்தித்துறை, பூநகரி, திருகோணமலை, வவுனியா ஆகிய பிரதேசங்களில் பணிபுரிகின்றனர். அந்தப் பிரதேசங்களில் பணிகள் பூர்த்தியடைந்ததும் ஏனைய பகுதிகளுக்கு பணிகள் விஸ்தரிக்கப்படும்.

எமது குழுவில் 7 வெளிநாட்டவர்கள் பணிபுரிகின்றனர். 120 கண்ணி அகற்றும் உறுப்பினர்கள் உட்பட 180 பேர் பணிபுரிகின்றனர்.

இதுவரை 50 ஆயிரம் சதுர மீற்றர் பரப்பளவில் கண்ணிகளை அகற்றியுள்ளோம். ஆள்களுக்கு எதிரான கண்ணிகள் 900 ஐ மீட்டுள்ளோம்.

அடுத்த 3 மாதத்துக்குப் பின் எமது பணியை இரட்டிப்பாக்கவிருக்கின்றோம். அதன் மூலம் கூடுதல் பிரதேசத்தைச் சுத்திகரித்து மக்கள் மீள் குடியமர்வுக்கு உதவுவோம். அத்தோடு சமாதான முயற்சிக்கு ஊக்கம் அளிப்போம் - என்றார் அவர்.

மாவட்ட ஆளுநருடன் டெனிஸ் கண்ணி அகற்றும் குழுவின் இலங்கைக்கான திட்டமுகாமையாளர் போல் மக்கின் டொஷ் உடன் வந்திருந்தார். (ஒ-3)



டென்மார்க் ரோட்டறிக் கழக மாவட்ட ஆளுநர் நில்ஸ் ஓவ் ஜென்சன் (வலது) மற்றும் டெனிஸ் கண்ணி அகற்றும் குழுவின் திட்ட முகாமையாளர் போல் மக்கின்டொஷ்.

## 'என் அம்மாவின் கதை' நூல் இன்று வெளியீடு

யாழ்ப்பாணம்,ஏப்.29

தமது அம்மாவின் 31ஆம் நினைவு ஆராதனை நாளான இன்று (வியாழக்கிழமை) கவிஞரும் எழுத்தாளரும் ஆய்வாளருமான பேராசிரியர் என். சண்முகலிங்கன் "என் அம்மாவின் கதை" என்ற நூலை வெளியிடுகிறார்.

வழமையான கல்வெட்டு நூலுக்குப் பதிலாக இந்த நூலை அவர் இன்று வெளியிடுகின்றார். 16 வருடங்களுக்கு முன்னர் இவர் தமது தந்தையாரின் மறைவின் பின்னரும் "என் அப்பாவின் கதை" என்ற நூலை வெளியிட்டிருந்தார்.

தமது தந்தையாரின் நினைவாக நூலயம் ஒன்றை நிறுவியது போலவே, தாயாரின் நினைவாக பண்பாட்டு மேம்பாட்டு நிறுவனம் ஒன்றை நிறுவவுள்ளதாகவும் அறிவித்துள்ளார். (அ)

## நகரப் பகுதியில் குடிதண்ணீர் வீண்விரயம்

யாழ்ப்பாணம்,ஏப்.29

யாழ்.மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகள் சிலவற்றின் வீதிகளில் குடிதண்ணீர் விநியோகத்திற்கென அமைக்கப்பட்டுள்ள குழாய்கள் பலவும் பழுதடைந்துள்ளன. இதனால் குடிதண்ணீர் வீண் விரயமாவதை அவதானிக்க முடிகிறது.

யாழ்.மாநகரசபையினால் நிலத்தடிக்குழாய்கள் ஊடாக நகரில் குடிதண்ணீர் பற்றாக்குறை உள்ள பகுதிகளுக்கு குடிதண்ணீர் நேர ஒழுங்கின்படி விநியோகிக்கப்படுகின்றது.

இத்தகைய குடிதண்ணீர் குழாய்கள் பலவும் பழுதடைந்துள்ளதால் அவற்றைச் சீராக மூடமுடிவதில்லை. அதனால் குடிதண்ணீர் வீண் விரயமாவதைக் காணமுடிகின்றது. (ஒ-12)

# யாழ்.வீடுகள் திரையரங்குகளாக மாறிவருவது கவலையளிக்கிறது

## பல்கலை.விரிவுரையாளர் வேதனை

யாழ்ப்பபாணம்,ஏப்.29

யாழ்ப்பாணத்தில் ஒவ்வொரு வீடும் சினிமாத்திரையரங்காக மாறி வருவது கவலைக்குரியது. இவ்வாறு யாழ்.பல்கலைக்கழகத் தமிழ்த்துறை மூத்த விரிவுரையாளர் கலாநிதி எஸ்.சிவலிங்கராசா வேதனை வெளியிட்டார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்.பல்கலைக்கழகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற "இலங்கை விகடன்" வார சஞ்சிகையின் பங்குகள் அறிமுக நிகழ்வில் கலந்துகொண்டு தொகுப்புரை ஆற்றுகையிலேயே அவர் இவ்வாறு சொன்னார்.

அவர் தமதுரையில் மேலும் தெரிவித்ததாவது:-

எமது மக்கள் மத்தியில் வாசிப்புப் பழக்கம் அருகி வருகிறது. நல்ல நூல்களை யாருமே தேடிச்சென்று பணம் கொடுத்து வாங்கிப்படிக்கும் பழக்கம் அருகியுள்ளது. இதற்கு முக்கிய காரணம் சில ஊடகங்கள். ஊடகம் என்பது மக்களை நல்வழிப்படுத்த வேண்டியது. அவை அளவுக்கு அதிகமாக மக்களுக்குத் தேவையில்லாத விடயங்களைத் திணிப்பதில் முன்னின்று செயற்படுகின்றன.

யாழ்.குடாநாட்டில் அநேக வீடுகள் சினிமாத்திரையரங்குகளாக மாறியுள்ளன. சிறுவர்கள் படிக்கும் நேரங்களில தொலைக்காட்சி பார்ப்பதிலேயே காலத்தைக் கழிக்கின்றனர். இதன்காரணமாகக் கல்வியில் ஆர்வம் குறைந்தவர்களாக இருப்பதுடன், வன்முறைகளில் ஈடுபடுபவர்களாக - வன்முறையை நோக்கிச செல்பவர்களாக - மாறுகின்றனர். இதே வேளை, ஈழப்பத்திரிகைத் துறையை நோக்குகின்றபோது பத்தொன்பதாம் நூற்றாண்டு தமிழ் பத்திரிகைத்துறை வளர்ச்சிக்காலமாக இருந்துள்ளது. இக்காலத்தைத் தொடர்ந்தே தமிழ்ப் பத்திரிகை வேகமாக வளர்ச்சியைக் கண்டது. அக்காலப் பத்திரிகைகளை இன்று வாசிக்கின்ற போது அன்றைய பத்திரிகைத்துறையின் வளர்ச்சியைக் காணக் கூடியதாகவுள்ளது. எனவே, நல்ல புத்தகங்களை வாங்கிப் படிக்கும் பழக்கத்தை எமது இளைய தலைமுறை ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். வாசிப்பதனால் நல்ல விடயங்களை நாம் அறிந்துகொள்வதோடு அறிவு ரீதியாகவும் எம்மை வளர்த்துக்கொள்ள முடியும் - என்றார்.

இந்நிகழ்வில் உரையாற்றிய தென்னிந்திய திருச்சபைப் பேராயர் எஸ்.ஜெபநேசன் தெரிவித்ததாவது:-

தமிழ்நாட்டுப் பத்திரிகைகள் தமிழ மக்களின் துயரங்களை எழுதுவதில்லை. இந்தநிலை 1991ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து வருகிறது. இந்திய பத்திரிகைகள் ஈழத்திற்குக் கூடுதலாக வருவதனால் ஈழத்தில் வெளிவருகின்ற நூல்கள் தொடர்பான பெறுமதி, அதனதரம் எங்கள் மக்களுக்குத் தெரிவதில்லை. அந்தவகையில், தமிழ் நாட்டு ஆனந்தவிகடன் சஞ்சிகை போன்று 'இலங்கை விகடன்' மக்கள் மத்தியில அபிமானம் பெறும் வாய்ப்பு உண்டு - என்றார்.

இந்நிகழ்வில் உரையாற்றிய யாழ்.மறைமாவட்ட குருமுதல்வர் அருட்திரு. ஜே.நீக்கிலஸ் -

எழுத்தாளர்களை மதிக்கின்ற பணபு எமது சமூகத்தில் குறைந்து வருகிறது. இந்தநிலை மாற்றப்படவேண்டும். மனித விழுமியங்கள் மதிப்பிழந்து செல்லும் இந்தக் காலத்தில் சகல மனிதர்களையும் அரவணைதது்ச் செல்லவேண்டிய கடப்பாடு எங்கள் அனைவருக்கும் உரியது - என்று தெரிவித்தார்.

இந்நிகழ்வில் தலைமையுரையாற்றிய யாழ்.பல்கலைக்கழக உபவேந்தர் எஸ்.மோகனதாஸ் தெரிவித்ததாவது:-

யாழ்.குடாநாட்டு மக்கள் கல்வியாளர்களை மதிப்பவர்கள். பணத்தை விட கல்வியையே மேன்மையாகப் போற்றுபவர்கள்.

தமிழ்மக்கள் ஒருகாலத்தில் கல்வித்துறையில் முன்னணியில் இருந்ததனால் சிங்கள மக்கள்கூட தமிழ் மக்களைப்பார்த்து வியந்ததுண்டு. இப்போது தென்னிலங்கையில் சிங்கள மக்களும் கல்வித்துறையில் முன்னேறியுள்ளார்கள். அத்துடன், எங்கள் பாரம்பரியங்களை, கலைகலாசாரங்களை, நாம் பாதுகாக்க வேண்டும்.

இவ்வாறான சஞ்சிகைகள் வெளிவருவதை நாம் ஊக்குவிக்கவேண்டும். வெளியீடுகளில் வருகின்ற புத்தகங்களை வாங்கி வாசிப்புப் பழக்கத்தை மேன்மைப்படுத்தி நல்ல வாசிபுக் கலாசாரத்தை உயர்த்திக்கொள்ள வேண்டுமெனத் தெரிவித்தார். இந்நிகழ்வில் சஞ்சிகைப்பங்குகள் விற்கப்பட்டன. (12)




இலங்கை விகடன் சஞ்சிகையின் பங்குகள் விற்பனை அறிமுகவிழா யாழ்.பல்கலைக்கழக நூலகக்கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் மக்கள் வங்கியின் காங்கேசன்துறை கிளை முகாமையாளர் பொன். கணேசமூர்த்தி, அருட்திரு.ஜே.நீக்கிலஸ் அடிகளார், யாழ்.பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் மூத்தவிரிவுரையாளர் எஸ்.சிவலிங்கராசா, யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் எஸ்.மோகனதாஸ், நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக பரமாசாரிய சுவாமிகள், இலங்கை விகடன் ஆசிரியர் கே.வஸ்தியாம்பிள்ளை ஆகியோர் அமர்ந்திருப்பதையும் தென்னிந்தியத் திருச்சபைப் பேராயர் எஸ்.ஜெபநேசன் உரையாற்றுவதையும் படத்தில் காணலாம். *(படம்:அலுவலகப் படப்பிடிப்பாளர்)*

# சிறுமியைக் கடத்த முயற்சித்த நபரொருவர் விளக்கமறியலில்

யாழ்ப்பாணம்,ஏப்29

தனியே சென்ற சிறுமியைக் கடத்த முயற்சித்த நபர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சுழிபுரத்தைச் சேர்ந்த 12 வயதான சிறுமி, யாழ்.போதனா வைத்தியசாலைக்குக் கடந்த திங்கட்கிழமை சிகிச்சைபெற வந்திருந்தாள். சிகிச்சை பெற்று வீடு திரும்புவதற்காக அவர் யாழ்.பஸ்நிலையத்தை நோக்கித் தனியே சென்று கொண்டிருந்தார்.

அப்போது மோட்டார் சைக்கிளில வந்த நபர் ஒருவர் சிறுமியை வீட்டில இறக்கிவிடுவதாகக் கூறி மோட்டார் சைக்கிளில் ஏற்றிச் சென்றார். ஆனால் அவர் சுழிபுரம் நோக்கிச் செல்லாமல மண்டைதீவுப் பகுதிநோக்கிச் சென்றுள்ளார். அல்லைப்பிட்டியில் உள்ள படையினரின் சோதனை முகாமில் இவர்கள் சென்றடைந்தபோது, அங்கு நின்றிருந்த பொதுமக்கள் சிலர் சந்தேகம் கொண்டு அந்த நபரை விசாரித்தனர். அத்துடன் படையினரிடமும் தகவல் தெரிவித்தனர்.

இதனையடுத்து அவர்கள் இருவரையும் தடுத்துவைத்த சோதனை நிலையப் பொலீஸார், பின்னர் அவர்களை யாழ்.பொலீஸாரிடம் ஒப்படைத்தனர்.

அவர்கள் இருவரும் யாழ்.நீதிமன்ற மேலதிக நீதிவான் [illegible] நந்தசேகரன் முன்னிலையில் [illegible] படுத்தப்பட்டனர். அதனைத் தொடர்ந்து சம்பந்தப்பட்ட நபரை அடுத்த மாதம் 10ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கும்படியும் - சிறுமியை மருத்துவ பரிசோதனைக்குட்படுத்தும்படியும் - நீதிவான் உத்தரவிட்டார். (ஒ-7)

# ஆறு மாகாண சபைகளுக்கும் ஜூன் பிற்பகுதியில் தேர்தல்?

கொழும்பு,ஏப்.29

வடக்கு - கிழக்கு மாகாண சபையையும் தற்போது தேர்தல் நடந்து முடிந்த வடமேல் மாகாண சபையையும் தவிர்த்து எஞ்சியுள்ள ஆறு மாகாண சபைகளுக்குமான தேர்தல்களை ஒரே தினத்தில் நடத்துவது தொடர்பாக மாகாண சபைகள் அமைச்சர் ஜனாதிபதியுடன் பேச்சு நடத்தியுள்ளார்,

வடமேல் மாகாண சபைக்கான தேர்தல் முடிவுற்றுள்ள நிலையில் மத்திய மற்றும் ஊவா மாகாண சபைகளின் பதவிக்காலம் முடிவடைந்துள்ளன.

இதனால், ஏனைய மாகாண சபைகளையும் முன் கூட்டியே கலைத்துவிட்டு அவை அனைத்துக்கும் ஒரே நாளில் தேர்தல் நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பெரும்பாலும் இந்தத் தேர்தல் எதிர்வரும் ஜூன் மாதப் பிற்பகுதியில் நடத்தப்படும் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஐ)

## மைதானம் சீரமைப்பு

மட்டுவில் தெற்கு வளர்மதி சனசமூக நிலையத்தின் பாவனையிலுள்ள விளையாட்டு மைதானம் சீரமைக்கப்பட்டு வருகிறது.

நீண்ட விஸ்தீரணம் கொண்ட இம் மைதானத்தைச் சுற்றித் தற்போது மதில் கட்டப்பட்டு வருகின்றது.

இம் மைதானத்திலேயே தென்மராட்சி பிரதேச செயலகத்தின் தடகளப் போட்டி நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கதாகும். (ஒ-75)

# சந்தைக் குத்தகை நிலுவைகளை அறவிட சட்டநடவடிக்கை

யாழ்.மாநகரப் பகுதியில் உள்ள சந்தைகளைக் குத்தகைக்குப் பொறுப்பேற்று நடத்தியவர்களில் குத்தகை நிலுவைகளை இதுவரை செலுத்தாதவர்கள் மீது சட்டப்படி வழக்குத் தாக்கல் செய்யப்பட உள்ளதாக மாநகர சபையின் வருமானப் பகுதி அதிகாரி அ.குருநாதன் தெரிவித்துள்ளார்.

யாழ். மாநகரப் பகுதியில் அமைந்துள்ள சந்தைகளை 2003ஆம் ஆண்டுக்கு முன்னர் குத்தகைக்கு எடுத்து நடத்தியவர்களில் சிலர் குத்தகைத் தொகையை முழுவதுமாகச் செலுத்தி முடிக்கவில்லை. இவ்வாறு குத்தகைத் தொகையில் நிலுவை வைத்துள்ளவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்வதற்கு மாநகர சபையினரால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எனவே, இதுவரையும் நிலுவைகளைக் கட்டத்தவறியோர் உடன் செலுத்தி வீண் அசௌகரியங்களைத் தவிர்த்துக்கொள்ளுமாறு அந்த அதிகாரி கேட்டுள்ளார். (ஒ-ரி)

# வேலையற்ற பட்டதாரிகளுக்குத் தொழில் வழங்கும் திட்டம் மே முதல் நடைமுறைக்கு

## செய்தியாளர் சந்திப்பில் நிதி அமைச்சர் தெரிவிப்பு

வேலைவாய்ப்பற்ற பட்டதாரிகளுக்கும் தொழில் வழங்கும் திட்டம் அடுத்த மாதம் முதல் நடைமுறைப படுத்தப்படவுள்ளதாக நிதி அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்தார்.

இது தொடர்பாக நேற்று புதன் கிழமை நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் அமைச்சர் மேலும் கூறியதாவது:-

வேலைவாய்ப்பற்ற பட்டதாரிகளுக்கு தொழில் வழங்கும் திட்டம் தொடர்பான அமைச்சரவைப் பத்திரத்துக்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது.

இதற்கமைய வேலைவாய்ப்பற்ற பட்டதாரிகளும் முகாமைத்துவ பயிலுநர்களாக சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

அவர்களுக்கு இரண்டு ஆண்டு காலம் பயிற்சி அளிக்கப்படும்.

இந்தக் காலப்பகுதியில் 6 ஆயிரம் ரூபா மாதாந்தக் கொடுப்பனவும் பெற்றுக் கொடுக்கப்படும்.

சம்பந்தப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் பத்திரிகைகளில் வெளியாகும். நாட்டில் 27 ஆயிரம் பட்டதாரிகளுக்கு தொழில்வாய்ப்பு இல்லை. இவர்களின் பிரச்சினைகளைத் தீர்க்கப்போவதாக அளித்த தேர்தல் உறுதி மொழியை நிறைவேற்றும் வகையில் இத்திட்டம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது. இப்படி அமைச்சர் தெரிவித்தார். (எ-9)

# பொலிஸ் உளவுப்பிரிவு பலப்படுத்தப்படும்

## பொலீஸ்மா அதிபர் தெரிவிப்பு

கொழும்பு,ஏப்.29

பொலீஸ் திணைக்களத்தின் கீழ் இயங்கும் உளவுப் பிரிவுகளைப் பலப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட விருப்பதாக பொலீஸ்மா அதிபர் இந்திரா டீ சில்வா தெவித்துள்ளார். இது விடயமாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அதிகரித்து வரும் குற்றச் செயல்களைத்தடுக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. பொதுமக்களிடம் இருந்து தகவல்களைப் பெறுவதற்கான விஷேட செயற்றிட்டம் ஒன்று நடைமுறைப் படுத்தப்படவுள்ளது. பொலீஸ் திணைக்கள உளவுப்பிரிவுகளுக்குப பொறுப்பாகத் தனியான பிரதிப்பொலீஸ்மா அதிபர் ஒருவர் நியமிக்கப்படவுள்ளார்.

- என்றார். (எ-9)

# கல்வியியற் கல்லூரி ஆங்கிலக் கற்கை தெரிவானோர் விவரம் வெளியாகியது

## விரிவுரைகள் அடுத்த மாதம் ஆரம்பம் என அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.29

யாழ்.தேசியக் கல்வியியற் கல்லூரியில் 2004 ஆம் ஆண்டு ஆங்கில பாட கற்கை நெறியைத் தொடர்வதற்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ள மாணவர்களின் விவரம் நேற்று வெளியாகியது.

இவர்களுக்கான கற்கை நெறி எதிர்வரும் மே மாதம் 16 ஆம் திகதி ஆரம்பமாகுமென கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி தி.கமலநாதன் அறிவித்துள்ளார்.

மாணவர் விவரம் வருமாறு:-

எம்.கலைவாணி (புதிய செம்மணி, நல்லூர்), எஸ்.ஞானேஸ்வரி (கருடா வில்), எஸ்.பிருந்தா (பருத்தித்துறை), எஸ்.சனகன்(ஓட்டுமடம் வீதி, யாழ்), சீ.ஏ.யசோதரா (ஏழாலை தெற்கு), என்.மயூரன்(மீசாலை வடக்கு), பி.அஜந்தினி(யாழ்.கொட்டடி), எஸ்.கார்த்திகா(வட்டுகிழக்கு), எஸ்.ஆரபி (கொக்குவில் மேற்கு), ஏ.தர்சினி (திருநகர், கிளிநொச்சி), ரி.ரேணுகா (சுராவத்தை), வி.அரவிந்தன் (நுணாவில் கிழக்கு), ஜே.ஏ.எம்.குரூஸ் (8 ஆம் வட்டாரம், பேசாலை), ஜே.ஏ.ஜெமியசாந்தி (சுண்டுக்குளி), எஸ்.ஆரணி (சங்கரத்தை), பி.கீதாஞ்சலி (சாவகச்சேரி), ஏ.குகதர்சினி (தர்மபுரம்), வி.மகேந்திரன் (உருத்திரபுரம்), எம்.துஷிபன் (யோகபுரம்), எவ்.விஜயா (யாழ். கொய்யாத்தோட்டம்), எஸ்.சுப மதி (கொக்குவில்), பி.பிரசாத் (தெல்லிப்பழை), எம்.சுதர்ஷினி (விழிசிட்டி), பி.ஜெனொற்றாஜ் (உயிலங்குளம்), எஸ்.சுபாஜினி (கந்தரோடை), எஸ்.ரோகினி (யாழ்.ஓடைலேன்), ரி.கிரிஷா (பிறவுண் வீதி, யாழ்.), கே.துஷ்யந்தி (சுண்டுக்குளி), எஸ்.மைத்திரேவி (வண்ணார் பண்ணை), ஜி.ஜனனீதா, (புலோலிகிழக்கு), ஆர்.பிரதீபா (கட்டபிராய்), எஸ்.அருள்மணி (திருநெல்வேலி), வி.தர்மினி(மானிப்பாய்). (எ-8)

# ஜி.சீ.ஈ.உயர்தர பரீட்சைக்கான காகிதாதிகள் வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம்,ஏப்.29

அடுத்த மாதம் 6 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்கான காகிதாதிகள் கடந்த திங்கட்கிழமை யாழ். எடுத்து வரப்பட்டுள்ளன.

இதேவேளை - உயர்தரப் பரீட்சைக்கான முன் ஆயத்த வேலைகள் யாவும் துரிதகதியில் நடைபெற்று வருகின்றன.

அடுத்த மாதம் 3 ஆம் திகதியளவில் பரீட்சைக்கான வினாத்தாள்களில் ஒரு தொகுதி யாழ். எடுத்து வரப்படவுள்ளது.

ஏப்ரல் மாதம் நடைபெறவிருந்த ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை நாடாளுமன்றத் தேர்தலையடுத்து ஒத்தி வைக்கப்பட்டிருந்தது தெரிந்ததே. (எ-ரி)

# மாகாணசபைத் தேர்தலிலும் ஹெல உறுமய போட்டி?

வடமேல் மாகாணசபைத் தேர்தல முடிவுற்ற நிலையில், எஞ்சியுள்ள மாகாணசபைகளுக்கான தேர்தலில் தாங்கள் போட்டியிடுவதா என்பது குறித்து ஜாதிக ஹெல உறுமயவினர் ஆராய்ந்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாகாண சபைத் தேர்தலில் ஜாதிக ஹெல உறுமய சார்பாக பிக்குகளல்லாத வேட்பாளர்களை நிறுத்துவது குறித்தே முதலில் ஆராயப்படுவதாகவும் -

ஆனால், கட்சியின் பிக்குகளல்லாத உறுப்பினர்கள் ஜாதிக ஹெல உறுமய சார்பாகப் போட்டியிடுவது கடும் விமர்சனங்களுக்குள்ளானதால் பிக்குகளையே இத்தேர்தலிலும் நிறுத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டதாகவும் -

ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

இதன்படி, எதிர்வரும் வாரத்துக்குள் தாம் போட்டியிடுவது குறித்தும் போட்டியிடும் வேட்பாளர்கள் விவரம் குறித்தும் ஹெல உறுமய அறிவிக்கவுள்ளது.

ஜாதிக ஹெல உறுமய இம்முறை மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட வேண்டும் எனப் பலர் கோரிவருதை அடுத்தே அத்தேர்தலில் போட்டியிடும் முயற்சி ஆரம்பிக்கப்பட்டதாகக் ஹெல உறுமய தெரிவித்துள்ளது.


## தேவை

திருமண சேவை நிறுவனமொன்றிற்கு அறை ஒன்று வாடகைக்குத் தேவை. யாழ்நகரை அண்டிய பகுதிகளில் உகந்தது.

தொடர்பு:
மெட்டி ஒலி திருமண சேவை
S.பிறேமன் 0777 - 283795
(31444)(36)

## விற்பனைக்கு

புதிய பனசொனிக் (ஜப்பான்) VCD உடன்கூடிய CD செட் (7000W) விற்பனைக்குண்டு.

ஹரி வீடியோ
70.இராமநாதன் வீதி, கலட்டி.
மிலேனியம் ரெஸ்ரோரன்ட் அருகில்.
(மிலேனியம் கட்டடத் தொகுதி).
(31436)(40)

கொம்பியூட்டர் பொலிமர் இறபர் முத்திரை
இலவசம்
ஆச்சரியமா?
ஏப்ரல் 5 முதல் மே 5 வரை
மேலதிக விவரங்களுக்கு:
யசோ,
35, கன்வாதிட்டி வீதி,
(30331)(18) யாழ்ப்பாணம்.

லக்சுமி இணுவில்
சிம்பு, த்ரிஷா நடித்த அலை

மே 6 முதல் இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு

சூரியா (8 வேடங்கள்), ஜோதிகா மிகப் பிரமாண்டமான தயாரிப்பில்
பேரழகன்
தினசரி 4 காட்சிகள் (ரீல்ஸ்)
(31383)(12)

சங்கானை
M.G.R.(இருவேடம்)
லதா, மஞ்சுளா, நம்பியார் நடித்த
உலகம் சுற்றும் வாலிபன் (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 இற்கு (பு.நே)
DO NOT DISTURB
(C34420)(12)

நாகம்ஸ் சுன்னாகம்
ரஜனி, மீனா நடித்த முத்து
அடுத்த அதிரடி வெளியீடாக
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதினத்தில்

விக்ரம், ஜோதிகா, கபாலி, வடிவேல் நடித்த
அருள்
காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00, 9.30 (பு.நே.)
(C34180)(12)

ராஜா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு

விஜய், த்ரிஷா, பிரகாஷ்ராஜ் நடித்த
கில்லி
10.30.,2.30, 6.30, 9.30 (பு.நே.)
(ரீல்ஸ்)
ரிக்கெற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.
(C/34517)(22)


## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் ஆசிரியை
திருமதி ம.இ.உருத்திரகுமாரன்
அவர்களின் பாசமிகு தந்தையார்
**சாமிநாதபிள்ளை மார்சலீன்பிள்ளை**
(செல்வராசா மாஸ்டர் – இளைப்பாறிய ஆசிரியர். வல்வெட்டித்துறை)

அவர்கள் 24.04.2004 அன்று காலமானார். அன்னாரின் ஆன்ம சாந்திக்காக செபிப்பதோடு, அவர்களின் குடும்பத்தவருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஆசிரியர் சங்கம், யா/ புனித பத்திரிசியார் கல்லூரி,
(31441)(12-36) யாழ்ப்பாணம்.

## கண்ணீர் அஞ்சலி

**செ.அன்னலிங்கம்**

முன்னாள் தொழில்நுட்ப உத்தியோகத்தரும் (இலங்கை உருக்குக் கூட்டுத்தாபனம்), மல்லாகம் கோட்டைக்காடு சாளம்பை முருகன் ஆலய பரிபாலனசபை உறுப்பினரும் ஆகிய செ.அன்னலிங்கம் 28.04.2004 அன்று காலமானார்.

அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு, அவர்களின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கோட்டைக்காடு, ஆலய பரிபாலனசபையும்,
மல்லாகம். (31435)(38-36-12) இந்து இளைஞர் தொண்டர் சபையும்.

## கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலகத்தில் சமுர்த்தி அலுவலராகக் கடமையாற்றும் நெகஜீவன் ஜேக்கப் அவர்களின் அன்புத் தந்தையார்
**எஸ்.ஐ.ஜேக்கப்** அவர்கள்

கடந்த 26.04.2004 இல் காலமானார். அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அமரரின் ஆத்ம சாந்திக்காகவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிச் சங்கம்,
பிரதேச செயலகம், பிரதேச செயலரும்,
நல்லூர். (31437)(38-12-36) அனைத்து உத்தியோகத்தர்களும்.

# மரண அறிவித்தல்கள்

## பொன்னையா தேவராசா



சாவகச்சேரி சிவன்கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிபபிடமாகவும் கொண்ட பொன்னையா தேவராசா, 26.04.2004 திங்கட்கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா - யோகம்மாவின் அன்பு மகனும் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் நிஷாந்தன், நிதர்சன், நிலாஜினி, நிதாசனா ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற ஜெயராசா (சாமி), துரைராசா (கனடா), விமலாதேவி (வவுனியா), இந்திரராஜா (கனடா), இந்திராதேவி (ஜேர்மனி), சறோஜினிதேவி (ஆசிரியை - கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று (29.04.2004) வியாழக்கிழமை நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 2 மணிக்கு தகனக் கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சிவன்கோயில் வீதி,*
*சாவகச்சேரி.* (31438)(40-36-12)
தகவல்: குடும்பத்தினர்.

## திருமதி சிவாஜினி செல்லத்துரை
### (விவாகப்பதிவாளர் திருநெல்வேலி)

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவாஜினி செல்லத்துரை நேற்று (28.04.2004) புதன்கிழமை காலமானார்.

அன்னார் ஆறுமுகம் செல்லத்துரையின் (சமாதான நீதிவான்) அன்பு மனைவியும் மதனின் (தரம் 11 மாணவன், யாழ் இந்துக் கல்லூரி) அன்புத் தாயாரும் ஆவார்.

அனனாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*திருநெல்வேலி வடக்கு,*
*திருநெல்வேலி.* (31442)(40-36-13)
தகவல்: கணவர், மகன்.

## திருமதி செல்வராணி வல்லிபுரம்



அல்வாய் மாதங்கோயிலடியைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் மத்தியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி செல்வராணி வல்லிபுரம் அவர்கள் 27.04.2004 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகுப்பிள்ளை - வள்ளிப்பிள்ளை அவர்களின் அன்பு மகளும் ராசம்மா, பவளம்மா ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற சின்னத்தம்பி இராசம்மா அவர்களின் மைத்துனியும் சரோஜினிதேவி, சிறிஸ்கந்தராசா, சத்தியதேவி, காந்தரூபன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற தவபாலன் மற்றும் கருணாகரன், அமுர்தலிங்கம், புவனேஸ்வரி, சிவபாதசுந்தரம், கமலாம்பிகை, நாகரத்தினம் (பிரான்ஸ்), தனலட்சுமி (பிரான்ஸ்), சறோஜினிதேவி, பஞ்சலிங்கம், கௌசலா (பிரான்ஸ்), டில்லியம்மா (இந்தியா) அவர்களின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று (29.04.2004) வியாழக்கிழமை பி.ப 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கோப்பாய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும.

*ஆசாரி லேன்,*
*கோப்பாய் மத்தி.*
*கோப்பாய்.*
தகவல்: - குடும்பத்தினர்.
(31443)(40-12-36)

## திருமதி சின்னத்துரை சரஸ்வதி

பிரான்பற்று, பண்டத்தரிப்பைச் சேர்ந்த திருமதி சின்னத்துரை சரஸ்வதி அவர்கள் நேற்று (28.04.2004) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி சின்னத்துரையின் அன்பு மனைவியும் மகேந்திரன் (வங்கிச் சேவைகள் முகாமையாளர் பண்டத்தரிப்பு ப.நோ.கூ.சங்கம்), கந்தசாமி (இத்தாலி), காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம், விமலாதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும் நாகநந்தினி, இரத்தினசிங்கம், காலஞ்சென்றவர்களான கந்தசாமி, வசந்தி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (29.04.2004) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சண்டிலிப்பாய் வீதி,*
*பிரான்பற்று,*
*பண்டத்தரிப்பு.*
(31445)(36-12)
தகவல்:
சி.மகேந்திரன் (மகன்)
(வங்கிச் சேவைகள் முகாமையாளர்,
பண்டத்தரிப்பு பல நோ.கூ.சங்கம்)

# மேதினத்தன்று வீரசிங்கம் மண்டபத்தில் பொதுக்கூட்டமும், கலை நிகழ்வுகளும்

## நேற்றைய கலந்துரையாடலில் தீர்மானம்

யாழ்ப்பாணம்,ஏப்.29

எதிர்வரும் மேதினத்தன்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் பிரமாண்டமான மேதினக் கூட்டத்தையும், கலை நிகழ்ச்சிகளையும் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கேட்போர் கூடத்தில் நேற்று மாலை 3 மணிக்கு நடைபெற்ற கூட்டத்தில் இந்தத் தீர்மானம் நிறை வேற்றப்பட்டது.

தேசிய எழுச்சிப் பேரவையின் ஊடகப் பேச்சாளர் ப.கனகலிங்கம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் யாழ் மாவட்டத்தில் உள்ள தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள், நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜி.ஜி கஜேந்திரகுமார், எஸ்.கஜேந்திரன், எம்.கே. சிவாஜிலிங்கம், சுரேஷ் பிரேமச்சந்திரன், எஸ்.சிவனேசன், திருமதி பத்மினி சிதம்பர நாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இம்முறை மேதினப் பேரணியை நடத்தாமல் வீரசிங்கம் மண்டபத்தில் பொதுக்கூட்டத்தையும் கலை நிகழ்வையும் மட்டும் நடத்துவது என்றும் -

இந்த மேதினப் பொதுக்கூட்டம் மாலை 3 மணிமுதல் இரவு 7 மணி வரை நடைபெறும் என்றும் - தெரிவிக்கப்பட்டது. இதற்கான ஏற்பாடுகளை ஏற்பாட்டாளர்கள் மேற்கொண்டுள்ளனர்.

இந்த மேதினப் பொதுக் கூட்டத்தில் சகல தரப்பினரையும் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (எ-8-6-12)

### போதைப்பொருள் விற்பனையாளர் கைது !

பொலீஸாரால் தேடப்பட்டு வந்த பிரபல போதைப்பொருள் விற்பனையாளரான 'குடு டிக்சன்' என்ற நபர் நேற்று முன்தினம் கடுவெல பொலீஸாரால் கைது செய்யப்பட்டார். இவரிடமிருந்து கைத்துப்பாக்கி ஒன்றும் 7 துப்பாக்கிச் சன்னங்களும் பொலீஸாரால் கைப்பற்றப்பட்டன.

நேற்றுமுன்தினம் காலை கடுவெல மத்திய பஸ் நிலையத்திற்கு முன்பாக இவர் நின்று கொண்டிருக்கிறார் எனப் பொலீஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்தே பொலீஸாரால் சுற்றிவளைக்கப்பட்டு இவர் கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்ட நபர் மூன்று கொலை வழக்குகளிலும் சம்பந்தப்பட்டவர் என்று கடுவெல பொலீஸார் தெரிவித்தனர். (க)

### கந்தப்பொலவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்திகள் தெரிவித்தன.

நகருக்கு அருகில் உள்ள மற்றொரு தோட்டமான பார்க் எஸ்டேட்டில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் விமல் என்ற தமிழர் உயிரிழந்தார்; மகேந்திரன் என்ற வலிபர் படுகாயமடைந்தார்; மேலும் பலர் காயமுற்று இருக்கின்றனர் எனத் தெரிகின்றது.

ஆங்காங்கே வன்முறைகள் இடம பெற்ற வண்ணம் இருப்பதாக நேற்று முன்னிரவில் கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

தமிழரின் பல இல்லங்கள், கடைகள் கல்வீச்சுக்கு இலக்காகின.

எனினும், தமிழர்கள் உயிருக்கு அஞ்சி வீடுகளுக்குள்ளும் பாதுகாப்பான இடங்களிலும் தஞ்சம் புகுந்து முடங்கிக் கிடப்பதால் அவர்களிடமிருந்து தகவல்களை உடனடியாகப் பெற்றுக்கொள்வது சிரமமாக இருந்தது.

நேற்று மாலையில் கலவரம் வெடிதத சமயத்தில் அப்பகுதியைச் சேர்ந்த அமைச்சர் ஒருவர் அங்கு காணப்பட்டார் எனத் தகவல் தெரிவித்தது.

இந்தச் சம்பவம் குறித்து நுவரெலியா மாவட்ட எம்.பியும், மலையக மக்கள் முன்னணித் தலைவரும், முன்னாள் அமைச்சருமான பெ.சந்திரசேகரன் பொலீஸ் மா அதிபருடன் தொடர்பு கொண்டார். நிலைமைகளைக் கட்டுபடுத்த நியாயமான முறையில் நடவடிக்கை எடுக்குமாறு அவர் பொலீஸ மா அதிபரை வற்புறுத்தினார் எனக் கூறப்பட்டது. (க)

### ஹெல்கிஸன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமாதான முயற்சிகள் தொடர்பான அனுசரணை பணியை ஆற்றவும், சமாதான முயற்சிகளை மீள ஆரம்பிக்கவும் நடவடிக்கை எடுக்குமாறு நோர்வேத் தரப்புக்கு இலங்கை அரசு விடுத்த அழைப்புப் பற்றிய தகவல் விடுதலைப் புலிகளின் தலைமைக்கு உத்தியோகபூர்வமாகத் தெரியப்படுத்தப்படும் என ஒரு தகவல் தெரிவித்தது.

இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் இந்த அழைப்புப் பற்றிய தகவலை புலிகளின் தலைமைக்கு உத்தியோகபூர்வமாகத் தெரியப்படுத்திய பின்னர் அது தொடர்பான புலிகளின் நிலைபாட்டை நோர்வே அறிய முயலும் என்றும் -

புலிகளின் பதில் கிடைத்த பின்பு அனுசரணைப்பணி மற்றும் சமாதான முயற்சிகள் குறித்து நோர்வே தீர்மானிக்கும் என்றும் - கூறப்பட்டது.(ஐ-க)

### வெசாக்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைக்கப்பட்டிருக்கும் 269 பேருக்கும் பொதுமன்னிப்பு வழங்க ஜனாதிபதி முடிவுசெய்துள்ளார்.

மனிதாபிமான அடிப்படையில் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுளளது எனக் கூறப்பட்டது. (எ-9)

### கருணாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெறும் சாத்தியக்கூறு உள்ளது.

இவர்களைத் தேடிக் கைது செய்யும் நடவடிக்கைகளில் பொலீஸார் ஈடுபடவில்லை.

சட்டவிரோத செயல்களில் அவர்கள ஈடுபட்டார்கள் எனத் தெரியவந்தால் மட்டுமே அவர்கள் கைதுசெயயப்பட்டு சட்டத்துக்குமுன் நிறுத்தப்படுவார்கள் - என்றார் அவர்.

"இந்நிலைமையை அடுத்து விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் எவையும் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா?" என வினவியபோது -

"பொலீஸார் வழமையான பாதுகாப்பு நடவடிக்கைகளிலேயே ஈடுபட்டுள்ளனர். விசேட பாதுகாப்பு மற்றும் சுற்றிவளைப்புகள் மேற்கொள்வதற்கான தேவையேற்படவில்லை நிலைமை மோசமடைந்தால் அது பற்றி ஆராய்ந்து மேலதிக நடவடிக்கைகள் குறித்து முடிவெடுப்போம்" - என்று பதிலளித்தார் அவர்.

புலிகளின் பிரிவுகளுக்கு இடையில தொடர்ந்து மோதல்கள் இடம்பெறக் கூடும் என்பதால் பொலீஸாரும் விழிப புடனேயே உள்ளனர் என்றும் அவர் கூறினார். (ஐ-க)

# ஓமந்தை நோக்கிவந்த பஸ்ஸில் நகைகள்,பணம், பொருள்கள் திருட்டு!

கொழும்பு,ஏப்.29

கொழும்பிலிருந்து ஓமந்தை நோக்கி 46 பயணிகளுடன் வந்து கொண்டிருந்த தனியார் பஸ் ஒன்றை இடைமறித்த ஆயுததாரிகள் பயணிகளிடமிருந்த நகைகள், பணம், கைத்தொலைபேசிகள் என்பன உட்பட பல பெறுமதியான பொருள்களைச் சூறையாடியதுடன் அவர்களைக் கடுமையாகத் தாக்கியுமுள்ளனர்.

நேற்றுமுன்தினம் செவ்வாய் இரவு புத்தளத்துக்கு அப்பால் 7 மைல் தொலைவில் உள்ள செல்லங்கண்டல் என்னும் இடத்தில் இந்தக்கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கத்திகள் பொல்லுகள் சகிதம் 'ஹைஏஸ்' வானொன்றில் வந்த 10முதல் 15பேர்வரை அடங்கிய குழுவினர் தனியார் பயணிகள் பஸ்ஸை இடைமறித்ததாகவும்-அவர்களில் மூவர் பயணிகள் பஸ்ஸில் ஏறி அங்கிருந்த பயணிகளைத் தாக்கியதுடன், அவர்களிடம் இருந்த பணம், நகை, உட்படப் பெறுமதியான பொருள்களைக் கொள்ளை அடித்துச் சென்றதாகவும் கூறப்பட்டது.

கொள்ளைச்சம்பவம் இடம் பெற்ற இடத்திலிருந்து 1/2கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள பொலீஸ்நிலையத்திற்கு இது தொடர்பாக முறையிடச் சென்ற போது அது தமது பிரிவுக்குட்பட்ட பகுதி அல்ல எனக் கூறி பொலஸார் மறுத்துவிட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பின்னர் இது தொடர்பாக புத்தளம் பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதாகவும் கூறப்பட்டது. (எ-8-6)

# நிறுத்தப்பட்ட கல்வித் திட்டங்களை உடன் செயற்படுத்த ஜனாதிபதி உத்தரவு

கொழும்பு,ஏப்.29

கடந்த அரசினால் நிறுத்திவைக்கப்பட்டுள்ள பல கல்வித்துறை சீர்திருத்தங்களை உடனடியாக மீளவும செயற்படுத்தும்படி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உத்தரவிட்டிருக்கிறார்.

உலக வங்கியினால் வழங்கப்பட்ட சில நிதி ஆதாரங்கள், ஒன்றில் கிடப்பில் போடப்பட்டுள்ளன அல்லது பயன்படுத்தப்படாமல் இக்கின்றன என்பதை கவனித்த பின்னர் ஜனாதிபதியும் கல்வி அமைச்சருமான சந்திரிகா அதிகாரிகளுக்கு மேற்கண்டவாறு பணிப்புரை விடுத்தார்.

இந்நிதி ஆதாரங்கள் கல்வியின் தரத்தை மேம்படுத்துவதாக பெறப்பட்டவை என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

கடந்த திங்களன்று கல்வி அமைச்சின் அதிகாரிகள் பல்கலைக் கழகத் துணைவேந்தர்கள், பல் கலைக்கழக மானிய ஆணைக்குழு உறுப்பினர்கள ஆகியவர்களை ஜனாதிபதி மாளிகையில் சந்தித்த பொழுது அவர் மேற்கண்டவாறு உத்தரவிட்டார்.

நிதியாதாரங்களின் பற்றாக்குறை, தேவையான அளவில் ஆள்களை பணிக்கமர்த்தாமை போன்ற நிலைமைகளால பல்கலைக்கழகங்களின் கல்வி வளர்ச்சி பெரும் பாதிப்புக்குள்ளாகியிருப்பதாக ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சிக் காலத்தில் கல்வித் துறைக்கான நிதி ஆதாரங்கள் குறைக்கப்படமாட்டாதெனவும் ஜனாதிபதி உறுதியளித்தார்.

தேசிய மட்டத்தில் கல்வித் துறைக்கு முக்கிய இடம் கொடுக்கப்படும் என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

தகவல் தொழில்நுட்பத்துறைக்கான புதிய திட்டங்களை சமர்ப்பிக்கும்படி துணைவேந்தர்களை அவர் கேட்டுக்கொண்டார்.

பல்கலைக்கழகங்களில் நிலவும் மாணவர் தங்குமிட வசதிக் குறைவினால் பெரும் பிரச்சினைகளும் மாணவர் அமைதியின்மையும் தோன்றியிருப்பதைப் பற்றியும் இந்தக் கூட்டத்தில ஆலோசிக்கப்பட்டது.

கல்வித்துறை பிரதி அமைச்சர் தினேஷ் குணவர்த்தன, கல்வி அமைச்சின் செயலாளர் டாக்டர் தாரா டி மெல் ஆகியோரும் கூட்டத்தில் பங்குபற்றினர். (ப)

### பிக்குகளுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுதந்திர முன்னணியினர் எனப் பிரசாரம் மேற்கொள்ளப்படுகிறது. உண்மையிலேயே இந்தச்சம்பவங்களுக்கும் எமக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்பதை நாட்டு மக்களுக்குத் தெரிவிக்கின்றோம்.

விடுதலைப் புலிகளின் சார்பாக நாடாளுமன்றுக்குத் தெரிவு செய்யப்பட்ட தமிழ்க்கூட்டமைப்பின் எம்.பிக்களுடன் கூட்டுச்சேர்ந்து நாட்டுக்குத் துரோகமிழைத்த ஜாதிக ஹெல உறுமயவின் செயற்பாடுகள் பற்றி நாட்டு மக்கள் நன்கு உணர்ந்துள்ளனர். இவர்களின் செயற்பாடுகள் காரணமாக பௌத்த சாசனத்துக்கும் சிங்கள மக்களுக்கும் ஏற்பட்டுள்ள அபகீர்த்தியை இல்லாதொழிக்கும் கடமைப்பாடு ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்புக்கு உண்டு.

தற்போது இடம்பெறும் உண்மை நிலைவரம் பற்றி மகாநாயக்கர்களும், பொறுப்பு வாய்ந்தவர்களும் ஆராய்ந்து தமது கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டும் என்பதே எமது கட்சியின் கோரிக்கையாகும்.

எமக்கெதிராக மேற்கொள்ளப்படும விசமப்பிரசாரங்கள் திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுகின்றன. இதற்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழும் காலம் வெகுதூரத்தில் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-க)

### அமைதி நிலவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இங்குள்ள குடும்பங்கள் பயனடைகின்றன. இலங்கை அரசும் அமைதிப் பேச்சுக்குத் திரும்பக் கூடியதாய இருக்கிறது என்று அமெரிக்கத்தூதுவர் கூறினார்.

அமெரிக்க இராணுவ மருத்துவ நிபுணர் குழுவொன்று தற்பொழுது யாழ்ப்பாணத்தில் மனிதாபிமான சிகிச்சை இயக்கம் ஒன்றை நடத்தி வருகின்றது.

20 நிபுணர்கள் அடங்கியுள்ள இந்தக் குழுவில் அமெரிக்க விமானப் படை, இராணுவம் மற்றும் கடற் படைகளைச் சேர்ந்தவர்கள் உள்ளனர்.

கண்ணி வெடிகள், விபத்து, பிறவிக் குறைபாடுகளினால் பாதிப்புக் குள்ளாகியுள்ள நோயாளிகளுக்கு யாழ்பாணம் ஆஸ்பத்திரியில் இலங்கை மருத்துவ நிபுணர்களுடன் இணைந்து அறுவை மற்றும் முக்கிய சிகிச்சைகளில் இவர்கள் ஈடுபட்டுவருகிறார்கள்.

மருத்துவப்பொருள்கள் அடங்கிய பல பொதிகளும் யாழ்ப்பாண ஆஸ்பததிரிக்கு அமெரிக்கத் தூதரகத்தால் வழங்கப்பட்டுள்ளன.

யாழ். ஆஸ்பத்திரிப் பணிப்பாளர் மற்றும் மருத்துவர்களுடனும் தூதர் கலந்துரையாடினார்.

யாழ் நூலகத்துக்கு தூதர் சென்று அங்குள்ள நிலைமைகளைப் பார்வையிட்டார். (ப-7)

### ஜே.வி.பியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலாசார தேசிய விழுமிய அமைசசராக விஜித ஹேரத்தும், பிரதியமைச்சராக சமந்த வித்தியரத்னவும் பதவியேற்றார்கள்.

இப்பதவியேற்பு நிகழ்வின்போது பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் செயலாளர் சுசில் பிரேமஜயந்த, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன மற்றும் ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர்களான விமல் வீரவன்ஸ, நந்தன குணதிலக உள்ளிட்ட பல முக்கியஸ்தர்கள கலந்துகொண்டனர். (எ-8)


**நந்தன் அக்கடமி**

கொடிகாமம் சாவகச்சேரி

**A/L 2006**

| | |
|---|---|
| தமிழ் | : M.S. அமரசிவம் |
| இந்துநாகரிகம் | } P.ஜோதீஸ்வரன் |
| இந்துசமயம் | } M.செல்வா |
| பொருளியல் | : M.விக்கி |
| புவியியல் | : S.சிவகுமார் |
| வரலாறு | : V.விஜயரூபன் |
| நாடகம்/அரங்கு | : V விக்கி |

ஆரம்பம் : 30.04.2004 2.00 மணி

O/L Day Class

கணிதம் T.மயூரன்.

(C/34696)(40)



அம்மா,

31ம் நாளும் வந்துவிட்டது

ஏழேழு ஜென்மங்களுக்கும், நாங்களே

உங்கள் பிள்ளைகள் என்பீர்கள்

எப்ப அம்மா அந்த வரம்

– காத்திருக்கும் உங்கள் கண்மணிகள்

எங்கள் அன்புக்குரியவர்களே,

இன்று 29.04.2004 காலை 10.00 மணியளவில் எங்கள்

இல்லத்தில் இடம் பெறும் எங்கள் அம்மா

திருமதி நகுலேஸ்வரி நாகலிங்கம் அவர்களின்

நினைவாராதனை நிகழ்வுகளிலும், மதிய உணவிலும்

கலந்திட உங்களை வேண்டுகின்றோம்.



பேராசிரியர் என். சண்முகலிங்கன் &

திருமதி கௌரி சண்முகலிங்கன்

வைத்தியகலாநிதி நாகேஸ்வரி நாகலிங்கம்

கந்தன் அருள்

அம்பலவாணர் பாதை

திருநெல்வேலி



**விடுமுறைக்கால வகுப்பு**

சடமும் கதிர்ப்பும்

By.M. கருணாநிதி B.Sc. (Spl)

MON. → FRI. - 2.00 - 3.00

ஆரம்பம்: 03.05.2004

**NEW SCIENCE COLLEGE JAFFNA**

★ விடுமுறைக்காலத்தில் அலகு பூர்த்தியாக்கப்படும்.

★ நேரம் பற்றிய இறுதிமுடிவு வகுப்பில் தீர்மானிக்கப்படும். (31440)(38)



**விக்னா**

**கல்வி நிறுவனம்**

**A/L 2006 கலைப்பிரிவு**

| பிரிவு 2 | ஆரம்பம்: 02.05.2004 - 8மணி. |
|---|---|
| ECO. | - திரு.உதயன் |
| TAM. | - திரு.குழந்தை (பிரிவு1) |
| TAM. | - திரு.லிங்கம் (பிரிவு2) |
| LOG. | - திரு.சயந்தன் |
| H/C. | - திரு.பத்மராஜா |
| GEO. | - திரு.பாபு |
| HIN. | - திரு.N.T.தரன் |
| HIST. | - திரு.பத்மன் |
| P/SCIE. | - திரு.ஸ்ரீரங்கநாத் |
| CHRI. | - திரு.வசந்தன் |
| DRAMA | - திரு.மதி |

(C-34681)(12)


## மரண அறிவித்தல்

### மார்க்கண்டு சாம்பசிவம்



நாரந்தனையைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு சாம்பசிவம் சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி மார்க்கண்டு - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி இராசரத்தினம்-கமலாம்பிகை தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற அம்பாலிகையின் அன்புக் கணவரும் பிரபாலினி, பிரபாலன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் மோகனராஜாவின் அன்பு மாமனாரும் எழுபங்கநாச்சியார், காலஞ்சென்ற விநாயகமூர்த்தி, மகாதேவன், தளையசிங்கம் முதலியார், நகுலாம்பிகை, சற்குணம், சிவயோகம், சிபபாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.04.2004) வியாழக்கிழமை 4 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நாரந்தனை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுகின்றோம்.

*சிவகிரி,*
*நாரந்தனை மத்தி,*
*ஊகாவற்றுறை.* (31446)(38-12-14)

தகவல்:
த.கபிலநாதன் - ஆசிரியர்
(பேறாமகன்).

இப்பத்திரிகை நிய, உதயன் பப்ளிகேசன் (பிறைவேட) நிறுவனததனரால் யாழ்ப்பாணம் கஸதூரியார் வீதி. 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29.04.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.